Join / Telegram : @Tamil_Books_Library

என். சொக்கன்


# CIA

## அடாவடிக் கோட்டை

CENTRAL INTELLIGENCE AGENCY
UNITED STATES OF AMERICA

அமெரிக்க உளவுத்துறையின்
விறுவிறுப்பான வரலாறு

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை CIA/சிஐஏ-வின் வரலாறு

என். சொக்கன்

Join / Telegram : @Tamil_Books_Library

என். சொக்கன் எழுதிய விறுவிறுப்பான உளவுத்துறை வரலாற்று நூல்கள்:

1. CIA: அடாவடிக் கோட்டை
2. மொசாட்
3. FBI
4. KGB: அடி அல்லது அழி

Join / Telegram : @Tamil_Books_Library

# உள்ளே...

*1. அடி*
*2. அதிபுத்திசாலிகளின் படை*
*3. கோட்டுக்கு வெளியே*
*4. குழம்பிய குட்டைகள், கொழுத்த மீன்கள்*
*5. அசட்டு உளவாளிகள்*
*6. உலகெங்கும் கண்கள்*
*7. ரெளடி*
*8. ரகசியம், பரம ரகசியம்*
*9. புதிய கூட்டணி*
*10. சறுக்கல்*
*11. தீவிர(ஷ)வாதம்*
*12. பத்திரமில்லை*
*13. உளவுப் பெண்கள்*
*14. கண்ணாடி பிம்பம்*
*பின்னிணைப்பு: நன்றி & சான்றுகள்*

Join / Telegram : @Tamil_Books_Library

## சமர்ப்பணம்

அன்புடன், தோழர் மருதனுக்கு

Join / Telegram : @Tamil_Books_Library

## 1. அடி

அதிகாலை மூன்றரை மணி.

'பேய்கள்கூட உறங்கும் நேரம்' என்று நம் ஊரில் சொல்வார்கள். அந்த நேரத்தில்தான், ஒரு விநோதமான விஷயத்தைக் கண்டுகொண்டது அமெரிக்கக் கடற்படை.

நம்முடைய எல்லைக்குள், நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று உலவிக்கொண்டிருக்கிறது என்று பேர்ல் துறைமுகத்தின் (Pearl Harbour) ரோந்துப்படை செய்தி அனுப்பியது. உடனடியாக, பெரிய அதிகாரிகள் தூக்கம் கலைந்து விழித்துக்கொண்டார்கள்.

இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த நேரம் அது. அமெரிக்கா இந்தப் போரில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், எந்த நேரத்தில் யார் யாரைத் தாக்குவார்கள் என்பது நிச்சயமாகத் தெரியாததால், எப்போதும் விழிப்போடு இருக்கவேண்டியிருந்தது.

ஆகவே, திடுதிப்பென்று இப்படி ஒரு நீர்மூழ்கிக் கப்பல் தென்பட்டதும், அவர்கள் உஷாராகிவிட்டார்கள். எந்த நாட்டுக் கப்பல், அதில் என்னென்ன ஆயுதங்கள் மறைந்திருக்கின்றன, ஒரு கப்பல்தானா, அல்லது இன்னும் நிறைய கோஷ்டி சேர்த்துக்கொண்டு வந்திருக்கிறார்களா?

இன்னும் இருட்டு கலையாத அதிகாலை நேரத்தில், அவர்கள் ரகசியமாகப் படை திரட்டினார்கள். எப்படியாவது அந்தக் கப்பலைக் கண்டுபிடித்தாகவேண்டும். அப்போதுதான், இந்த மர்மத்தின் முடிச்சுகளை அவிழ்க்கமுடியும்.

எல்லோரும் பதற்றத்தின் உச்சியில் இருந்தார்கள். கடலினுள், தரையில், வானத்தில் என்று எல்லா திசைகளிலிருந்தும் எதிரி நம்மைச் சூழ்ந்துவிட்டான் என்று புரிவதற்கு அவர்களுக்கு நான்கு மணி நேரமானது.

Join / Telegram : @Tamil_Books_Library

அந்தக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, எதிரிப்படை தனது திடீர்த் தாக்குதலைத் தொடங்கியது. எங்கிருந்து வந்தார்கள் என்றே தெரியாதபடி ஏகப்பட்ட போர் விமானங்கள் பேர்ல் துறைமுகத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டு தாக்கத் தொடங்கின.

அமெரிக்கர்கள் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்காத தாக்குதல் அது. அந்நாட்டுக் கடற்படையின் மொத்த வலிமையும், பேர்ல் துறைமுகத்தில்தான் மையம் கொண்டிருந்தது. ஆனால், அங்கே இப்படி ஒரு தாக்குதல் நடக்கும் என்று அவர்கள் நினைத்திருக்கவில்லை.

இதைவிடப் பெரிய ஆச்சர்யம், அவர்களைத் தாக்கிய அந்த 'எதிரி', ஜப்பான்!

உலக வரைபடத்தைப் பார்த்தால், அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் தூரம் அதிகமிருப்பதுபோல் தெரியும். ஆனால், பூமி உருண்டையில் அவை இரண்டும் அருகருகே உள்ள நாடுகள்தான். ஜப்பானில் ரகசியமாகக் கள்ளத்தோணி ஏறினால், பசி்ஃபிக் பெருங்கடலில் யாருடைய தடையும் இல்லாமல் நேராக அமெரிக்க எல்லையைத் தொட்டுவிடலாம்.

ஜப்பான் அதைதான் செய்தது. ஆறு விமானம்தாங்கிக் கப்பல்கள், அவற்றில் நூற்றுக்கணக்கான விமானங்கள், போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிகள் என்று கோஷ்டி சேர்த்துக்கொண்டு கிளம்பியிருந்தார்கள். மூன்றாம் மனிதருக்குத் தெரியாதபடி, பேர்ல் துறைமுகத்துக்குச் சற்று தொலைவில் மையம் கொண்டார்கள், ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் தாக்குதலைத் தொடங்கிவிட்டார்கள்.

பேர்ல் துறைமுகத் தாக்குதலுக்கான அடிப்படைக் காரணம், குட்டியூண்டு தேசமான ஜப்பானுக்கு எப்படி அமெரிக்காவையே தாக்கும் அளவுக்கு தைரியம் வந்தது, இந்தத் தாக்குதலின் பின்விளைவுகள் எல்லாம் இந்தப் புத்தகத்தின் நோக்கத்துக்கு அப்பாற்பட்ட சமாசாரங்கள். இப்போதைக்கு முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய

Join / Telegram : @Tamil_Books_Library

விஷயம், சற்றும் எதிர்பாராதவிதமாக ஜப்பான் அமெரிக்காவை அடித்துவிட்டது.

அடி என்றால், சாதாரண அடி இல்லை. மரண அடி.

இப்படி ஒரு தாக்குதலுக்குக் கொஞ்சமும் தயாராக இல்லாமல், ஹவாயில் ஹாயாக ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த அமெரிக்க ராணுவத்தினர், பொதுமக்கள்மீது ஜப்பானிய விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கத் தொடங்கியிருந்தன. இன்னொருபக்கம், அமெரிக்கப் போர்க் கப்பல்கள், விமானங்களை அடித்து வீழ்த்தினார்கள்.

அமெரிக்கா சுதாரித்துக்கொண்டு திருப்பித் தாக்குவதற்குள், அவர்களுக்கு ஏகப்பட்ட சேதத்தை உருவாக்கிவிட்டது ஜப்பானியப் படை. அந்த டிசம்பர் 7, 1941 அமெரிக்க சரித்திரத்தில் மறக்கமுடியாத அவமானமாகிவிட்டது.

மிஞ்சிப்போனால் பத்து மணி நேரம், அமெரிக்கர்கள் மிரண்டுவிட்டார்கள். கொஞ்சம் வேகமாக உலக உருண்டையைத் திருப்பினால் கண்ணில் படாமல் மறைந்துவிடக்கூடிய மூட்டைப்பூச்சி தேசம், அமெரிக்காமீது இப்படி ஒரு தாக்குதலை வெற்றிகரமாக நடத்திமுடித்துவிட்டது என்பதை யாராலும் நம்பக்கூட முடியவில்லை.

அதன்பிறகு அமெரிக்கா உலகப்போரில் குதித்தது, ஜப்பான்மீது அணுகுண்டு வீசி நாசப்படுத்தியது எல்லாம் சரிதான். ஆனால், அந்த முதல் தாக்குதலை அவர்கள் எதிர்பார்க்காமல் அலட்சியமாக இருந்தது எப்படி?

அன்றைய சூழ்நிலையில், அமெரிக்காவின் முக்கியமான கவலை அதுதான். 'நாங்கள் பெரிய்ய்ய தேசமாக்கும்' என்கிற கெத்து உயிரோடு இருக்கும்வரைதான் அவர்களுடைய ஆதிக்கம் நீடிக்கும். ஜப்பான்மாதிரி யார் வேண்டுமானாலும் அமெரிக்காவைத் தாக்கி காயப்படுத்திவிடலாம் என்று தெரிந்துவிட்டால்,

Join / Telegram : @Tamil_Books_Library

அதன்பிறகு அமெரிக்காவுக்கு அமிஞ்சிக்கரை மரியாதைதான்.

எங்கே தப்பு நடந்தது, ஏன் இந்த விஷயத்தை முன்கூட்டியே தெரிந்துகொள்ளாமல் கோட்டைவிட்டோம் என்று தீவிரமாக ஆராயத் தொடங்கியது அமெரிக்கா. இந்த அலசலின்போது கிடைத்த சில தகவல்களைத் தொகுத்துப் பார்க்கும்போது, அவை ஜப்பானியத் தாக்குதலுக்கு இணையான அதிர்ச்சியை உருவாக்கின.

பேர்ல் துறைமுகத் தாக்குதலுக்கு முன்பிருந்தே, ஜப்பானிய அதிகாரிகள் அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் 1941 நவம்பர் மாதம் தொடங்கி, ஜப்பான் தரப்பில் ஓர் அவசரம் தெரிந்திருக்கிறது.

அதாவது, ஒருபக்கம் அமெரிக்காவுடன் நட்பாகப் பேசியபடி, இன்னொருபக்கம் ஜப்பான் போர் ஏற்பாடுகளில் இறங்கியிருக்கிறது. இதை வெளிப்படையாகச் சொல்லாமல், அவர்கள் சில ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

'நவம்பர் 29ம் தேதிக்குள், அமெரிக்கா - ஜப்பான் பேச்சுவார்த்தைகளில் சுமுக நிலை எட்டப்படவேண்டும்' என்று ஜப்பானிய அமைச்சர் ஒருவர் பேசியிருந்தார், 'அதன்பிறகு, நிலைமை கைமீறிவிடும்' என்று அவர் எச்சரித்ததை அமெரிக்கா சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

இதனால், டிசம்பர் மாதம் பிறந்ததும், அமெரிக்காவின் பல நகரங்களில் அமைந்திருந்த ஜப்பானியத் தூதரகங்களுக்கு ஓர் உத்தரவு சென்றது - மிக முக்கியமான ஆவணங்களைமட்டும் வைத்துக்கொண்டு, மற்ற எல்லாவற்றையும் உடனடியாக அழித்துவிடுங்கள்.

'இனிமேல் போரைத் தவிர்க்கமுடியாது' என்று ஜப்பானிய அதிகாரிகள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

அவர்களுடைய பேச்சுகளில், சில சங்கேத வார்த்தைகள் மீண்டும் மீண்டும் இடம்பெற்றன.

பல ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல்கள், திடீரென்று அமெரிக்க ரேடார் பார்வையிலிருந்து மறைந்துபோயின. அவற்றைப் பயன்படுத்தி, ஒரு ரகசியத் தாக்குதலுக்கு ஜப்பானியர்கள் ரிகர்ஸல் பார்த்துக்கொண்டிருப்பதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் கிடைத்திருந்தன.

இதில் அதிர்ச்சியான விஷயம் என்னவென்றால், இத்தனை விஷயங்களும், பேர்ல் துறைமுகத் தாக்குதலுக்குச் சில தினங்கள் முன்பாகவே அமெரிக்காவுக்குத் தெரியும். ஆனால், இதையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்து, ஜப்பான் நம்மீது தாக்குதல் நடத்தப்போகிறது என்று அவர்களால் கண்டறியமுடியவில்லை.

அமெரிக்காவின் மிகப் பெரிய சறுக்கல் அதுதான். இத்தனை தகவல்களைக் கையில் வைத்துக்கொண்டு, அவற்றைப் பயன்படுத்தாமல் பல் குத்த்¢க்கொண்டிருந்தது சுத்த முட்டாள்தனமில்லையா?

இந்தக் கோணத்தில் யோசிக்கத் தொடங்கியபோதுதான், அமெரிக்காவுக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது - இதுமாதிரி விஷயங்களில், ராணுவத்தின் உளவுப் பிரிவைமட்டும் நம்பிப் பிரயோஜனமே இல்லை. வெளி விவகாரங்களை அலசி ஆராய்வதற்காக ஒரு தனி உளவுத்துறை இருந்தால்தான் நல்லது.

1941ல், அமெரிக்காவில் அப்படி ஓர் உளவுத்துறை இருந்திருந்தால், ஜப்பானியர்களின் நடவடிக்கைகளைக் கவனித்திருப்பார்கள், அவற்றைத் தொகுத்து, வரக்கூடிய ஆபத்தை அரசாங்கத்துக்கு முன்கூட்டியே தெரிவித்திருப்பார்கள். இந்த அசிங்கத்தைத் தவிர்த்திருக்கலாம்.

பேர்ல் துறைமுகத் தாக்குதலுக்கும், சிஐஏவின் உருவாக்கத்துக்கும் இடையே கிட்டத்தட்ட ஆறு வருட

Join / Telegram : @Tamil_Books_Library

இடைவெளி. ஆனால், இப்படி ஓர் அமைப்பு நமக்குத் தேவை என்று அமெரிக்க அரசாங்கம் உணர்ந்துகொண்டது, அந்த மகா அதிர்ச்சிக்குப்பிறகுதான்.

Join / Telegram : @Tamil_Books_Library

## 2. அதிபுத்திசாலிகளின் படை

'முரட்டு பில்'

வில்லியம் ஜோசஃப் டொனொவனுக்கு (William Joseph Donovan) அவரது நண்பர்கள் சூட்டிய செல்லப் பெயர் இது.

டொனொவன் பேட்டை தாதா இல்லை. சட்டம் படித்த வழக்கறிஞர், ராணுவ அதிகாரி, உளவுத்துறை நிபுணர். இத்தனை அடையாளங்களையும் தாண்டி, அவருக்கு 'முரட்டு'ப் பட்டம் நிலைத்துவிட்டது என்றால், அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

வாழ்க்கையில் நிறையப் போராடி முன்னுக்கு வந்தவர் டொனொவன். எதிரிகள் என்கிற வார்த்தையே அவருக்குப் பிடிக்காது. அதிதீவிரமான நாட்டுப்பற்று, அதற்காக யாரையும் பகைத்துக்கொள்ளத் தயங்கமாட்டார். அமெரிக்காவின் விரோதிகள் எல்லோரும் எனக்கும் ஜென்ம விரோதிகள் என்கிற எண்ணத்துடன் பாய்ந்து தாக்கக்கூடிய முரட்டு மனிதர்.

சாதாரணமாக, வழக்கறிஞர்கள் எல்லாம் நிறையப் பேசுவார்கள். ஆனால் டொனொவனுக்குப் பேச்சு அலர்ஜி, செயல்வேகம்தான் முக்கியம் என்பது அவருடைய கட்சி.

முதல் உலகப்போர் காலகட்டத்தில், வில்லியன் டொனொவன் தன்னுடைய தலைமையிலான ராணுவப் படையை மிகச் சிறப்பாக வழிநடத்தினார். இதற்காக, அமெரிக்காவின் மிகப் பெரிய ராணுவ விருதுகள் பலவற்றை வென்றவர் அவர்.

போருக்குப்பிறகு, சமர்த்தாக மீண்டும் தனது வழக்கறிஞர் தொழிலைப் பார்க்கப் போய்விட்டார் டொனொவன். அப்போதும், அமெரிக்க அரசாங்கம் அவரை விடுவதாக இல்லை, தொடர்ந்து பல முக்கியமான பதவிகளும் பொறுப்புகளும் அவருக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

Join / Telegram : @Tamil_Books_Library

டொனொவனுக்கு உளவுத்துறையில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்ட காலகட்டம் இது. உலகம்முழுவதும் அமெரிக்காவுக்குப் புது விரோதிகள் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்த அவர், இதையெல்லாம் நாம் தொடர்ந்து கண்காணிக்கவேண்டியது, கட்டுப்படுத்தவேண்டியது அவசியம் என்று அமெரிக்க அரசாங்கத்துக்கு வலியுறுத்தினார்.

இதனிடையே, இரண்டாம் உலகப் போர் தொடங்கிவிட்டது. அமெரிக்கா அதில் நேரடியாகப் பங்கேற்காவிட்டாலும், யாரேனும் ஏதாவது செய்து நம்மைச் சீண்டுவார்கள் என எச்சரித்தார் டொனொவன். 'வெளியிலிருந்து நமக்கு வரக்கூடிய ஆபத்துகளை அடையாளம் காண்பதற்காகவும் தவிர்ப்பதற்காகவும் ஒரு தனி உளவுத்துறையை அமைத்தாகவேண்டும்' என்று சிபாரிசு செய்தார்.

அவருடைய நச்சரிப்பு தாங்காமல், அமெரிக்க அரசு இதைப்பற்றித் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கியது. உலகப் போர்க் காலகட்டத்தில், மற்ற நாடுகள் என்ன செய்கின்றன, யார் யாரை ஆக்கிரமிக்கிறார்கள், யாருடைய பலம் எவ்வளவு என்பதையெல்லாம் தெரிந்துகொள்வதற்காக இப்படி ஓர் உளவு அமைப்பை ஏற்படுத்துவது நல்லதுதான் என்று முடிவு செய்தார்கள்.

அதாவது, டொனொவனின் வாதங்கள் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன. நிரந்தர உளவுத்துறையாக அல்லாமல், போர்க் காலத்தில்மட்டும் பயன்படக்கூடிய ஓர் அமைப்பை உருவாக்கத் தீர்மானித்தது அமெரிக்கா.

டொனொவனுக்கு இதில் முழுத் திருப்தி இல்லைதான். ஆனாலும், கிடைத்த வேலையை ஒழுங்காகச் செய்வோம் என்று அதற்கான ஏற்பாடுகளில் இறங்கினார்.

1941ம் ஆண்டு ஜூலை மாதத்தில், COI (Coordinator Of Information) என்ற ஓர் உளவுப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது.

Join / Telegram : @Tamil_Books_Library

இந்த அமைப்பு, அமெரிக்க அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கியது.

ஆரம்ப காலத்தில், டொனொவனுக்கு வழங்கப்பட்ட உளவுப் பொறுப்புகள் மிகச் சவாலானவை. அநேகமாக அவை அனைத்தும், ஹிட்லர் என்கிற தனி மனிதரைச் சுற்றிவந்துகொண்டிருந்தன.

அப்போது உலகம்முழுவதையும் ஹிட்லர் ஜூரம் தாக்கியிருந்தது. அந்த ஆள் நேரடியாக தங்களைச் சீண்டாவிட்டாலும், அவரால் நமக்கு ஆபத்து உண்டா, இல்லையா என்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ள விரும்பியது அமெரிக்கா.

இந்த வேலைதான், டொனொவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது - ஹிட்லரின் நாஜிப்படைகள் உண்மையிலேயே பலமானவைதானா, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகளில் ஹிட்லர் என்னவிதமான பாதிப்பை உண்டாக்கக்கூடும், இவரால் நமக்கு உடனடி அல்லது நீண்ட கால ஆபத்து உண்டா, இந்த ஆள் அமெரிக்காவின் நண்பரா, அல்லது விரோதியா?

இப்படிப் பல கேள்விகளுடன் உலகைச் சுற்றிவந்தார் டொனொவன். ராணுவத்துக்கு வெளியே இப்படி உலகத்தை உளவு பார்ப்பது அமெரிக்காவுக்குப் புதிய விஷயம். என்றாலும், டொனொவனும் அவரால் உருவாக்கப்பட்ட உளவு அதிகாரிகளும் இந்த வேலைகளைச் சிறப்பாகவே செய்தார்கள்.

இதனால், ஹிட்லரின் நடவடிக்கைகளைப்பற்றிய குறிப்புகள் அமெரிக்காவுக்குத் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருந்தன. அவற்றின் அடிப்படையில்தான், அமெரிக்கா தனது அடுத்தடுத்த அரசியல் நடவடிக்கைகளை எடுத்தது.

ஆனால், இத்தனைக்குப்பிறகும், டொனொவன் எதிர்பார்த்ததுபோல், அமெரிக்கா தனது உளவு நடவடிக்கைகளுக்கு உரிய முக்கியத்துவத்தைத்

Join / Telegram : @Tamil_Books_Library

தரவில்லை. காரணம், அவர்களுக்கும் உலகப் போருக்கும் நேரடிச் சம்பந்தமே இல்லை.

இதனால், அமெரிக்க அரசு பத்தோடு பதினொன்றாகதான் உளவுத்துறையைப் பார்த்துக்கொண்டிருந்தது. ஏதோ பிழைத்துப்போங்கள் என்று கடமைக்குச் சிலரை உளவுப் பணியில் ஈடுபடுத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகள், சவுகர்யங்கள் செய்து தரப்படவில்லை, முறைப்படி பயிற்சி அளிக்கப்படவில்லை, இதற்காகக் கூடுதல் பட்ஜெட் ஒதுக்கக் கேட்டால், மூக்கால் அழுதார்கள், அல்லது ஒதுக்கித்தள்ளிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள்.

இதெல்லாம்கூடப் பரவாயில்லை. இத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு, டொனொவன் உள்ளிட்ட உளவாளிகள் திரட்டி அனுப்புகிற தகவல்கள், சரியானபடி பயன்படுத்தப்படவில்லை. ஏதோ தினத்தந்தி பேப்பர் படிப்பதுபோல் அதைப் புரட்டிவிட்டு மூலையில் வீசுவதுதான் வழக்கமாக இருந்தது.

இதையெல்லாம் பார்த்த டொனொவன், வெறுத்துப்போய்விட்டார். அமெரிக்க அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் என்று யாருக்கும் உளவுத்துறையின் முக்கியத்துவம், அவசியம் புரியவில்லையே என்று வேதனைப்பட்டார் அவர்.

இந்தச் சூழ்நிலையிலும், டொனொவன் தனது முயற்சிகளைக் கைவிடவில்லை. உளவுத்துறைக்குக் கூடுதல் பலம் வேண்டும், அதன் நடவடிக்கைகள், கண்டுபிடிப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருந்தார்.

அப்போதுதான், ஜப்பான் அமெரிக்காவைச் சீண்டத் தீர்மானித்தது. பேர்ல் துறைமுகத்தில் திடுதிப்பென்று புகுந்து ஓர் ஆட்டம் ஆடிவிட்டுப் போய்விட்டார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

பேர்ல் துறைமுகத் தாக்குதல், அமெரிக்கர்களை ஒரு மிகப் பெரிய அதிர்ச்சிக்குள் தள்ளியது. 'நமக்கு எந்தப் பிரச்னையும் இல்லை, நாம் சவுகர்யமாக, பாதுகாப்பாக இருக்கிறோம்' என்கிற உணர்வை உடைத்து, கொஞ்சம் மெனக்கெட்டால் அமெரிக்காவைக்கூட யாரேனும் அடித்துச் சாய்த்துவிட முடியும் என்று புரியவைத்தது.

அந்த பய உணர்வை, சரியாகப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தார் டொனொவன். 'இதைத்தான் நாங்கள் இத்தனை நாளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஒரு பலமான உளவுத்துறை இருந்திருந்தால், இப்படி ஒரு திடீர்த் தாக்குதல் நடந்திருக்குமா?' என்று கேட்கவேண்டியவிதத்தில் கேட்டார்.

முதன்முறையாக, டொனொவனின் வார்த்தைகளை மரியாதையோடு கவனிக்கத் தொடங்கியது அமெரிக்க அரசாங்கம். அவர் சொல்வதுபோல், நமது உளவுப் படையை வலுவாக்குவது அவசியம் என்று இப்போது அவர்களுக்குப் புரிந்தது.

இன்றைக்கு ஜப்பான், நாளைக்கு வேறு யாரோ. அமெரிக்காவின் விரோதிகள் உலகம்முழுக்க இருக்கிறார்கள். வருங்காலத்தில் அவர்களில் யாரும் இப்படி ஒரு தாக்குதலில் ஈடுபடாதபடி தடுக்கவேண்டுமென்றால், அமெரிக்காவைச் சுற்றிலும் கண்கள் வேண்டும். யார் எந்தப் பக்கம் அசைந்தாலும், அது நமக்கு எதிரான அசைவா என்று கவனித்து, எதிர் நடவடிக்கை எடுத்தாகவேண்டும் என்றார் டொனொவன்.

இந்தக் காலகட்டத்தில், அமெரிக்காவும் இரண்டாம் உலகப் போரில் குதித்துவிட்டதால், அபாயம் மேலும் அதிகரித்திருந்தது. இதைச் சமாளிப்பதற்காக, COI அமைப்பு வலுப்படுத்தப்பட்டது.

ஆனால், இந்த வேலைக்கு COI போதாது, இதைவிட பலமான இன்னொரு விசேஷ உளவு அமைப்பு வேண்டும் என்றார் டொனொவன். பேர்ல் ஹார்பர் அதிர்ச்சி இன்னும்

Join / Telegram : @Tamil_Books_Library

விலகியிருக்காத சூழ்நிலையில், டொனொவனின் இந்தக் கருத்தை அமெரிக்க அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

COI உருவாக்கப்பட்டுக் கிட்டத்தட்ட ஓராண்டு முடிகிற சூழ்நிலையில் (ஜூன் 1942), ராணுவ உத்தரவின்படி OSS (Office Of Strategic Services) என்ற இன்னோர் உளவு அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக, வில்லியம் டொனொவன் அறிவிக்கப்பட்டார்.

ஆனால் இப்போதும், முழுக் குடுமியையும் டொனொவன் கையில் கொடுக்க அரசாங்கம் விரும்பவில்லை. ஆகவே, OSS உலகப் போருக்காக உருவாக்கப்பட்ட தாற்காலிக அமைப்புமட்டுமே என்று தெள்ளத்தெளிவாக அறிவித்துவிட்டார்கள்.

அதுமட்டுமில்லை, ஏற்கெனவே அமெரிக்காவின் உள்நாட்டு விவகாரங்களை கவனிப்பதற்குக் காவல்துறை, FBI (Federal Bureau of Investigation) போன்ற அமைப்புகள் இருந்தன. அவற்றுக்கும் இந்தப் புதிய அமைப்புக்கும் அதிகாரப் போட்டி வந்துவிடக்கூடாது என்பதற்காக, OSS வெளிநாடுகளின் நடவடிக்கைகளைமட்டும்தான் உளவு பார்க்கவேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இதைப்பற்றியெல்லாம் டொனொவன் அவ்வளவாக அலட்டிக்கொள்ளவில்லை. அவர் எதிர்பார்த்தபடி சகல அதிகாரங்களுடனும் ஓர் உளவுத்துறை கிடைத்துவிட்டது. இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால், இதனை நிரந்தரமாகச் செயல்படும் ஓர் அமைப்பாக மாற்றிவிடலாம் என்று உறுதியாக நம்பினார் அவர்.

OSSக்காக, அமெரிக்க ராணுவம் மற்றும் பிற துறைகளில் பணியாற்றிக்கொண்டிருந்த மிகச் சிறந்த உளவுத்துறை நிபுணர்கள் ஒன்றுதிரட்டப்பட்டார்கள். இவர்களும், இவர்களிடம் பயிற்சி பெற்ற மற்ற ஜூனியர்களும், அமெரிக்காவின் வெளிநாட்டு உளவுப் பணிகளைத் தொடர்ந்தார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

இந்தக் குழுவினர், அமெரிக்காவின் எதிரி நாடுகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் நுணுக்கமாக அலசினார்கள். அவர்களுடைய படை பலம், வருங்காலத் திட்டங்கள், அவர்களால் வரக்கூடிய அபாயங்கள் என்று சகலத்தையும் தொகுத்து அரசாங்கத்துக்கு வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

வருங்கால சிஐஏவின் அடித்தளம், டொனொவன் உருவாக்கிய இந்த OSSதான். அதனால்தான், டொனொவனை 'சிஐஏவின் தந்தை' (Father Of CIA) என்று அழைக்கிறார்கள்.

டொனொவன் காலத்தில், உளவுப்பணி என்பது அதிபுத்திசாலிகள்மட்டுமே செய்யக்கூடிய ஒரு வேலையாகக் கருதப்பட்டது. இதனால், அமெரிக்காவின் மிகப் பெரிய பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வந்தவர்களுக்குமட்டும்தான் OSSல் வேலை கிடைத்தது, முக்கியப் பதவிகளும் அவர்களுக்குதான் தரப்பட்டன.

பின்னர் சிஐஏவின் ஆரம்ப நாள்களில்கூட, இந்த நிலைமை தொடர்ந்தது. பரீட்சையில் நல்ல மார்க் வாங்குவதற்கும், உளவு பார்ப்பதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அவர்கள் புரிந்துகொண்டது மிகத் தாமதமாகதான்.

எந்த நாட்டிலும், அரசாங்கம் அரசியல்வாதிகளுக்கு அதிபுத்திசாலிகள் என்றால் ஆகாது. இதனால், அப்போதைய அமெரிக்க ஆட்சியாளர்கள் டொனொவன் மற்றும் OSS அமைப்பை நினைத்துக் கொஞ்சம் கவலைப்பட்டார்கள். அவர்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கத் தயங்கினார்கள்.

காரணம், OSS அமைப்புக்கு அதிக சுதந்தரம் கொடுத்தால், நாளைக்கு அவர்கள் அரசாங்கத்தையே கட்டுப்படுத்தும் அளவுக்கு வளர்ந்துவிடுவார்கள் என்று ஆட்சியாளர்களுக்குத் தயக்கம். இதனால், பெரும்பாலான அதிகாரிகள் கொஞ்சம் நடுக்கத்துடன்தான் உளவுத்துறை வளர்ச்சியைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

இந்த நேரத்தில், இரண்டாம் உலகப் போர் முடிந்தது. இதுதான் சாக்கு என்று OSS அமைப்பைக் கலைத்துவிட்டார்கள். அதன் பொறுப்புகளை, உள்நாட்டு அமைப்புகளே மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது.

'இந்த ஆட்சியாளர்களுக்குப் புத்தியே வராதா?' என்று தலையில் அடித்துக்கொண்டார் டொனொவன். போர் முடிந்ததும், அமெரிக்காவுக்கு வரக்கூடிய அபாயங்கள் எல்லாம் முடிந்துவிட்டது என்று யார் சொன்னது? எந்நேரமும் எச்சரிக்கையாக இருப்பதுதானே நாட்டின் பாதுகாப்புக்கு நல்லது?

வில்லியம் டொனொவன் நம் ஊரில் இருந்திருந்தால், அவருக்கு விக்கிரமாதித்தன் என்று பெயர் வைத்திருப்பார்கள். தன் முயற்சியில் சற்றும் தளராமல், கோப்புகளைத் தூக்கிக்கொண்டு அரசாங்கப் படிகளில் ஏறத் தொடங்கினார் அவர்.

'ஐயா, ஆட்சியாளர்களே, நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள், உளவுத்துறை என்பது காலத்தின் கட்டாயம், அப்படி ஒன்று இருந்தால்தான், சுற்றிலும் என்ன நடக்கிறது என்பது நமக்குத் தெரியும், கவனமாக நம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும். போர் முடிந்ததும் உளவுத்துறையைக் கலைப்பது முட்டாள்தனம், கொஞ்சம் தொலைநோக்குப் பார்வையோடு யோசித்துப்பாருங்கள், நான் சொல்வதில் இருக்கும் நியாயம் புரியும்'

டொனொவன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். ஆனால், போர் இல்லாத அமைதிக் காலத்தில் அமெரிக்காவுக்கு ஓர் உளவுத்துறை தேவை என்பதை யாரும் ஏற்கத் தயாராக இல்லை.

சாதாரணமாக, டொனொவனுக்கு அமெரிக்க விரோதிகளைக் கொஞ்சமும் பிடிக்காது. ஆனால் இந்தச் சூழ்நிலையில், அவருக்குக் கை கொடுத்தது,

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்காவுக்குச் சவால் விட்டுக்கொண்டிருந்த ஒரு சக்திதான்.

அதன் பெயர், சோவியத் யூனியன்!

## 3. கோட்டுக்கு வெளியே

இரண்டு பேர், ஒருவரோடு ஒருவர் முறைத்துக்கொண்டு மோதத் தயாராக நிற்கிறார்கள்.

விரோதம் என்றால், ஜென்ம விரோதம். நேரடியாகவும் மறைமுகமாகவும் சவால் விட்டுக்கொண்டாகிவிட்டது. எனக்கு யார் ஆதரவு, உனக்கு யார் ஆதரவு, என்னால் என்ன முடியும், உன்னால் என்ன முடியும் என்றெல்லாம் கணக்குப்போட்டுக்கொண்டு, கவனமாக எதிர் நடவடிக்கைகளைத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில், அந்த இருவரில் ஒருவர்மட்டும் திடீரென்று ஓர் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டுவிடுகிறார். இப்போது அந்த இன்னொருவர் என்ன செய்வார்?

அப்படியொரு திகைப்பில்தான், அப்போதைய அமெரிக்கா மூழ்கிப்போயிருந்தது. அவர்களின் உலக ஆதிக்கத்துக்கு ஒரே சவாலாக நினைத்து பயந்த சோவியத் யூனியன், தங்களுடைய கதவை இறுகச் சாத்திக்கொண்டுவிட்டார்கள்.

இதற்காக, அவர்கள் அமெரிக்காவின் வம்பு வழக்குக்கு வராமல் ஒதுங்கிப்போய்விட்டார்கள் என்று அர்த்தம் இல்லை. தாங்கள் என்ன செய்கிறோம் என்று யாருக்கும் தெரியாதபடி மறைந்துகொண்டு வேலைகளில் இறங்கினார்கள்.

இதனால், சோவியத் யூனியனுள் என்ன நடக்கிறது என்பதே வெளியாள்கள் யாருக்கும் தெரியவில்லை. தெரியவேண்டும் என்கிற அவசியம் இல்லை என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் அப்போதைய ஆட்சியாளர் ஸ்டாலின்.

மூடிய கதவுகளுக்குள், அப்படி என்னதான் நடக்கிறதோ என்று பல நாடுகள் ஆர்வமானார்கள். சோவியத் யூனியனை 'இரும்புத் திரை' என்று வர்ணித்தார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

அதற்கெல்லாம் அலட்டிக்கொள்ளாமல், அவர்கள் திரையை மேலும் கனமாக்கிப் பதுங்கிக்கொண்டுவிட்டார்கள்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, சோவியத் யூனியன் என்ன செய்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது ஆர்வம் அல்ல, அவசியம். காரணம், அவர்கள் என்ன செய்தாலும், அதன் பின்விளைவுகள் நிச்சயமாக அமெரிக்காவின் தலையில்தான் வந்துவிழும்.

இரண்டாவது உலகப் போரின்போது அமெரிக்கா ஜப்பான்மீது அணுகுண்டு வீசி, அந்நாட்டைக் கடுமையாகச் சேதப்படுத்தியிருந்தது. அந்த ஹிரோஷிமா, நாகசாகி சம்பவங்களின்போதுதான், அமெரிக்கா உள்பட, எல்லா நாடுகளும் அணு ஆயுதங்களின் வலிமையை, அவை உருவாக்கக்கூடிய ஆபத்துகளைப் புரிந்துகொண்டன.

இதனால், ஒருபக்கம் 'அணு ஆராய்ச்சிக்கு, அணு ஆயுதங்களை உருவாக்குவதற்குத் தடை விதிக்கப்படவேண்டும்' என்று மனிதாபிமானக் குரல்கள் எழுந்தன. இன்னொருபக்கம், நம்மிடம் நாலு அணு ஆயுதம் இருந்தால்தான் நல்லது என்று எல்லோரும் அதற்கான ஆய்வுகளில் இறங்கிவிட்டார்கள்.

அமெரிக்கா வைத்த வெடி, அவர்கள்மீதே வந்து விழும்போலாகிவிட்டது. சாதாரணமாகவே சோவியத் யூனியன்காரர்கள் அறிவியல் ஆராய்ச்சிகளில் கெட்டி, இப்போது அணு ஆயுதம்தான் வலிமையின் அடையாளம் என்று அமெரிக்காவே அவர்களுக்குக் கோடு போட்டுக் காட்டிவிட்டது.

இதனால், சோவியத் யூனியன் அணு ஆயுதம் தயாரிக்கிறதா, ஆம் எனில், அதில் அவர்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள், அவர்களுடைய படை பலம் எப்படிப்பட்டது, எங்கே எவ்வளவு ராணுவம் திரட்டிவைத்திருக்கிறார்கள், என்னென்ன நவீன ஆயுதங்களைப் புதிதாகக் கண்டறிந்திருக்கிறார்கள் என்று

Join / Telegram : @Tamil_Books_Library

ஏகப்பட்ட விஷயங்களைத் தெரிந்துகொள்ளத் துடித்தது அமெரிக்கா.

இதற்கு வழியே தராமல், சோவியத் யூனியன் தனது பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்திவிட்டது. வெளிநாட்டினர் அங்கே போவதற்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள், அப்படியே சென்றாலும், அவர்களுக்கு எந்த ரகசியங்களும் கிடைத்துவிடாதபடி கவனமாகப் பார்த்துக்கொண்டார்கள், அயல்நாட்டு உளவாளி என்று சந்தேகத்துக்கிடமாக யார் சிக்கினாலும், ஜென்மத்துக்கும் வெளியே வந்துவிடாதபடி உள்ளே அடைத்துவைத்தார்கள்.

இதுபோன்ற நடவடிக்கைகளால், அமெரிக்காவின் குறுகுறுப்பு மேலும் அதிகரித்தது. சோவியத் யூனியனுள் அப்படி என்னதான் நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளாதவரை, நம்முடைய பாதுகாப்பு நிச்சயமில்லை என்று தெளிவாக முடிவுகட்டிவிட்டார்கள்.

அப்போதுதான், அமைதிக்காலத்திலும் உளவுத்துறை அவசியம் என்று டொனொவன் கரடியாகக் கத்திக்கொண்டிருப்பதன் முழு அர்த்தமும் அமெரிக்கர்களுக்குப் புரிந்தது. 1946ம் ஆண்டு ஜனவரி மாதம், CIG (Central Intelligence Group) என்ற பெயரில் ஒரு புதிய உளவு அமைப்பை உருவாக்கினார் அப்போதைய அமெரிக்க அதிபர் ட்ரூமன் (Harry S Truman).

பின்னர், CIGயின் பெயர் CIA (Central Intelligence Agency) என்று மாற்றப்பட்டது. 1947ம் ஆண்டு செப்டம்பர் 18ம் தேதி, சிஐஏவின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது.

சிஐஏ தொடங்கப்பட்ட காலகட்டத்தில், அதன் முக்கியக் கடமைகளாக வரையறுக்கப்பட்டிருந்த சில விஷயங்கள்:

- அமெரிக்காவின் பகை நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது
- அமெரிக்காவின் நட்பு நாடுகள், அமைப்புகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபடுவது

Join / Telegram : @Tamil_Books_Library

- இந்த நடவடிக்கைகள் அனைத்திற்கும், அமெரிக்க அரசுதான் ஆதரவு, பண உதவி அளிக்கிறது என்பது வெளியே தெரியாதபடி நடந்துகொள்வது

- அமெரிக்கக் கருத்துகள், கொள்கைகளை, அயல்நாடுகளில் பரப்புவது

- அமெரிக்காவுக்கு எதிராக இயங்கும் நாடுகளில், எதிர் இயக்கங்களுக்கு நேரடி / மறைமுக ஆதரவு தருவது

- கம்யூனிசத்துக்கு எதிரான நாடுகள், இயக்கங்களுக்கு உதவுவது

இப்படி நீளமாகப் பட்டியல் போட்டாலும், சிஐஏ என்ன நோக்கத்துக்காகத் தொடங்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்திருந்தது - அமெரிக்காவைச் சுற்றிலும் ஒரு கோடு கிழித்துக்கொள்ளவேண்டியது, அதற்கு வெளியில் என்ன வேண்டுமானாலும் கலாட்டா செய்துகொள்ளலாம், கோட்டுக்கு உள்ளே இருக்கிறவர்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும், அவ்வளவுதான்.

இதன்மூலம், மறைமுகமாக மற்ற நாடுகளின் ஆட்சியாளர்கள் அனைவருக்கும் ஒரு மிரட்டல் விடுத்தது அமெரிக்கா - எங்களுடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறாயா? நாங்கள்தான் மற்ற எல்லோரையும்விட உசத்தி என்று நம்புகிறாயா? சந்தோஷம், உன்னுடைய ஆட்சிக்கு எந்தக் குறையும் வராமல் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், பிழைத்துப் போ!

இதேபோல், சோவியத் யூனியனை அல்லது கம்யூனிசக் கொள்கைகளை ஆதரிக்கிற நாடுகள், ஆட்சியாளர்கள் எல்லோரையும், தங்களது விரோதிப் பட்டியலில் சேர்த்துவிட்டது அமெரிக்கா. இந்த ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்காக, என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது சிஐஏவில் எழுதப்படாத ஒரு விதி.

ஆனால், சிஐஏ அமெரிக்கப் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் இல்லையா? வெளிநாட்டு

Join / Telegram : @Tamil_Books_Library

ஆட்சியாளர்களைக் கவிழ்ப்பதற்கும் அமெரிக்கப் பாதுகாப்புக்கும் என்ன சம்பந்தம்?

இல்லையா பின்னே? சோவியத் ரஷ்யாவுக்கு ஒரு நாடு ஆதரவு தருகிறது என்றால், அவர்களுடைய ஆதிக்கம் அதிகரிக்கிறது என்றுதானே அர்த்தம். கம்யூனிசம் செழித்து வளரும் ஓர் உலகத்தில் அமெரிக்கா எப்படிப் பாதுகாப்பாக, நிம்மதியாக இருக்கமுடியும்?

கம்யூனிசம் என்கிற பூதத்திலிருந்து, உலகப் பொதுமக்களைக் காப்பாற்றுவதற்காகதான் நாங்கள் இதையெல்லாம் செய்கிறோம் என்று அமெரிக்கா ஒரு நியாயம் கற்பித்துக்கொண்டது. ஆனால் உண்மையில், தங்களுடைய கருத்துகள், கொள்கைகளுக்கு மாற்றான ஓர் அரசாங்கம் அல்லது இயக்கம், உலகத்தில் எங்கே இயங்குவதையும் அவர்கள் விரும்பவில்லை.

ஆரம்பத்தில், நிஜமாகவே அமெரிக்காவின் பாதுகாப்பு கருதிதான், இப்படி வெளி விரோதிகளைத் தேடிப் பிடித்து நசுக்கப்பார்த்தார்கள். ஆனால் இதுவே பின்னர் 'உலகக் காவல்காரன்' என்கிற இமேஜுக்கு அமெரிக்காவைக் கொண்டுசென்றுவிட்டது.

சிஐஏ தொடங்கப்பட்ட காலகட்டத்தில், அவர்களுக்குத் தரப்பட்டிருந்த அதிகாரங்கள் மிகக் குறைவுதான். ஆனால் அடுத்தடுத்த வருடங்களில் வெளிப்படையாகவும் ரகசியமாகவும் கூடுதல் பலம் சேர்த்துக்கொண்டது அந்த அமைப்பு.

இன்றுவரை, சிஐஏவுக்காக எவ்வளவு தொகை ஒதுக்குகிறோம், அது எப்படிச் செலவாகிறது என்பதை அமெரிக்கா பகிரங்கமாகச் சொல்வதில்லை. அதேபோல், சிஐஏ உளவாளிகள், அதிகாரிகள் என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதும் பரம ரகசியமாகவே காக்கப்படுகிறது.

இதற்கு மிக எளிமையான காரணம், இதையெல்லாம் வெளியில் சொல்லிக்கொண்டிருக்கமுடியாது

Join / Telegram : @Tamil_Books_Library

என்பதுதான். சிஐஏ என்று போர்ட் வைத்து மாலை போட்ட அந்த முதல் நாளில் தொடங்கி, உலகம் மொத்தத்தையும் அமெரிக்காபோலவே, அமெரிக்காவுக்கு ஆதரவாகவே சிந்திக்கச் செய்கிற கடமையைதான் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

யாரேனும் இதை எதிர்த்தால்? அமெரிக்காவின் ஆளுமையை ஏற்க மறுத்தால்?

சிஐஏவைப் பொறுத்தவரை இந்த இரண்டுமே ஒன்றுதான். அமெரிக்காவை ஏற்க மறுக்கிறவர்கள், அதை எதிர்ப்பதாகக் கருதப்படுவார்கள். அவர்களை ஆட்சியிலிருந்து கீழே இறக்குவதற்கு, சிஐஏ எதுவும் செய்யும்.

எதுவும் என்றால், எதுவும். இந்த விஷயத்தில் அவர்களுக்கு முழுச் சுதந்தரம் தரப்பட்டது. அந்த நாட்டு மக்களிடையே, அவர்களுடைய அரசுக்கு எதிரான கருத்துகளைத் திட்டமிட்டுப் பரப்புவதில் தொடங்குவார்கள். இதனால் உள்நாட்டின் குழப்பம் உண்டானபிறகு, அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்படுகிற இயக்கங்களைத் தேடிப் பிடித்துப் பண உதவியும் ஆயுதப் பயிற்சியும் தருவார்கள், முடிந்தால், மறைமுகமான ராணுவ நடவடிக்கைகள், இல்லாவிட்டால், ஆட்சியில் இருக்கிற முக்கியப் பிரமுகர்களை அடித்துக் காலி செய்துவிடுவது

யார் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனித்து ரிப்போர்ட் தரவேண்டிய ஒரு சாதாரண உளவு அமைப்பாகத் தொடங்கி, சிஐஏ எங்கோ போய்க்கொண்டிருக்கிறது என்பதை அமெரிக்கர்கள் கவனிக்கவில்லை. அல்லது, அதன் போக்கைச் சுவாரஸ்யமாக ரசிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இதனால், உலகம்முழுவதும் சிஐஏவின் தில்லுமுல்லுத் திருவிளையாடல்கள் முழுவேகத்தில் அரங்கேறத் தொடங்கின - அமெரிக்க அரசின் பூரண ஆசிர்வாதத்துடன்!

Join / Telegram : @Tamil_Books_Library

## 4. குழம்பிய குட்டைகள், கொழுத்த மீன்கள்

இரண்டாம் உலகப் போர்க் காலகட்டத்தில், ஹிட்லருடன் துணையாக நின்ற மிகச் சில ஆட்சியாளர்களில் ஒருவர், முசோலினி (Benito Mussolini).

இத்தாலியச் சர்வாதிகாரியான முசோலினி, போரில் ஹிட்லர் தோற்கடிக்கப்படுவதற்குமுன்பே பிடிபட்டு, கொல்லப்பட்டுவிட்டார். அதன்பிறகுதான், இத்தாலியில் குடியரசு மலர்ந்தது. மக்கள் கொஞ்சம் நிம்மதியாக மூச்சு விடத் தொடங்கினார்கள்.

அப்போதைய இத்தாலியின் அரசியல் களத்தில், மூன்று கட்சிகள் முக்கியமானவை - 'DC' எனப்பட்ட குடியரசுக் கட்சி (Christian Democrats), இத்தாலிய சோஷலிஸ்ட் கட்சி (PSI) மற்றும் இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி (PCI).

இத்தாலியின் முதலாவது பொதுத் தேர்தலில், இந்தக் கட்சிகள் மூன்றும் தனித்துப் போட்டியிட்டன, யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனால், இந்த மூன்று கட்சிகளும் இணைந்து ஒரு கூட்டணி அரசு அமைத்தன. இந்தக் கூட்டணிக்குக் குடியரசுக் கட்சி தலைமை தாங்கியது. மற்ற இரண்டு கட்சிகளுக்கும் சில மந்திரி பதவிகள் தரப்பட்டிருந்தன.

இந்தக் கூட்டணி ஆட்சி, நெடுநாள் நீடிக்கவில்லை. பல அரசியல் பிரச்னைகளால், PCI மற்றும் PSI கட்சிகளை ஆட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டது குடியரசுக் கட்சி.

இதனால் எரிச்சலடைந்த இந்த இரு கட்சிகளும், தனிக் கூட்டணி அமைத்துக்கொண்டார்கள். குடியரசுக் கட்சியின் ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தார்கள்.

கிட்டத்தட்ட சம பலம் உள்ள மூன்று கட்சிகளில், இரண்டு பேர்மட்டும் இணைந்துவிட்டால் என்ன ஆகும்? அவர்களுடைய பலம் அந்த மூன்றாவது கட்சியைக்காட்டிலும் அதிகமாகிவிடும்.

Join / Telegram : @Tamil_Books_Library

இத்தாலியில் அதுதான் நடந்தது. ஆளுங்கட்சியைவிட, எதிர்க்கட்சிகள் பலம் வாய்ந்தவையாகிவிட்டன. இதனால் ஏகப்பட்ட அரசியல் குழப்பங்கள்.

இப்படி ஒரு சூழ்நிலையில், 1948ம் ஆண்டு, இன்னொரு பொதுத் தேர்தல் வந்தது. இந்தமுறை, குடியரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டது. மற்ற இரண்டு கட்சிகளும் இணைந்து தேர்தலைச் சந்தித்தன. இதனால், குடியரசுக் கட்சி நிச்சயமாகத் தோற்கடிக்கப்பட்டுவிடும் என்கிற நிலைமை.

அப்போதுதான், சிஐஏ இந்தத் தேர்தலில் தலையிடத் தீர்மானித்தது.

இத்தாலிப் பொதுத் தேர்தலுக்கும் அமெரிக்காவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஆனால், இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி தோற்றுவிட்டால், அது பெரிய ஆபத்தாகிவிடும் என்று முடிவு செய்தது அமெரிக்கா.

காரணம், குடியரசுக் கட்சியை எதிர்த்து நிற்கிற இரண்டு கட்சிகளுமே கம்யூனிஸக் கொள்கைகளை ஆதரிக்கின்றன. இவற்றுக்கு மறைமுகமாக சோவியத் யூனியன் உதவிக்கொண்டிருப்பதாக ஒரு செய்தி.

ஒருவேளை இந்தக் கட்சிகள் ஜெயித்துவிட்டால்? இத்தாலியில் கம்யூனிஸ ஆட்சி மலர்ந்துவிடும். அது அமெரிக்காவுக்குப் பொறுக்குமா? குட்டையைக் குழப்புவதற்காகத் தானும் களத்தில் குதிக்கத் தீர்மானித்தது.

ஆனால், தேர்தல் நடக்கப்போவது இத்தாலியில். ஓட்டுப்போடப்போவது இத்தாலியர்கள், இதனால் ஏதேனும் பிரச்னை வந்தாலும்கூட, அது இத்தாலியின் உள்விவகாரம். அதில் அமெரிக்கா தலையிடுவது நாகரிகமாக இருக்காது.

அதனால்தான், தன்னுடைய பிரதிநிதியாக சிஐஏவை அனுப்பிவைத்தது அமெரிக்கா. திரைமறைவில் அவர்கள்

Join / Telegram : @Tamil_Books_Library

என்ன வேண்டுமானாலும் செய்யலாம், ஏதேனும் விவகாரமாகிவிட்டால், அதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம்.

எப்படியாவது குடியரசுக் கட்சியை ஜெயிக்கச்செய்யவேண்டும் என்பதுதான் சிஐஏவுக்குத் தரப்பட்டிருந்த ஒரே நோக்கம். அதற்காக என்னவெல்லாம் செய்யலாம் என்று பக்காவாக லிஸ்ட் போட்டுக்கொண்டு வேலைகளில் இறங்கினார்கள்.

முதல் வேலையாக, எந்தெந்த ஊரில் யாருக்கு ஆதரவு அதிகமாக இருக்கிறது என்று உளவு பார்க்கத் தொடங்கியது சிஐஏ. அப்போதுதான், அநேகமாக எல்லா இடங்களிலும் குடியரசுக் கட்சி இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து, ஏகப்பட்ட செலவில் பத்திரிகைகள், வானொலி போன்ற ஊடகங்களின்மூலம், எதிர்ப் பிரசாரங்கள் தொடங்கின. இதற்காக சிஐஏ வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், பேச்சுகள் அனைத்தும், கம்யூனிஸ ஆட்சியின் 'பின் விளைவு'களைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருந்தன.

அதாகப்பட்டது இத்தாலியர்களே, நீங்கள் PSI அல்லது PCI கட்சிக்கு ஓட்டுப்போடுவதாக இருந்தால், கொஞ்சம் யோசியுங்கள். உலகம்முழுவதும் அமைந்திருக்கிற கம்யூனிஸ்ட் ஆட்சிகள், தங்களுடைய மக்களை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்திக்கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய இத்தாலி, கம்யூனிஸத்தின் கோரப்பிடியில் சிக்கிக்கொள்வதை நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள்தானே? எதுவானாலும், ஒருமுறை யோசித்துவிட்டுச் செயல்படுங்கள், உங்கள் எதிர்காலம் உங்கள் கையில். அவ்வளவுதான் விஷயம்.

சிஐஏவின் இந்தப் பிரசாரம், உண்மையா பொய்யா என்பது முக்கியம் இல்லை. இதை அவர்கள் நூறு முறை, ஆயிரம் முறை, லட்சம் முறை திரும்பத் திரும்பச் செய்தார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

இத்தாலியப் பொதுமக்கள் எந்தப்பக்கம் திரும்பினாலும், கம்யூனிஸம் என்பது உலக ஜனங்களைக் கொன்று தீர்ப்பதற்காக வந்த அரக்கன் என்பதாக உரத்த குரலில் அலறிக்கொண்டிருந்தன ஊடகங்கள்.

மக்களுக்கு இந்தப் பிரசாரத்தையெல்லாம் யார் செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனால், இதையே மீண்டும் மீண்டும் கேட்கிறபோது, அவர்களுக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டியது. கம்யூனிஸம் என்பது உண்மையிலேயே பெரிய விஷயம்தானா, அல்லது பிரச்னை உண்டாக்குகிற சாத்தானா என்று சற்றே தயக்கத்துடன் யோசிக்கத் தொடங்கினார்கள்.

போதாதா? சட்டென்று அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கியது சிஐஏ.

இந்தமுறை, அவர்கள் இத்தாலிய கம்யூனிஸ்ட் தலைவர்களைக் குறிவைத்திருந்தார்கள். அவர்கள்மீது பலவிதமான குற்றச்சாற்றுகளைச் சுமத்தி, அதற்கான ஆதாரங்களையும் விளம்பரப்படுத்தினார்கள். இவற்றில் பெரும்பாலான 'ஆதாரங்கள்', சிஐஏவால் கவனமாகத் தயார் செய்யப்பட்டவை என்பது வேறுவிஷயம்.

அதெல்லாம் இத்தாலிய மக்களுக்குத் தெரியவில்லை. கம்யூனிஸம் நம் தேசத்துக்குப் புதியது, அநாவசியமாக ஏன் ரிஸ்க் எடுக்கவேண்டும் என்று நினைத்துவிட்டார்கள். இத்தாலிய சோஷலிஸ்ட் / கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குப் போகவேண்டிய ஓட்டுகள் அனைத்தும், குடியரசுக் கட்சியின்பக்கம் திரும்பின.

இதனால், தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, கடைசி இடத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த குடியரசுக் கட்சி, அந்தத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றி பெற்றது. மொத்த வாக்குகளில் கிட்டத்தட்ட பாதி அவர்களுக்கு ஆதரவாக விழுந்திருந்தன. அமெரிக்கா விரும்பியபடி, இத்தாலியில் குடியரசுக் கட்சியின் ஆட்சி அமைந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

அப்போது விழுந்த கம்யூனிஸ்ட் கட்சி, அதன்பிறகு இத்தாலியில் எப்போதும் பழைய பலத்துடன் எழமுடியவில்லை. சிஐஏவின் முதல் முக்கியமான வெளிநாட்டுப் 'பணி', வெற்றிகரமாக முடிவடைந்தது.

ஒன்றரை வருடங்கள் கழித்து, இதே இத்தாலி நாடகத்தை இன்னொருமுறை நடத்திக்காட்டியது சிஐஏ. இந்தமுறை அவர்களிடம் சிக்கிய நாடு, ஃபிலிப்பைன்ஸ்.

இரண்டாம் உலகப் போருக்குப்பிறகு சுதந்தரம் பெற்ற ஃபிலிப்பைன்ஸில், அமெரிக்காவுக்கு ஆதரவான அரசாங்கம்தான் அமைந்திருந்தது. ஆகவே, அவர்களுக்குப் பொருளாதார ரீதியில் நிறைய உதவிகளைச் செய்துகொண்டிருந்தது அமெரிக்கா. பதிலுக்கு, அந்நாட்டைத் தங்களுடைய ராணுவ முகாம்போலப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

இங்கேயும், கம்யூனிஸ்ட்கள் அவர்களுடைய பாதையில் குறுக்கிட்டு நின்றார்கள். ஃபிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் ராணுவப் பிரிவான 'ஹூக்ஸ்' (Hukbalahap), அமெரிக்காவுக்கு ஆதரவாக இயங்கும் அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சிகளில் இறங்கியது.

இதனால், ஃபிலிப்பைன்ஸ்முழுவதும் கலாட்டா, கலவரங்கள் தினசரிச் செய்திகளாகிவிட்டன. எதிர் கோஷ்டியினருக்கு மக்களிடையே கொஞ்சம் கொஞ்சமாக ஆதரவு பெருகுவதைக் கவலையோடு பார்த்தது ஃபிலிப்பைன்ஸ் அரசாங்கம்.

கலவரங்களை ஒடுக்குவதற்கு, அமெரிக்காவின் உதவியைக் கேட்டது ஃபிலிப்பைன்ஸ் அரசு. இந்தப் பொறுப்பு, சிஐஏவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்தாலியில் அரங்கேற்றிய அதே திரைக்கதை. 'கம்யூனிஸ்ட்கள் மக்களுக்கு எதிரானவர்கள், அவர்களைப்போய் நீங்கள் ஆதரிப்பீர்களா?' என்று திரும்பிய திசையெல்லாம் மைக் வைத்துக்கொண்டு அலறத் தொடங்கினார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

இதற்கெல்லாம் சாட்சி வேண்டுமில்லையா? சிஐஏவும் ஃபிலிப்பைன்ஸ் ராணுவமும் சில வன்முறை / தாக்குதல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு அரங்கேற்றிவிட்டு, அவற்றையெல்லாம் கம்யூனிஸ்ட்களின் வேலை என்று பிரசாரம் செய்தார்கள்.

இந்தமுறை, பிரசாரங்களைத்தவிர, அவர்களுக்கு வேறு சில முக்கியமான வேலைகளும் இருந்தன. உள்ளூர் ராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்கள், இதர உபகரணங்களை வரவழைத்து, அவற்றில் வேண்டிய பயிற்சிகளையும் கொடுத்தார்கள். இதன்மூலம், உள்நாட்டுக் கலவரங்களைச் சமாளிப்பதற்கு ஃபிலிப்பைன்ஸ் ராணுவம் தயாரானது.

அதன்பிறகு, ஃபிலிப்பைன்ஸில் பொதுத் தேர்தல் வந்தது (1953). இதிலும், அமெரிக்காவுக்கு ஆதரவான ஆட்சி அமைவதற்காகக் களத்தில் இறங்கியது சிஐஏ. கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் பிரசாரங்கள் முழுவேகத்தில் முடுக்கிவிடப்பட்டன, எதிரிகளின்மீது குற்றச்சாற்றுகள், ஆதாரங்கள் அள்ளி வீசப்பட்டன. கடைசியில், அமெரிக்கா விரும்பிய ஆட்சிதான் அமைந்தது.

இதே ஆண்டு, ஈரானிலும் ஓர் அரசியல் மாற்றம் நிகழ்ந்தது. அதன் பின்னணியில் இருந்து இயங்கியதும் சிஐஏதான்.

அங்கே மொஹம்மத் மொசாதே (Mohammed Mossadegh) என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி அமைத்திருந்தார். அதன்பிறகு அவர் கொண்டுவந்த சில சீர்திருத்தங்கள் மேற்கத்திய நாடுகளுக்குப் பிடிக்கவில்லை.

இந்த ஆட்சி நீடிப்பது நமக்கு நல்லதில்லை என்று முடிவு செய்து, முதலில் பிரிட்டன் களத்தில் குதித்தது. அதன்பிறகு, சிஐஏவையும் துணைக்குச் சேர்த்துக்கொண்டார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

மொசாதேவைப் பதவியிறக்கவேண்டும் என்பது முதல் நோக்கம். அதன்பிறகு, நமக்குத் தலையாட்டக்கூடிய ஒரு நல்ல ஆட்சியாளரைத் தேடிப் பிடித்து உட்காரவைக்கவேண்டும். இதற்காக, பல ரகசிய நடவடிக்கைகள் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டன.

முக்கியமாக, அப்போதைய ஆட்சியை விரும்பாத, மொசாதே அரசாங்கத்துக்கு எதிரான மாற்றுக் கருத்து கொண்டவர்களைத் தேடிப் பிடித்தது சிஐஏ. கொடி பிடிக்கலாமா, தெருவில் இறங்கி கோஷம் போடலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தவர்களுக்கெல்லாம், 'நாங்கள் உங்களுக்கு உதவியாக வருகிறோம்' என்று நம்பிக்கை கொடுத்து, ஆயுதம் ஏந்தவைத்தார்கள்.

இதைத் தொடர்ந்து, ஏராளமான புரட்சி இளைஞர்களுக்குப் பண உதவியும் ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இவர்கள் ஈரானியப் பொதுமக்களிடையே மொசாதேவுக்கு எதிரான கருத்துகளைப் பரப்பினார்கள், மொசாதே ஆதரவாளர்களுடன் தெருவில் இறங்கிச் சண்டை போட்டார்கள்.

இதன்மூலம், சிஐஏ எதிர்பார்த்த மக்கள் புரட்சி தொடங்கிவிட்டது. பிரிட்டனும் அமெரிக்காவும் இதனை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு, குழம்பிய குட்டையில் மீன் பிடித்தார்கள். மேலும் பல கிளர்ச்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்து, பிரச்னையைப் பெரிதாக்கினார்கள்.

1953 ஆகஸ்ட் மாதத்தில், எதிர்ப்பாளர்களின் கை ஓங்கியது. பிரதமர் மொஹம்மத் மொசாதே கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அமெரிக்கா மற்றும் சிஐஏ விரும்பிய ஆட்சி ஈரானில் அமைந்தது.

அடுத்த வருடம், க்வாடமாலாவிலும் இதேதான் நடந்தது. கம்யூனிஸ ஆதரவு அரசு, அல்லது, அமெரிக்காவால் அப்படி நம்பப்பட்ட ஓர் அரசு, சிஐஏவின் தீவிர நடவடிக்கைகளால் கவிழ்க்கப்பட்டது.

Join / Telegram : @Tamil_Books_Library

இந்தமுறை சிஐஏவால் பதவி இறக்கப்பட்டவர், அர்பென்ஜ் குஜ்மன் (Jacobo Arbenz Guzman). க்வாடமாலா மக்கள் ஆதரவுடன் 1951ம் ஆண்டு பதவிக்கு வந்த இவர், அந்நாட்டில் பல புதிய சீர்திருத்தங்களை அமல்படுத்திக்கொண்டிருந்தார்.

அர்பென்ஜ் குஜ்மனின் இந்த நடவடிக்கைகள், அவரை ஒரு கம்யூனிஸ்டாக அடையாளம் காட்டின. இதைக் கவனித்த அமெரிக்கா, உஷாராகிவிட்டது.

ஐரோப்பாவில்மட்டுமின்றி, அமெரிக்காவிலும் கம்யூனிஸம் பரவத் தொடங்கியிருந்த காலகட்டம் அது. இந்த விபரீதத்தை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும் என்பதற்காக, பல தீவிர நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது அமெரிக்கா.

அப்போது அவர்களுக்கு யாரைப் பார்த்தாலும் கம்யூனிஸ்டாகத் தெரிந்தார்கள். அரசியல்வாதிகள், அதிகாரிகளில் தொடங்கி, எழுத்தாளர்கள், ஓவியர்கள், சினிமாக் கலைஞர்கள்வரை கம்யூனிஸத்துக்கு ஆதரவாகச் செயல்படுகிறவர்களாகக் கருதப்படுகிறவர்களைக் கண்டறிந்து ஒதுக்கிவைத்தது அமெரிக்கா. ஹாலிவுட் நகைச்சுவைப் பிரபலம் சார்லி சாப்ளின்கூட, இப்படிக் குற்றம் சாட்டப்பட்டு அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்தான்.

சார்லி சாப்ளின்மீது சந்தேகப்பட்டவர்களுக்கு, அர்பென்ஜ் குஜ்மன் கம்யூனிஸ்டாகத் தெரிந்ததில் ஆச்சர்யம் எதுவும் இல்லை. சோவியத் யூனியன் ஆதரவுடன் அவர் செயல்படுகிறார் என்று ஊகித்த அமெரிக்கா, அவரைப் பதவியிறக்கியாகவேண்டும் என்று தீர்மானித்துவிட்டது.

எங்கோ இத்தாலியிலும் ஈரானிலும் கம்யூனிஸம் வளர்ந்துவிடக்கூடாது என்று மெனக்கெடுகிற அமெரிக்காவுக்கு, தங்கள் மூக்குக்குக் கீழே இருக்கும் க்வாடமாலாவில் கம்யூனிஸ்ட் ஆதரவு ஆட்சி அமைவது பிடிக்கவில்லை. சோவியத் யூனியனுடம் கூட்டுச் சேர்ந்துகொண்டு அர்பென்ஜ் என்னவெல்லாம் செய்வாரோ

Join / Telegram : @Tamil_Books_Library

என்கிற பயம் அவர்களை முரட்டுத்தனமாகச் செயல்படவைத்தது.

தவிர, அர்பென்ஜ் ஆட்சியால் பாதிக்கப்பட்ட சில அமெரிக்க நிறுவனங்களும், அவரைக் கீழே இறக்குவதற்கு முயன்றார்கள். அவர்களுடைய வற்புறுத்தலைத் தொடர்ந்து, அமெரிக்கா இதில் தலையிடுவது கட்டாயமாகிவிட்டது.

அர்பென்ஜ் குஜ்மன் ஆட்சியைக் கவிழ்க்கும் திட்டத்துக்கு சிஐஏ சூட்டிய பெயர், 'PBSUCCESS'. சில மாதங்களுக்குமுன் ஈரானில் வெற்றி பெற்ற அதே ஃபார்முலாதான் - அரசாங்கத்துக்கு எதிரான போராளிகளைக் கண்டுபிடி, ஆதரவு கொடு, எதிர்ப் பிரசாரம், தாக்குதல், கலாட்டாக்கள், குழப்பங்கள், புரட்சிகள், புதிய அரசாங்கம்!

இந்தமுறையும், சிஐஏவின் திட்டம் கச்சிதமாக வேலை செய்தது. அர்பென்ஜ் ஆட்சியைப் பிடிக்காத சில உள்ளூர் இயக்கங்களைத் தேடிப் பிடித்தார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து, 'சும்மா புகுந்து விளையாடுங்கள்' என்று ஆசிர்வதித்து அனுப்பிவைத்தார்கள்.

இன்னொருபக்கம், அமெரிக்கா க்வாடமாலாவுக்கு அரசியல், பொருளாதாரரீதியிலான நெருக்கடிகளை உருவாக்கிக்கொண்டிருந்தது. கம்யூனிஸம்பற்றிய எதிர்ப் பிரசாரங்களும் முழுவேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

இப்படி சிஐஏ எல்லா திசைகளில் இருந்தும் அடித்ததில், க்வாடமாலாவின் சிறிய அரசாங்கத்தால் நிலைமையைச் சமாளிக்கமுடியவில்லை. சில நூறு உள்ளூர்ப் புரட்சியாளர்களை வைத்துக்கொண்டு, சிஐஏ நினைத்ததைச் சாதித்துவிட்டது - அர்பென்ஜ் குஜ்மன் தன் பதவியை ராஜினாமா செய்யவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்.

Join / Telegram : @Tamil_Books_Library

தொடர்ச்சியாக ஈரான், க்வாடமாலா என்று இரண்டு இடங்களில் வெற்றி பெற்றதும், சிஐஏவுக்குத் தெம்பு கூடியது. இன்னும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் (அதாவது, அமெரிக்க விரோதிகள்) எங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று தேட ஆரம்பித்தார்கள்.

அப்போது அவர்களுடைய கவனத்துக்கு வந்தது, க்யூபா. ஃபிடல் காஸ்ட்ரோ (Fidel Castro) தலைமையிலான புரட்சி அரசாங்கம் அங்கே அமைந்திருந்தது.

புரட்சியாவது, புடலங்காயாவது. மற்ற கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களைப்போலவே, இந்த ஆளையும் கீழே தள்ளியாகவேண்டும் என்று முடிவுசெய்தது சிஐஏ.

அவர்கள் அப்படித் தீர்மானித்த நேரம், கொழுத்த ராகுகாலமாக இருந்திருக்கவேண்டும். அப்போது அவர்கள் காலைச் சுற்றிக்கொண்ட க்யூபாப் பாம்பு, இன்றுவரை சிஐஏவின் சரித்திரத்தில் ஒரு கறும்புள்ளியாகவே தொடர்கிறது.

Join / Telegram : @Tamil_Books_Library

## 5. அசட்டு உளவாளிகள்

உலகப் புகழ் பெற்ற 'மேட்' (MAD) நகைச்சுவை இதழில், 'Spy Vs Spy' என்ற பெயரில் ஒரு பிரபலமான கார்ட்டூன் வரிசை வெளியானது.

இதில் இரண்டு உளவாளிகள் இடம்பெறுவார்கள். ஒருவர் கறுப்பு Spy, இன்னொருவர் வெள்ளை Spy. இரண்டு வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாகச் சித்திரிக்கப்படும் இந்த உளவாளிகள், ஒருவர் மற்றவருடைய ரகசியத்தைத் திருடவும், மற்றவர்களைத் தாக்கி அழிப்பதற்கும் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருப்பார்கள்.

பொதுவாக, உளவாளிகள் என்றாலே, அவர்கள் அதிபுத்திசாலிகளாகக் கருதப்படுவது வழக்கம். ஆனால், அடுத்தவரை ஏமாற்றவேண்டும் என்கிற வேகத்தில், அவர்கள் சில சமயம் அடிமுட்டாள்தனமாக நடந்துகொண்டுவிடக்கூடும் என்கிற சாத்தியங்களை மிகப் பிரமாதமாக வெளிப்படுத்திய கார்ட்டூன் தொடர் இது. ஒரு வார்த்தைகூட வசனம் இல்லாமல், வெறும் காட்சிகளின்மூலமே சிரிக்கவைத்த இந்த 'Spy Vs Spy', பல நாடுகளைச் சேர்ந்த ரசிகர்களால் வெகுவாக வரவேற்கப்பட்டது.

ஆனால், நிஜத்தில் உளவாளிகள் இப்படியெல்லாமா அசட்டுத்தனமாக நடந்துகொள்வார்கள்?

'Spy Vs Spy' கதாபாத்திரங்களை உருவாக்கிய ஓவியர் அந்தோனியா ப்ரொஹியாஸ் (Antonio Prohias) இந்தக் கேள்விக்கு நேரடியாக பதில் சொன்னதில்லை. ஆனால், அவர் பிறந்த க்யூபாவில், அவருடைய நகைச்சுவைக் கற்பனைகளையெல்லாம் தூக்கிச் சாப்பிடும்படியான உளவுக் கலாட்டாக்கள் நடந்திருக்கின்றன.

அத்தனைக்கும், கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: சிஐஏ!

Join / Telegram : @Tamil_Books_Library

க்யூபாவில் போய் காமெடிப் படம் எடுக்கவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம் இல்லை. ஆனால், அந்நாட்டின் ஆட்சியாளர் ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு எதிராக அவர்கள் எடுத்த எல்லா நடவடிக்கைகளும், புறப்பட்ட வேகத்தில் கீழே சுருண்டு விழுந்து மண்ணைக் கவ்வின.

காஸ்ட்ரோவுக்கு க்யூப மக்களிடையே இருந்த ஆதரவு அப்படிப்பட்டது. அவருடைய ராணுவம் மற்றும் பாதுகாப்புப் படையினர், சிஐஏவின் எல்லா முயற்சிகளையும் முன்கூட்டியே கண்டறிந்து முறியடித்தார்கள்.

சிஐஏவும், ஃபிடல் காஸ்ட்ரோவைக் கொன்றுவிடவேண்டும் என்பதற்காக என்னென்னவோ முயன்றுபார்த்தது. ஒன்று, இரண்டு இல்லை, 638 முறை ஃபிடல் காஸ்ட்ரோவைக் கொல்ல முயன்றிருக்கிறது சிஐஏ. உலக சரித்திரத்தில் வேறு எந்தத் தலைவரைக் கொல்வதற்கும் அத்தனை முயற்சிகளை யாரும் செய்திருக்கமாட்டார்கள்.

இதெல்லாம் சும்மா வதந்திகள் என்று நினைத்துவிடவேண்டாம். எண்பது வயது ஃபிடல் காஸ்ட்ரோ சமீபத்தில் எழுதிய ஒரு கட்டுரையில், தனக்கு எதிராக சிஐஏ / அமெரிக்கா பல கொலை முயற்சிகளை நிகழ்த்தித் தோல்வியடைந்ததை உறுதி செய்திருக்கிறார்.

அதுமட்டுமில்லை, கடந்த பல ஆண்டுகளாகவே, சிஐஏவின் ரகசிய ஆவணங்கள் படிப்படியாக பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டுவருகின்றன. அவற்றின் அடிப்படையில், காஸ்ட்ரோவைக் கொல்வதற்காக சிஐஏ முயன்றுபார்த்த வழிமுறைகளெல்லாம், 'CIA Targets Fidel' என்ற பெயரில் தனிப் புத்தகமாகவே வெளியிட்டிருக்கிறார்கள்.

ஏதோ ஜேம்ஸ் பாண்ட் நாவல் படிக்கிற ஆசையில் இந்தப் புத்தகத்தைப் புரட்டினால், வரிசையாக கல்கி, தேவன், க்ரேஸி மோகன் ரேஞ்சுக்கு நகைச்சுவைக் காட்சிகள்தான் விரிகின்றன. பெரும்பாலான சதித் திட்டங்களைப்பற்றி

Join / Telegram : @Tamil_Books_Library

படிக்கும்போது, இப்படியெல்லாம்கூட அபத்தமாக யோசிக்கமுடியுமா என்று மலைப்பு தோன்றுகிறது.

சில உதாரணங்கள்:

- க்யூபாவின் புகழ் பெற்ற ஹவானா சுருட்டு, காஸ்ட்ரோவுக்கு மிகவும் பிடித்தமானது. அந்தச் சுருட்டுக்குள், வெடிமருந்தை ஒளித்துவைத்துவிடவேண்டியது. காஸ்ட்ரோ அதைப் பற்றவைக்கும்போது, டமார்!

- கடலுக்கு அடியில் நெடுநேரம் நீச்சலடிப்பது காஸ்ட்ரோவின் பொழுதுபோக்கு. அவருடைய நீச்சல் உடைக்குள் விஷம் வைத்துவிடுவது. அதைப் போட்டுக்கொண்டு நீச்சலடிக்கும் காஸ்ட்ரோவின் உடலில் விஷம் பரவும், அவர் செயலிழந்து மூழ்கிப்போய்விடுவார்

- பேனா வடிவ விஷ ஊசி ஒன்றை, ஒரு சிஐஏ ஏஜென்டிடம் கொடுத்து அனுப்புவது. அவர் அதை காஸ்ட்ரோவின் உடலில் குத்திவிட்டால், மிச்சத்தை விஷம் பார்த்துக்கொள்ளும்

- காஸ்ட்ரோவின் காதலி ஒருவரைத் தங்கள் வசம் இழுத்துக்கொண்டு, அவரிடம் விஷ மாத்திரைகளைக் கொடுத்து அனுப்பியது சிஐஏ. காஸ்ட்ரோ காதல் மயக்கத்தில்(?) இருக்கிறபோது, எப்படியாவது அவர் அதை காஸ்ட்ரோவின் சாப்பாட்டில் கலந்துவிட்டால் போதும், சத்தமில்லாமல் வேலை முடிந்துவிடும்

- பாக்டீரியா கலந்த விஷத்தை காஸ்ட்ரோவின் கைக்குட்டையில் தெளித்துவிடுவது. அவர் எப்போதாவது மூக்கு உறிஞ்சுவதற்கு அல்லது வியர்வையை ஒற்றுவதற்கு கர்ச்சீப் பயன்படுத்தாமலா இருந்துவிடுவார்?

இப்படி சிஐஏவின் ஃபிடல் காஸ்ட்ரோ கொலை முயற்சிப் பட்டியல் மைல்கணக்கில் நீண்டாலும், அத்தனை முயற்சிகளும் படுதோல்வி அடைந்தன. சிஐஏவால் அனுப்பப்பட்டவர்கள் யாராலும் காஸ்ட்ரோவை

Join / Telegram : @Tamil_Books_Library

நெருங்கக்கூட முடியவில்லை. அந்த அளவுக்கு, அவரைச் சுற்றிலும் பக்காவான பாதுகாப்பு.

கடைசியில் வேறு வழியே இல்லாமல், மாஃபியா கும்பலின் உதவியை நாடியிருக்கிறார்கள். 'எப்படியாவது காஸ்ட்ரோவைத் தீர்த்துடு' என்று மாடர்ன் தியேட்டர்ஸ் வில்லன்கள்போல் வசனம் பேசியிருக்கிறது சிஐஏ.

இந்த முயற்சியும் பலிக்கவில்லை. விஷம் ஏந்தியவர்களைப்போலவே, காஸ்ட்ரோவுக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்தியவர்களையும் சுற்றிவளைத்துப் பிடித்துவிட்டது க்யூபாவின் உளவுத்துறை.

இத்தனையிலும் ஃபிடல் காஸ்ட்ரோ தப்பிப் பிழைத்தபிறகு, சிஐஏவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இனிமேல் இவர் வயதாகி இயற்கைமுறையில் தானாக இறந்தால்தான் உண்டு என்று கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்கள்.

காஸ்ட்ரோ விஷயத்தில், சிஐஏ தொட்டதெல்லாம் சொதப்பல். ஆரம்பத்தில் அவருடைய ஆட்சியைக் கவிழ்க்க நினைத்தவர்கள், அதிலும் பரிதாபமாகத் தோல்வியைத் தழுவினார்கள்.

சிஐஏவின் மிகப் பெரிய தப்புக் கணக்கு அது. மற்ற நாடுகளில் நடத்திய அதே நாடகத்தை, க்யூபாவிலும் நடத்திவிடலாம், காஸ்ட்ரோவைக் கீழே தள்ளிவிட்டு, தங்களுக்குச் சாதகமான ஒரு தலையாட்டி பொம்மையை ஆட்சியாளராக உட்காரவைத்துவிடலாம் என்று நினைத்து, யோசிக்காமல் தீவிர நடவடிக்கைகளில் இறங்கிவிட்டார்கள்.

பலமுறை வெற்றியடைந்த அவர்களுடைய திட்டம், க்யூபாவில் படுதோல்வியடையக் காரணம், காஸ்ட்ரோவுக்கு மக்கள் மத்தியில் இருந்த ஆதரவு. அதைச் சரியாகக் கணிக்கத் தவறிவிட்டன அமெரிக்காவும் சிஐஏவும்.

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்கர்களைப்பொறுத்தவரை, மொத்த உலகமும் அவர்களைப்போல்தான் சிந்திக்கிறார்கள் என்றுதான் நினைப்பார்கள், அப்படிச் சிந்திக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அவர்களால் வேறெப்படியும் இருக்கமுடியாது.

எங்களுக்கு கம்யூனிஸம் பிடிக்காது. அப்படியானால், உலகின் எல்லா மூலைகளிலும் யாருக்கும் கம்யூனிஸம் பிடிக்காது என்றுதான் அர்த்தம். எங்களுக்குப் பிடிக்காத கொள்கைகளின்படி ஆட்சி நடத்துபவர்கள், அகற்றப்படவேண்டியவர்கள். அவ்வளவுதான் விஷயம்.

அமெரிக்காவின் இந்தப் பிடிவாதம், க்யூபாவில் பலிக்கவில்லை. அவர்கள் காஸ்ட்ரோவைத் தங்களுடைய உண்மையான மக்கள் தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அது புரியாமல், அங்கேயும் குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கலாம் என்று தூண்டிலுடன் கிளம்பியது சிஐஏ.

அப்போதைய அமெரிக்க அதிபர் கென்னடி (John F Kennedy). அவருடைய பூரண ஆசிர்வாதத்துடன்தான் சிஐஏ க்யூபாவில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்தது.

அவர்களுக்கு காஸ்ட்ரோ ஆட்சிமீது இருந்த கோபத்தில், நேரடியாக ஆயுதத் தாக்குதல் நடத்திவிடலாம் என்றுதான் முதலில் நினைத்தார்கள். அப்படிச் செய்தால் உலக அரங்கில் அமெரிக்காவின் பெயர் கெட்டுப்போகும், அதற்குபதிலாக, எப்போதும்போல் பின் வாசல் வழியாகவே நுழைந்துவிடலாம் என்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

அவர்களுடைய திட்டத்தில் பெரிதாக எந்த மாற்றமும் இல்லை - காஸ்ட்ரோமீது வெறுப்பு கொண்ட, அல்லது அவருடைய ஆட்சியைக் கவிழ்த்துவிட்டுத் தாங்கள் அதிகாரங்களைக் கைப்பற்ற விரும்பும் சில உள்ளூர் அமைப்புகளை அடையாளம் காண்பது. அவர்கள் எல்லோரையும் ஒன்றாகத் திரட்டி, அவர்களுக்குச் சகல

Join / Telegram : @Tamil_Books_Library

உதவிகளையும் செய்து தந்து, ஒரு கலகத்தைத் தூண்டுவது.

காஸ்ட்ரோவுக்கு எதிரான கலகக்காரர்கள் தங்கள் தாக்குதலைத் தொடங்குவதற்கு, பிக் வளைகுடா (Bay Of Pigs) என்ற பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர் இந்தத் திட்டத்துக்கும் 'பிக் வளைகுடா ஆக்கிரமிப்பு' என்றே பெயர் சூட்டப்பட்டது.

வழக்கம்போல், இந்தமுறையும் சிஐஏவுக்கு உதவியாகச் சில கலகக்காரர்கள் கிடைத்தார்கள். அவர்களுக்குத் தாராளமாகப் பண உதவி, ஆயுதங்கள், போர்ப் பயிற்சி என்று வேண்டியதையெல்லாம் கொடுத்துத் தயார் செய்தார்கள். நெற்றியில் குங்குமம் தீற்றி, 'சென்று வா, மகனே, வென்று வா' என்று க்யூபாவுக்கு வழியனுப்பிவைத்தார்கள்.

முக்கியமான விஷயம், சிஐஏ அவர்களைத் தனியே அனுப்பவில்லை. முன்பாரம், பின்பாரமாக, போர்க் கப்பல்கள், விமானங்கள் என்று எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். வெறும் உள்ளூர்க் கலவரங்களைமட்டும் நம்பாமல், க்யூபாமீது மிகப் பெரிய தாக்குதலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போர்க் கப்பல்கள், விமானங்களில் உட்கார்ந்துகொண்டு குண்டு வீசத் தயாராக இருந்தவர்கள் எல்லாம் அமெரிக்கர்கள்தான். ஆனால், அதை வெளியே சொல்லாமல், க்யூபர்களின் கலகம் என்று பூசி மறைத்துவிடத் திட்டமிட்டிருந்தார்கள்.

அதாவது, காஸ்ட்ரோவுக்கு எதிராக உள்ளூர் க்யூபர்கள் புரட்சி பண்ணுகிறார்கள், அவர்களே காஸ்ட்ரோவின் ராணுவத்தைத் தாக்குகிறார்கள், அவரை வீழ்த்தி, நாட்டைவிட்டு (அல்லது உலகத்தை விட்டே) அனுப்பப்போகிறார்கள், இதற்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை, ஓம் சாந்தி ஓம்!

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்கா, சிஐஏவின் இந்த வேஷமும் சரி, கனவும் சரி, மிக விரைவில் கலைந்துபோய்விட்டது.

இதற்குமுன் பலமுறை அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றிய திரைக்கதை, க்யூபாவில்மட்டும் படுமோசமாகச் சொதப்பிவிட்டது. சிஐஏ ஆவலுடன் எதிர்பார்த்த அந்த 'உள்ளூர்க் கலவரம்', கடைசிவரை நடக்கவே இல்லை.

ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு எதிராக அவர்கள் அனுப்பிவைத்த கலகக்காரர்கள், க்யூபாவின் சாதாரணப் பொதுமக்களிடம் சிக்கிக்கொண்டு உதைபட்டார்கள். 'காஸ்ட்ரோவுக்கு எதிராக நாங்கள் ...' என்று அவர்கள் பேசத் தொடங்குமுன், மக்கள் அவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் காவல்துறையிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

எந்த நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி சிஐஏவுக்கு எந்த அக்கறையும் கிடையாது. பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கவிழ்ப்பது அவர்களுக்கு அப்படியொன்றும் கஷ்டமான விஷயம் இல்லை.

ஆனால் க்யூபர்களிடையே, சிஐஏ நினைத்துப்பார்க்கமுடியாத அளவுக்கு ஒற்றுமை தெரிந்தது. காஸ்ட்ரோவை அவர்கள் முழுமையாக நம்பினார்கள், அவருக்கு எதிராகச் செயல்படுவது அந்தக் கடவுளே ஆனாலும் சரி, 'அவரைப் பிடித்து உள்ளே போடு' என்று கத்தினார்கள். இந்த விஷயத்தில் அவர்களைப் பிரித்தாளுவது சாத்தியமே இல்லை என்று சிஐஏ கொஞ்சம் தாமதமாகதான் புரிந்துகொண்டது.

அதற்குள், நிலைமை எல்லைமீறிவிட்டது. கலவரம் தொடங்கும், இடையில் புகுந்து நாமும் நாலு தர்ம அடி கொடுக்கலாம் என்று காத்திருந்த அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

Join / Telegram : @Tamil_Books_Library

'ஐயையோ, நம் ஆள்கள் அடி வாங்குகிறார்களே' என்று கென்னடியோ சிஐஏவோ கூடுதல் படைகளை க்யூபாவுக்கு அனுப்பிவைக்கமுடியவில்லை. இந்த விஷயத்தில் அவர்களால் பகிரங்கமாக எதையும் செய்யமுடியாது என்பதால், திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் விழித்தார்கள்.

ஃபிடல் காஸ்ட்ரோவின் நேரடி வழிநடத்துதலில், கலகம்(?) ஒடுக்கப்பட்டது. அமெரிக்கா அனுப்பிவைத்த கலகக்காரர்களில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டார்கள், மிச்சமிருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இந்த விஷயத்தில், கென்னடி அரசின் நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. நடந்ததை வெளியே சொல்லவும் முடியாமல், மறைக்கவும் முடியாமல் தவித்தார்கள்.

அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில், க்யூபா ஒரு பொடி தேசம். அவர்களிடம் இப்படி உதை வாங்கியது சிஐஏவுக்கு மிகப் பெரிய அவமானமாகிவிட்டது.

ஆனால், அவர்களால் செய்யக்கூடியது எதுவும் இல்லை. எங்கேயும் யாரையும் எப்படியும் கவிழ்த்துவிடலாம் என்கிற அவர்களுடைய எண்ணத்தில் முதல் அடி விழுந்தது க்யூபாவில்தான்.

அதன்பிறகுதான், சிஐஏ நிதானமாக உட்கார்ந்து யோசிக்க ஆரம்பித்தது. யார் இந்த ஃபிடல் காஸ்ட்ரோ? முந்தாநாள் சாயங்காலம் ராணுவப் புரட்சி நடத்தி ஆட்சியைப் பிடித்தவர்தானே? அவர்மீது மக்களுக்கு ஏன் அப்படி ஓர் ஈர்ப்பு?

இந்தக் கோணத்தில் உளவு பார்க்கத் தொடங்கியபோதுதான், காஸ்ட்ரோ என்கிற ஆளுமையின் முழுப் பரிமாணமும் அமெரிக்காவுக்குப் புரியத் தொடங்கியது. க்யூப மக்களிடையே காஸ்ட்ரோவுக்கு இருக்கிற ஆதரவு, வலுக்கட்டாயமாக மிரட்டி

Join / Telegram : @Tamil_Books_Library

வரவழைத்தது அல்ல, 'இருப்பதில் இந்த ஆள் பெட்டர்' என்று சலிப்பின் காரணமாக அவர்கள் காஸ்ட்ரோவைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை.

பாடிஸ்டா (Fulgencio Batista) என்பவரின் கொடுங்கோல் அரசாங்கத்தை விரட்டியடித்துவிட்டுதான், க்யூபாவின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியிருந்தார் ஃபிடல் காஸ்ட்ரோ. ஆகவே, நாட்டுக்குச் சுதந்தரம் வாங்கிக் கொடுத்தவர், நம்முடைய வாழ்க்கையில் விளக்கேற்றப்போகிறவர், க்யூபாவை முன்னேற்றப்போகிறவர் என்கிற முழு நம்பிக்கையுடன், அந்நாட்டு மக்கள் காஸ்ட்ரோவை மனமார ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், காஸ்ட்ரோவின் பிரபலத்துக்குக் காரணம், வெறும் தனிநபர் வழிபாடு இல்லை. கொள்கையளவில் மக்கள் அவருடன் ஒன்றியிருந்தார்கள்.

இதுதான் சிஐஏவுக்குப் புரியவில்லை. வீழ்த்தமுடியாத தலைவர் என்று ஒருவர் உண்டா என்று வீம்புடன் மீண்டும் காஸ்ட்ரோவுக்கு எதிராகக் கிளம்பினார்கள்.

இந்தமுறை, அவர்கள் கலகக்காரர்களைத் தேடவில்லை. சிஐஏ உளவாளிகளை க்யூபாமுழுவதும் ஊடுருவச் செய்தார்கள். இவர்கள் எல்லோருக்கும், எப்படியாது காஸ்ட்ரோவைக் கொன்றுவிடவேண்டும் என்பதுதான் ஒரே நோக்கம்.

இதற்காக அவர்கள் தீட்டிய(?) அதிபுத்திசாலித்தனமான திட்டங்களை முன்பே பார்த்தோம். கடைசிவரை, அவர்களால் காஸ்ட்ரோவின் நிழலைக்கூடத் தொடமுடியவில்லை.

அதன்பிறகும், அவர்களுக்கு முழுசாக ஞானம் வரவில்லை. காஸ்ட்ரோவைக் கொல்லதான் முடியவில்லை, க்யூப மக்களிடையே அவருக்கு இருக்கிற

Join / Telegram : @Tamil_Books_Library

கவர்ச்சியைக் குறைக்கவாவது செய்யலாம் என்று மேலும் சில அசட்டுத்தனங்களில் இறங்கினார்கள்.

காஸ்ட்ரோவின் கம்பீரமான அந்த தாடியைப் பார்த்துதான் க்யூப மக்கள் இப்படி மயங்கிக் கிடக்கிறார்கள் என்று சிஐஏவுக்கு எந்தப் புண்ணியவான்களோ துப்புக் கொடுத்துவிட்டார்கள். உடனே அவர்கள் எப்படியாவது அந்த தாடியைப் பிடுங்கி எறிந்துவிடவேண்டும் என்பதற்கான திட்டங்களைத் தயார் செய்தார்கள்.

இதற்காக, காஸ்ட்ரோவின் காலணிகளில் தாலியம் கலந்த உப்பைத் தூவ முயன்றது சிஐஏ. இந்த ரசாயனம் உடம்பில் கலந்தால், தலைமுடி, தாடி, மீசை, புருவம் என்று சகலமும் உதிர்ந்துபோய்விடும். அதன்பிறகு, க்யூப மக்கள் காஸ்ட்ரோவைப் புறக்கணித்துவிடுவார்கள்.

மகாபுத்திசாலித்தனமான இந்தத் திட்டமும், படுதோல்வி அடைந்தது. அப்போதும் சளைக்காமல், காஸ்ட்ரோவின் இமேஜைக் குலைப்பதற்கான தனது முயற்சிகளைத் தொடர்ந்து சிஐஏ.

அடுத்த திட்டம், காஸ்ட்ரோ ஏதேனும் ஒரு முக்கியமான பொதுநிகழ்ச்சியில் கலந்துகொள்கிறபோது, அவருடைய சுருட்டில், எப்படியாவது போதை மருந்துகளைக் கலந்து கொடுத்துவிடவேண்டியது. அவர் அதைப் புகைத்துவிட்டு, 'தண்ணித்தொட்டி தேடி வந்த கன்னுக்குட்டி நான்' என்று அண்டர்வேருடன் டப்பாங்குத்து டான்ஸ் ஆடுவார். அதைப் பார்த்து முகம் சுளிக்கும் க்யூபப் பொதுஜனம், காஸ்ட்ரோவை வெறுத்து ஒதுக்கிவிடும்.

சிரிக்காதீர்கள். அடுத்ததாக, இந்த அச்சுபிச்சுத் திட்டங்களையெல்லாம் தூக்கிச் சாப்பிடும்படியான ஒரு மெகா காமெடியையும் சிஐஏ முயன்றுபார்த்தது.

இந்தமுறை, அவர்கள் க்யூபர்களின் கடவுள் நம்பிக்கையைக் கையில் எடுத்துக்கொண்டார்கள். பரம நாத்திகரான காஸ்ட்ரோவின் ஆட்சி ஒழிந்தால்தான்,

Join / Telegram : @Tamil_Books_Library

கடவுள் உங்களை ஆசிர்வதிப்பார் என்று பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள்.

மற்ற நாட்டு மக்களைப்போல, க்யூபர்கள் இதுமாதிரியான எதிர்ப் பிரசாரங்களை அத்தனை சுலபத்தில் நம்புகிறவர்கள் இல்லை. இதைப் புரிந்துகொண்டிருந்த சிஐஏ, அவர்களை நம்பச் செய்வதற்காக ஒரு பிரம்மாண்டமான 'அவதார'க் காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

அதுவும் சாதாரண அவதாரம் இல்லை, ஜீசஸ் அவதாரம். அவர் பூமிக்கு வரத் தயாராகிவிட்டார். ஆனால், நாத்திகர்களால் ஆட்சி செய்யப்படுகிற க்யூபாவில் அவர் கால் பதிக்கத் தயங்குகிறார். இதுதான் கதை, வசனம். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, ஷங்கர் பட ரேஞ்சுக்கு கிரா ஃபிக்ஸ் காட்சிகளைத் தயார் செய்தார்கள்.

அமெரிக்கக் கப்பல் ஒன்றிலிருந்து, க்யூபாவின் கடற்கரைப் பகுதியில் பிரம்மாண்டமான பிம்பம் ஒன்றை உருவாக்கினார்கள். அதுதான் யேசு கிறிஸ்துவாம். அவரை மீண்டும் பூமிக்கு வரவிடாமல் தடுக்கும் அயோக்கியர்தான் ஃபிடல் காஸ்ட்ரோவாம்.

இந்தக் கதையை க்யூபர்கள் நம்பிவிடுவார்கள், 'ஓ ஜீஸஸ்' என்று பதறிப்போய், உடனடியாக காஸ்ட்ரோவின் தாடியைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து கடலுக்குள் தள்ளிவிடுவார்கள் என்று நினைத்திருக்கிறது சிஐஏ.

அமெரிக்காவின் இந்தக் கடவுள் அவதாரக் கதையை க்யூபர்கள் நம்பவும் இல்லை, காஸ்ட்ரோமீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை குறையவும் இல்லை. பழையபடி சிஐஏ மூக்கு உடைந்து திரும்பியதுதான் மிச்சம்.

எனினும், அதன்பிறகு பல வருடங்களுக்கு, அவர்கள் காஸ்ட்ரோவின் ஆட்சியை வீழ்த்துவதற்கான முயற்சிகளைமட்டும் கைவிடவில்லை. இன்றுவரை, அமெரிக்காவின் காலைச் சுரண்டிக் கடுப்பேற்றுகிற ஒரே அவஸ்தை, க்யூபாதான், காஸ்ட்ரோதான்.

Join / Telegram : @Tamil_Books_Library

உலகத்தில் ஏகப்பட்ட கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள், ஆதரவாளர்கள் இருக்கையில், ஃபிடல் காஸ்ட்ரோமீதுமட்டும் அமெரிக்காவுக்கு அப்படி என்ன விரோதம்?

இதற்கு இரண்டு காரணங்கள். முதலாவது, அமெரிக்காவிற்கும் க்யூபாவுக்கும் கூப்பிடு தூரம்தான். இத்தனை பக்கத்தில் ஒரு கம்யூனிஸ்ட் ஆதரவு ஆட்சியை வைத்துக்கொண்டிருப்பது அவர்களுக்குப் பொறுக்கவில்லை. 'இத்தனூண்டு மூக்குப் பொடி டப்பா சைஸ் தேசம், இதை அழிக்கமுடியவில்லை' என்று பொறுமித் தீர்க்கிறார்கள்.

அடுத்தபடியாக, காஸ்ட்ரோ வெறுமனே கம்யூனிஸ ஆதரவாளராக இருந்துவிட்டால்கூடப் பரவாயில்லை. அவர் சோவியத் யூனியனுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு அமெரிக்காவை ஆழம் பார்க்கத் தொடங்கினார்.

அலறிவிட்டது அமெரிக்கா. தங்களுடைய ஜென்ம விரோதியை, இப்படிக் காலடியில் உட்காரவைத்துக்கொண்டு அவர்களால் எப்படி நிம்மதியாக இருக்கமுடியும்?

க்யூபாவில் சோவியத் யூனியன் அப்படி என்னதான் செய்கிறது? இந்தக் கேள்விக்குப் பதில் தேடி, சிஐஏவின் உளவுக் கரங்கள் நீண்டன.

Join / Telegram : @Tamil_Books_Library

## 6. உலகெங்கும் கண்கள்

மாஸ்கோவிலிருந்த ஒரு சிஐஏ அதிகாரியை, அந்த ரஷ்யர் அணுகினார், 'நான் உங்களுக்கு உதவ விரும்புகிறேன்' என்றார்.

'உதவி' என்றால், உளவு அகராதியில் அதற்கு ஒரே அர்த்தம்தான். என்னுடைய நாட்டின் ரகசியங்களை நான் உங்களுக்கு விற்க விரும்புகிறேன், எவ்வளவு தருவீர்கள்?

கேட்டவர் சாதாரண மனிதர் அல்ல. அப்போதைய சோவியத் யூனியன் ராணுவத்தின் உளவுப்பிரிவான GRUவில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் அதிகாரி. அத்தனை பெரிய மனிதர், அவராகவே முன்வந்து, சிஐஏ ஒற்றராகப் பணியாற்ற சம்மதம் தெரிவிக்கிறார்.

நியாயமாகப் பார்த்தால், சிஐஏ சந்தோஷத்தில் தலை கால் புரியாமல் ஆடியிருக்கவேண்டும். ஒரு தூசு, துரும்புகூட நுழையமுடியாத சோவியத் யூனியன் அரசாங்கத்தின் உள்வட்டத்துக்குள், அவர்களுக்கு ஓர் ஒற்றர் கிடைத்துவிட்டார். இனிமேல், சோவியத் ரகசியங்கள் அத்தனையும் சிஐஏவுக்கு அத்துப்படியாகிவிடும்.

ஆனால், ஒலெக் பென்கொவ்ஸ்கி (Oleg Penkovskiy) என்ற அந்த சோவியத் அதிகாரியை, சிஐஏ சற்றே பயத்தோடுதான் பார்த்தது. 'உதவியும் வேண்டாம், ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம், ஆளை விடுங்கள்' என்று ஒரு கும்பிடு போட்டு ஒதுங்கிவிட்டார்கள்.

என்ன ஆச்சு சிஐஏவுக்கு? கம்யூனிஸ்ட் ஆட்சியில் சோவியத் யூனியன் யார் கண்ணிலும் படாத தலைமறைவுப் பிரதேசமாகிவிட்டது. உள்ளே என்ன நடக்கிறது என்றே தெரியாதபடி கதவை இறுகச் சாத்திவிட்டு, மும்முரமாக ஏதோ செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய திட்டங்கள் என்ன என்று கண்டறிவதற்காக, அமெரிக்க அரசாங்கம் தலையைப் பிய்த்துக்கொண்டு சுற்றிக்கொண்டிருக்கிறது.

Join / Telegram : @Tamil_Books_Library

இந்தச் சூழ்நிலையில், 'நான் உங்களுக்கு உதவுகிறேன்' என்று ஒரு பெரிய அதிகாரி முன்வருகிறார். அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தலைதெறிக்க ஓடுகிறது சிஐஏ.

ஏன்?

அன்றைய காலகட்டத்தில், சிஐஏவுக்கு இணையாக ஓர் உளவுத்துறை இயங்கிக்கொண்டிருந்தது என்றால், அது சோவியத் யூனியனின் கேஜிபி(KGB - Komitet Gosudarstvennoi Bezopasnosti)தான். சொல்லப்போனால், பல விஷயங்களில் கேஜிபி அதிகாரிகளும் உளவாளிகளும் சிஐஏவைத் தூக்கிச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

அமெரிக்கா - சோவியத் யூனியன் இடையிலான பனிப்போர் மிகத் தீவிரமடைந்துகொண்டிருந்த சூழ்நிலை. ஆகவே, இருதரப்பினரும், அடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை எப்படியாவது தெரிந்துகொண்டுவிட விரும்பினார்கள்.

இதனால், சிஐஏ தன்னுடைய உளவாளிகள் சிலரை, அதிகாரிகள் என்கிற போர்வையில் மாஸ்கோவுக்கு அனுப்பிவைத்தது. இவர்களுடைய வேலை, உள்ளூரில் சிஐஏ ஏஜென்ட்களாகப் பணிபுரியக்கூடியவர்களைத் தேடிப் பிடிப்பது.

இந்த உளவு அதிகாரிகள், பகல்முழுவதும் அமெரிக்கத் தூதரகத்தில் வேலை(?) பார்த்துவிட்டு, சாயந்தரமானதும் கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு கிளம்பிவிடுவார்கள். சோவியத் யூனியனின் உயர்மட்டப் பிரமுகர்கள், அதிகாரிகள் அதிகம் உலவுகிற நிகழ்ச்சிகள், பார்ட்டிகளில் கலந்துகொண்டு, அவர்களில் சிஐஏவுக்கு உதவக்கூடிய ஒற்றர்கள் யாரேனும் கிடைப்பார்களா என்று ஆழம் பார்ப்பார்கள்.

இப்படி சிஐஏ சோவியத் யூனியனுக்குள் தனது ஒற்றர்களைத் தேடிக்கொண்டிருந்த அதே நேரத்தில், இன்னொருபக்கம் கேஜிபி அமெரிக்காவினுள் நன்றாக ஊடுருவியிருந்தது. அங்கே நடக்கிற விஷயங்கள்

Join / Telegram : @Tamil_Books_Library

அனைத்தும், அட்சரம் பாக்கியில்லாமல் மாஸ்கோவுக்குச் சென்று சேரத் தொடங்கியிருந்தது.

அதுமட்டுமில்லை. இன்னொருபக்கமாகவும் அமெரிக்காவைத் தாக்கவேண்டும் என்று நினைத்தது கேஜிபி. உள்ளூரில் அவர்கள் சுறுசுறுப்பாக ஒற்றர்களைத் தேடுகிற சமாசாரம் ஏற்கெனவே கேஜிபிக்குத் தெரிந்திருந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கொஞ்சம் விளையாடிப்பார்க்கலாம் என்று தீர்மானித்தார்கள்.

இதன்படி, சோவியத் யூனியனின் நம்பிக்கைக்குரிய அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் சிலரை, அமெரிக்க ஆதரவாளர்கள்போல் நடிக்கச் செய்தது கேஜிபி. இவர்கள் சிஐஏ அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்துப் பேசினார்கள், அல்லது எதேச்சையாக அவர்கள் காதில் விழுவதுபோல், சோவியத் அரசாங்கத்தை விமர்சித்துக் கல்லெறிந்தார்கள்.

இதைக் கேட்ட சிஐஏ, அவர்களைத் தங்களது ஒற்றர்களாகத் தத்தெடுத்துக்கொண்டது. ஒவ்வொருவருக்கும் ஏகப்பட்ட சம்பளம் கொடுத்து, சோவியத் சமாசாரங்களை மோப்பம் பிடிக்க முயன்றார்கள்.

இந்த 'ஒற்றர்'களிடமிருந்து, சிஐஏவுக்கு உருப்படியாக எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. போதாக்குறைக்கு, சிஐஏவின் நடவடிக்கைகளைப்பற்றிய அனைத்துத் தகவல்களையும் அவர்கள் கர்ம சிரத்தையாக கேஜிபிக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

சற்றே தாமதமாகதான் இந்த உண்மையைப் புரிந்துகொண்டது சிஐஏ. அதற்குள் நிலைமை கைமீறிவிட்டது. இப்போது தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களில் யாரெல்லாம் நிஜமான அமெரிக்க ஆதரவாளர்கள், யாரெல்லாம் கேஜிபியால் அனுப்பப்பட்ட 'டபுள் ஏஜென்ட்'கள் என்று புரியாமல் திகைத்துப்போனார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

சுருக்கமாகச் சொல்வதென்றால், சிஐஏவைத் துல்லியமாகத் தூண்டில் போட்டுப் பிடித்துவிட்டது கேஜிபி. அதன்பிறகு, ரஷ்யர்கள் யாரைப் பார்த்தாலும் அமெரிக்காவுக்குச் சந்தேகம் பிறக்கத் தொடங்கியிருந்தது.

ஆகவேதான், ஒலெக் பென்கொவ்ஸ்கியைப் பார்த்துவிட்டு, சிஐஏ விலகி ஓடியது. ஒருவேளை இந்த ஆள் கேஜிபியின் உளவாளியாக இருந்து தொலைத்துவிட்டால்? எதற்கு வம்பு?

ஆனால் அதற்காக, அவர்களால் சோவியத் யூனியனை உளவு பார்க்காமல் இருந்துவிடவும் முடியாது. இந்த நிமிஷத்தில் சோவியத் விஞ்ஞானிகள் அமெரிக்காவைத் தாக்குவதற்காக என்னென்ன நவீன ஆயுதங்களையெல்லாம் தயாரித்துக்கொண்டிருக்கிறார்களோ என்கிற சிந்தனைதான், அவர்களைப் புதுப்புது உளவு வழிகளைத் தேடித் துரத்தியது.

ஆரம்பத்தில், சோவியத் எல்லைக்குள் தன்னுடைய உளவாளிகளை பாராசூட்மூலம் இறக்கிக்கொண்டிருந்தது சிஐஏ. இதில் ஆபத்து அதிகம் என்பதால், பின்னர் ரகசிய கேமெராக்கள் பொருத்திய பலூன்களை அனுப்பிவைக்கத் தொடங்கினார்கள்.

இதையும், சோவியத் யூனியன் மோப்பம் பிடித்துவிட்டது. அமெரிக்கா அனுப்பிய பலூன்களைக் கைப்பற்றி, அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்துப்போட்டு ஆராய்ந்தார்கள். சிஐஏவின் சில்மிஷங்கள் அனைத்தும் அவர்களுக்கு வெட்டவெளிச்சமாகிவிட்டது.

உடனடியாக, பத்திரிகை நிருபர்களைக் கூப்பிட்டது சோவியத் யூனியன். 'வானிலை ஆராய்ச்சி செய்கிறோம் என்ற பெயரில், அமெரிக்கா எங்களைத் திருட்டுத்தனமாக உளவு பார்க்கிறது' என்று ஆதாரத்தோடு நிரூபித்தார்கள்.

அதன்பிறகு, சிஐஏவுக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை. பாராசூட், பலூன்களையெல்லாம்

Join / Telegram : @Tamil_Books_Library

ஓரமாக ஒதுக்கிவைத்துவிட்டு, என்ன செய்யலாம் என்று தீவிர யோசனையில் மூழ்கினார்கள்.

சோவியத் யூனியனின் அனைத்து நடவடிக்கைகளையும், துல்லியமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் சிஐஏவுக்கு இருந்தது. இதில் அவர்கள் கொஞ்சம் பிசகினாலும், பேர்ல் துறைமுகத் தாக்குதலைப்போன்ற இன்னோர் அதிர்ச்சியை அமெரிக்கா சந்திக்க நேர்ந்துவிடும்.

இதற்காக எத்தனை செலவு செய்யவும் சிஐஏ தயாராக இருந்தது. சோவியத் யூனியன் என்கிற இரும்புத் திரைக்குள் என்னதான் நடக்கிறது, அவர்களின் சிவப்பு ராணுவம் என்ன செய்துகொண்டிருக்கிறது, அவர்களுடைய ஆயுத பலம் எப்படிப்பட்டது, அணு ஆராய்ச்சி எந்த நிலையில் இருக்கிறது, கண்டம் விட்டுக் கண்டம் பாய்கிற ஏவுகணைகளையெல்லாம் அவர்கள் தயார் செய்துவிட்டதாகச் சொல்கிறார்களே, அமெரிக்காவை நோக்கி அதைத் திருப்பி வைத்துக்கொண்டு ஸ்விட்ச் போடக் காத்திருப்பதாகப் பேசிக்கொள்கிறார்களே, அதெல்லாம் உண்மைதானா.

கேள்விகள், கேள்விகள். எதற்கும் பதில்தான் தெரியவில்லை. சிஐஏவின் பொறுமை தீர்ந்துகொண்டிருந்தது.

1960ம் ஆண்டு, மே 1ம் தேதி. 'Lockheed U-2' என்ற வகையைச் சேர்ந்த ஓர் அமெரிக்க விமானம், பாகிஸ்தானிலிருந்து நார்வே நோக்கிப் பறந்து சென்றது. அதனை ஓட்டிச்சென்ற விமானியின் பெயர், ஃப்ரான்சிஸ் கேரி பவர்ஸ் (Francis Gary Powers).

பாகிஸ்தான், பிரச்னையில்லை. நார்வேகூட ஓகேதான். இரண்டுக்கும் நடுவில், சோவியத் யூனியன் இருக்கிறதே, அதுதான் பிரச்னையாகிவிட்டது.

இப்படி ஓர் அமெரிக்க விமானம் தங்கள் எல்லைக்குமேல் பறக்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட சோவியத்

Join / Telegram : @Tamil_Books_Library

யூனியன், நிச்சயமாக அது ஓர் உளவு விமானம்தான் என்று முடிவுகட்டிவிட்டது. உடனடியாக, அதனைத் தாக்கிக் கீழே இறக்க முயன்றார்கள்.

இந்தத் தாக்குதலில், U-2 விமானம் கட்டுப்பாடு இழந்து கீழே விழத் தொடங்கியது. அதன் விமானி பவர்ஸ், பாராசூட்மூலம் குதித்து உயிர் தப்பினார்.

இதையடுத்து, அமெரிக்க விமானம், விமானி இரண்டையும் சோவியத் வீரர்கள் சுற்றி வளைத்துப் பிடித்துவிட்டார்கள். ஆனால், வேண்டுமென்றே இந்த விஷயத்தை வெளியே சொல்லாமல் மறைத்துவிட்டார்கள்.

திடீரென்று தங்கள் விமானத்தைக் காணோம் என்றதும், அமெரிக்கா சும்மா இருக்குமா? 'எங்களுடைய ஆராய்ச்சி விமானம் ஒன்று தொலைந்துபோய்விட்டது' என்று பகிரங்கமாக அறிவித்தார்கள்.

இதற்காகவே காத்துக்கொண்டிருந்த அப்போதைய சோவியத் அதிபர் குருச்சேவ் (Nikita Khrushchev) ஓர் அறிக்கை வெளியிட்டார், 'சோவியத் யூனியனை உளவு பார்க்க வந்த ஒரு விமானத்தை, நாங்கள் சுட்டு வீழ்த்தியிருக்கிறோம்'

'அடடா, அது எங்கள் விமானம்தான்' என்று ஒப்புக்கொண்டது அமெரிக்கா, 'ஆனால், அது உளவு விமானம் இல்லையே, நாங்கள் ஏன் உங்களை உளவுபார்க்கப்போகிறோம்? அபசாரம், அபசாரம்' என்றார்கள் நல்ல பிள்ளைகள்போல்.

அதன்பிறகுதான், திரைமறைவு விவகாரங்கள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. உயிரோடு பிடிபட்டிருந்த அமெரிக்க விமானி பவர்ஸ், U-2 விமானத்தினுள் சிக்கியிருந்த ரகசிய காமெரா, அதில் பதிவாகியிருந்த சோவியத் புகைப்படங்கள் என்று ஒவ்வொரு அதிர்ச்சியாக வெளிக்கொண்டுவந்தது சோவியத் யூனியன்.

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்கா, சிஐஏவுக்கு அவமானத்தில் முகத்தை எங்கே புதைத்துக்கொள்வது என்று தெரியவில்லை. அவர்கள் சோவியத் யூனியனை உளவு பார்த்திருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இதன்மூலம், அமெரிக்கா - சோவியத் இடையிலான நல்லுறவுப் பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்பட்டன. 'அமெரிக்கா தனது உளவு நடவடிக்கைகளுக்கு மன்னிப்புக் கேட்டாகவேண்டும்' என்று முறைத்துக்கொண்டார் குருச்சேவ். 'சான்ஸே இல்லை' என்று சொல்லிவிட்டார் அமெரிக்க அதிபர் ஐஸ்னோவர் (Dwight D Eisenhower).

இதைப்பற்றியெல்லாம் சிஐஏ அவ்வளவாக அலட்டிக்கொள்ளவில்லை, இப்போது அவர்களுடைய கவலையெல்லாம், இந்த சோவியத் சனியனை எப்படிதான் உளவு பார்ப்பது?

பாராசூட்டில் ஆள் அனுப்பினால் பிடித்து உள்ளே தள்ளுகிறார்கள், பலூன் அனுப்பினால் ஊசியால் குத்தி வெடிக்கவைக்கிறார்கள், விமானம் அனுப்பினால் சுட்டுக் கீழே இறக்கிவிடுகிறார்கள். பின்னே இவர்களை என்ன செய்யமுடியும்?

இனிமேல், ஆள்களை நம்பிப் பிரயோஜனமே இல்லை என்று, தொழில்நுட்பத்தை நம்பத் தொடங்கியது அமெரிக்கா. ஆளில்லாத உளவு விமானங்கள், செயற்கைக்கோள்கள் போன்றவற்றை உருவாக்கும் ஆராய்ச்சிகளில் இறங்கினார்கள்.

அடுத்த பல வருடங்களுக்கு, சிஐஏவின் முக்கிய ஆயுதங்கள், இந்தத் தொழில்நுட்ப உளவாளிகள்தான். வருடாந்திர பட்ஜெட்டில் ஏகப்பட்ட பணத்தை விழுங்கினாலும், இவற்றின்மூலம், உட்கார்ந்த இடத்தில் உலகம் மொத்தத்தையும் அவர்களால் உளவு பார்க்கமுடிந்தது.

அப்படி அவர்கள் ஊர்முழுக்க உளவு பார்த்துக்கொண்டிருந்தபோதுதான், க்யூபாவிலிருந்து வந்த

Join / Telegram : @Tamil_Books_Library

ஒரு தகவல் அவர்களை உறுத்தியது - சோவியத் யூனியன் கப்பல்கள் அடிக்கடி க்யூபாவுக்கு வந்துபோகின்றன.

'சோவியத்துக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?' என்று கேட்டால், தாடிக்கார ஃபிடல் காஸ்ட்ரோ கண்டிப்பாக பதில் சொல்லப்போவதில்லை. குருச்சேவ் அவரைவிடக் கெட்டி, வாயைத் திறக்கக்கூடமாட்டார்.

இந்த விஷயத்தை நாமேதான் கண்டுபிடிக்கவேண்டும் என்று முடிவுசெய்தது சிஐஏ. இதற்காகத் தங்களது 'U-2' உளவு விமானங்களை க்யூபாவுக்கு அனுப்பிவைத்தார்கள்.

காஸ்ட்ரோவின் பாதுகாப்புப் படை வலுவானதுதான். ஆனால், சோவியத் யூனியன் அளவுக்கு அவர்களிடம் ஆயுத பலமோ, நவீன தொழில்நுட்பங்களோ இல்லை. ஆகவே, அமெரிக்காவின் இந்த அத்துமீறலை அவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை.

இதனால், க்யூபாவில் சந்தேகத்துக்கு இடமான பல பகுதிகளை நன்றாகப் படம் எடுத்துக்கொண்டு அமெரிக்க விமானங்கள் திரும்பிச் சென்றன. கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு இந்தப் புகைப்படங்களை அலசி ஆராயத் தொடங்கியது சிஐஏ.

க்யூபாவில் தங்களுக்கு முளைத்திருக்கிற புது அபாயத்தைத் தெரிந்துகொள்வதற்கு, சிஐஏவுக்கு பூதக் கண்ணாடி எதுவும் தேவைப்படவில்லை - அங்கே புதிதாக சில ஏவுகணைத் தளங்கள் அமைக்கப்பட்டுக்கொண்டிருப்பதைப் புகைப்படங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டின.

ஆனால், அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள், மற்ற தடங்கல்களால் அப்போதுதான் தட்டுத்தடுமாறி முன்னேறிக்கொண்டிருந்த தேசம் க்யூபா. ஏவுகணை தயாரிக்கும் அளவுக்கு அவர்களிடம் ஏது காசு?

க்யூபாவிடம் காசு இல்லைதான். ஆனால், சோவியத் யூனியனிடம் இருக்கிறதே. தன்னுடைய நெடுநாள்

Join / Telegram : @Tamil_Books_Library

விரோதிகள் இருவரும் இந்த விஷயத்தில் கை கோர்த்துக்கொண்டு செயல்படத் தொடங்கிவிட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டது அமெரிக்கா.

சோவியத் யூனியனின் பிரமாதமான ராஜ தந்திர நடவடிக்கை அது. இதன்மூலம், அவர்களுக்குக் கண்டம் விட்டுக் கண்டம் பாய்கிற ராட்சஸ ஆயுதங்களைத் தயாரிக்கக்கூட அவசியம் இல்லை. குறைந்த தூரம் பாயக்கூடிய ஏவுகணைகளை உருவாக்கினாலே போதும்.

இந்த ஏவுகணைகள், சோவியத் யூனியனிலிருந்து பறந்து வந்து அமெரிக்காவைத் தாக்கமுடியாதுதான். ஆனால், அமெரிக்காவிலிருந்து சொற்ப தூரத்தில் இருக்கிற க்யூபாவிலிருந்து ஏவினால்?

அமெரிக்காவை மிரட்டிப் பணியவைப்பதற்கு இது ஒன்றுதான் வழி என்று சோவியத் யூனியன் தீர்மானித்திருக்கலாம். 'வாருங்கள், இந்த நல்ல காரியத்துக்கு க்யூபாவைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்' என்று தாராளமாகக் கதவைத் திறந்துவைத்துவிட்டார் ஃபிடல் காஸ்ட்ரோ.

இனிமேல் ரகசிய உளவெல்லாம் சரிப்படாது என்று நினைத்த அமெரிக்கா, க்யூபாவில் சோவியத் ஏவுகணைகள் தாக்குதலுக்குத் தயாராகிக்கொண்டிருப்பதாக அறிவித்தது. இந்த விஷயம் தங்களுக்கு எப்படித் தெரியும் என்றெல்லாம் சொல்லவில்லை. ஆனால், 'இது அமெரிக்காவுக்கு எதிரான மறைமுக யுத்தம்' என்று பொறுமினார் அதிபர் கென்னடி.

க்யூபாவில் நடப்பவை அனைத்தும், அமெரிக்காவின் பாதுகாப்புக்கு விரோதமானவை. ஆகவே, உடனடியாக அவர்கள் இந்தச் சில்மிஷங்களை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றது அமெரிக்கா.

காஸ்ட்ரோவா கேட்கிற ஆள்? 'சர்த்தான் போய்யா' என்று அவர் தன்னுடைய வேலையைப் பார்த்துக்கொண்டு

Join / Telegram : @Tamil_Books_Library

சும்மா இருந்துவிட்டார்.

ஒருகட்டத்தில், அமெரிக்காவின் பொறுமை கடந்துவிட்டது. 1962 அக்டோபர் இறுதியில், அமெரிக்கா க்யூபாமீது படையெடுக்கப்போவதாக அறிவித்தது.

அதன்பிறகுதான், இந்த விவகாரத்தில் ஒரு முடிவு வந்தது. சோவியத் யூனியன் தனது ஏவுகணைகளை க்யூபாவிலிருந்து விலக்கிக்கொள்ள முன்வந்தது. இதைத் தொடர்ந்து, அமெரிக்கா தனது தாக்குதல் முயற்சிகளை நிறுத்திக்கொண்டது.

அப்போதும், அவர்கள் சோவியத் யூனியன், க்யூபாவை முழுமையாக நம்பவில்லை. சிஐஏ தனது உளவு விமானங்களைத் தொடர்ந்து இந்த இரு நாடுகளின் எல்லைகள்மீது பறக்கச் செய்து நிமிடத்துக்கு நிமிடம் ஃபோட்டோ பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

இந்தப் புகைப்படங்களின்மூலம், சோவியத் ஏவுகணைகள் க்யூபாவிலிருந்து அகற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட்டது. இந்தத் தகவல் சிஐஏ அறிக்கையாக அமெரிக்க அதிபரைச் சென்றடைந்தபிறகுதான், அவர் கொஞ்சம் நிம்மதியாக மூச்சுவிடத் தொடங்கினார்.

ஒருவேளை சோவியத் ஏவுகணைகள் க்யூபாவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டுத் தயாராகியிருந்தால், அவர்களால் எந்த முக்கிய அமெரிக்க நகரத்தையும் அழித்திருக்கமுடியும். இப்படி ஓர் அதிபயங்கரமான ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்திருக்கிறோம் என்கிற நினைப்பு, சிஐஏவைச் சும்மா உட்கார அனுமதிக்கவில்லை.

இன்றைக்கு க்யூபாவிலிருந்து ராக்கெட் விட நினைத்த சோவியத், நாளைக்கு வேறொரு திசையில் ஏதோ ஓர் ஆளில்லாத தீவில் உட்கார்ந்துகொண்டு மறுபடியும் அமெரிக்காவை மிரட்டமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

Join / Telegram : @Tamil_Books_Library

இதனால், சிஐஏ மீண்டும் தங்களது உளவு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கினார்கள். அமெரிக்காவுக்கு எதிராக, அல்லது, அமெரிக்க விரோதிகளுக்கு ஆதரவாக உலகம்முழுவதும், யார் என்ன செய்கிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டாகவேண்டும்.

இந்த விஷயத்தில் நட்பு நாடு, எதிரி நாடு என்கிற வித்தியாசமே வேண்டாம். 'என் கடன் உளவு செய்து கிடப்பதே' என்று எல்லோர்மீதும் தங்களது விமானங்களை ஏவி ஃபோட்டோ பிடிக்கத் தொடங்கியது சிஐஏ. மிஞ்சிய நேரத்தில், அந்தந்த ஊர்களில் சிஐஏ அலுவலகங்களை ரகசியமாக அமைத்து, உள்ளூர் ஆள்களை ஏஜென்ட்களாக பிடித்துப்போட்டார்கள்.

உளவுத்துறையில், இயந்திரங்களைவிட மனித உளவாளிகள், ஒற்றர்களுக்குதான் மரியாதை அதிகம். ஆனால், எல்லாவற்றுக்கும் மனிதர்களை நம்பிக்கொண்டிருக்கமுடியாது. வருடத்தில் எல்லா நாள்களும், இருபத்து நான்கு மணி நேரமும் உலகத்தைத் தொடர்ந்து கண்காணிக்கவேண்டிய அவசியம் சிஐஏவுக்கு இருந்தது. அத்தனை உளவாளிகளுக்கு எங்கே போவது?

இங்கேதான், சிஐஏவுக்குத் தொழில்நுட்பம் கை கொடுத்தது. தங்களது உளவு நடவடிக்கைகளுக்குச் செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

செயற்கைக் கோள் தயாரிப்பதும், அதை விண்ணில் சுற்றிவரச் செய்வதும் ஏகப்பட்ட செலவு பிடிக்கிற சமாசாரம். இதற்கு வசதியாக, அமெரிக்க அரசாங்கம் சிஐஏவின் வருடாந்திர பட்ஜெட்டைப் படிப்படியாக உயர்த்திக்கொண்டிருந்தது.

வெளிநாடுகளை உளவு பார்ப்பதற்காக இத்தனை டாலர் செலவழிக்கவேண்டுமா என்று யாரும் அமெரிக்காவைக் கேள்வி கேட்கவில்லை. அப்படியே கேட்டாலும், இரண்டே

Join / Telegram : @Tamil_Books_Library

வார்த்தைகளில் அவர்களை அடக்கிவிடுவார்கள் - தேசப் பாதுகாப்பு. அதைவிட, வேறெதுவும் முக்கியமில்லை.

எழுபதுகளின் இறுதிவரை, அமெரிக்கா தங்களது உளவுச் செயற்கைக்கோள்களைப்பற்றி வெளியே சொல்லவில்லை. விமானத்தில் ஆள் அனுப்பினால்தானே சுட்டுக் கீழே இறக்குவீர்கள், இப்போது என்ன செய்யமுடியும் என்று கமுக்கமாக இருந்துவிட்டார்கள்.

பனிப்போரின் உச்சத்தில், அமெரிக்கா, சோவியத் இரண்டுமே இப்படி ஏட்டிக்குப் போட்டியாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அடுத்தவரை உளவு பார்க்கும் முயற்சிகளில் இறங்கியிருந்தன. இதனால், சிஐஏவின் பட்ஜெட்டும் அதிகார பலமும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன் பின்விளைவு சாத்தியங்களை, அமெரிக்காவோ, சோவியத் யூனியனோ, மற்ற நாடுகளோ அப்போது உணரவில்லை.

சொந்த நாட்டைப் பாதுகாப்பது என்கிற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட சிஐஏ, கொஞ்சம் கொஞ்சமாக அதீத சக்தி வாய்ந்த ஓர் இயக்கமாக மாறிக்கொண்டிருந்தது. இப்படி அதன் பலம் அதிகரிக்கும்போது, சிஐஏவின் அடிப்படை நோக்கம் வேறோர் உருவம் எடுத்துவிட்டது.

கொஞ்சம் புரியும்படி சொல்வதானால், நம் வீட்டுக்கு ஒரு காவல்காரர் இருக்கிறார். அவரிடம், 'வெளியிலிருந்து யாரும் உள்ளே நுழைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்' என்கிறோம். எதற்கும் இருக்கட்டும் என்று அவர் கையில் ஒரு மூங்கில் பிரம்பைக் கொடுத்துவைக்கிறோம்.

இப்படி மூங்கில் பிரம்பில் தொடங்கியது, குண்டாந்தடியாக மாறி, பிறகு பிஸ்டல், ஏகே47 என்று நவீனமாகிறது. வீட்டைச் சுற்றிலும் உளவு பார்ப்பதற்குக் கேமெராக்கள், உதவிக்கு நான்கைந்து பேர் என்று இப்போது அந்தக் காவல்காரரின் கம்பீரம் கூடியிருக்கிறது.

Join / Telegram : @Tamil_Books_Library

அதன்பிறகு, அவர் என்ன செய்கிறார்? நம் வீட்டைப் பாதுகாக்கிறேன் பேர்வழி என்று, பக்கத்து வீட்டில் எட்டிப்பார்க்கிறார், 'யோவ், அங்கென்ன கலாட்டா?' என்று அதட்டுகிறார். அங்கே நடப்பது அவருக்குப் பிடிக்காவிட்டால், உள்ளே நுழைந்து குழப்பம் விளைவிக்கிறார்.

இது என்ன அயோக்கியத்தனம் என்று தோன்றுகிறதில்லையா? சிஐஏவின் பரிமாண வளர்ச்சியும் கிட்டத்தட்ட இதேமாதிரியானதுதான்.

ஆரம்ப காலத்திலேயே வெளிநாடுகளின் விவகாரங்களில் தைரியமாக மூக்கை நுழைந்த சிஐஏ, எழுபதுகளில் கூடுதல் பலத்துடன் இயங்கத் தொடங்கியிருந்தது. அநேகமாக எல்லா நாடுகளிலும் உளவாளிகள், ஒற்றர்கள், நவீன உபகரணங்கள், தொலைபேசிப் பேச்சுகள், கடிதங்கள், இன்னபிற தொடர்புகளை வழிமறித்துப் படிக்கிற வசதிகள், உளவு விமானங்கள், செயற்கைக்கோள்கள் ஆகியவற்றின் உதவியுடன், உலகம்முழுவதிலும் தங்களுடைய கண்களை அழுந்தப் பதித்திருந்தார்கள்.

இவற்றையெல்லாம் பயன்படுத்தி, அமெரிக்காவுக்கு எதிராக ஏதேனும் நடக்கிறதா என்று கவனிப்பதுதான் சிஐஏவின் முக்கிய வேலை. ஆனால் மறைமுகமாக அவர்கள் செய்த காரியம், எல்லோரும் அமெரிக்காபோல் சிந்திக்கவேண்டும், அமெரிக்கக் கொள்கைகளுக்கு ஆதரவாகதான் நடக்கவேண்டும், மறுத்தால், உள்ளே புகுந்து குழப்பம் செய்வோம்.

அமெரிக்கா - சோவியத் இடையிலான பனிப்போர், சிஐஏவின் கைங்கர்யம்தான் என்று சொல்கிறவர்கள் உண்டு. அது நிஜமோ, பொய்யோ தெரியாது. ஆனால், அமெரிக்காவை உலகின் காவல்காரனாக மாற்றிய புண்ணியம் (அல்லது பாவம்), முழுக்கமுழுக்க சிஐஏவினுடையதுதான்!

Join / Telegram : @Tamil_Books_Library

## 7. ரௌடி

அது ஒரு சாதாரண 'திருட்டு கேஸ்'!

ஏதோ ஓர் அலுவலகத்தில், ஐந்து பேர் உள்ளே நுழைந்து திருட முயன்றிருக்கிறார்கள். அப்போது அந்தப்பக்கமாக ரோந்து வந்த காவல்காரரிடம் கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டார்கள்.

அவர்களை விசாரித்த நீதிபதிக்கே, இந்த வழக்கில் பெரிதாக எந்த ஆர்வமும் இல்லை. 'பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவும் ஒன்று' என அசுவாரஸ்யமாகதான் வழக்கு விசாரணைகளை கவனித்துக்கொண்டிருந்தார். மனத்துக்குள், இவர்களை எத்தனை வாரம் உள்ளே தள்ளலாம் என்று ஒரு கணக்கு ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால், அரசுதரப்பு வழக்கறிஞர்மட்டும் இந்த வழக்கை அத்தனை சுலபத்தில் விடுவதாக இல்லை. 'இதில் ஏதோ மர்மம் இருக்கிறது, தீர விசாரிக்காமல் முடிவெடுக்கமுடியாது' என்றார் அவர்.

கதவை உடைத்துத் திருடுகிற அயோக்கியப் பயல்களிடம் அப்படி என்ன பெரிய மர்மம் இருந்துவிடப்போகிறது?

பிடிபட்ட ஐவரையும் நிதானமாக விசாரித்தபோது, அவர்கள் க்யூபாவிலிருந்து தப்பிவந்த அகதிகள் என்பது தெரிந்தது. அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் திருடுகிற வர்களாகத் தெரியவில்லை. காரணம், ஒவ்வொருவரிடமும் ஏகப்பட்ட பணம் இருந்தது.

பாக்கெட்டில் இத்தனை பணத்தை வைத்துக்கொண்டு, இவர்கள் கொள்ளையடிக்கப் புறப்படவேண்டிய அவசியம் என்ன? திருடுவது என்று முடிவெடுத்தவர்கள், போயும்போயும் ஒரு கட்சி அலுவலகத்தினுள் நுழைந்தது ஏன்? திருடக் கிளம்பியவர்கள், கையோடு ஏதேதோ எலக்ட்ரானிக் சாதனங்களையெல்லாம்

Join / Telegram : @Tamil_Books_Library

கொண்டுவந்திருக்கிறார்கள், எதற்கு? பிடிபட்டபோது, வேண்டுமென்றே தவறான பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஏன்?

நீதிபதிக்கு லேசான சுவாரஸ்யம் தட்டியது. குற்றம் சாட்டப்பட்டவர்களை இன்னும் கொஞ்சம் தோண்டித் துருவத் தொடங்கினார்.

மிகவும் வற்புறுத்தியபிறகு, ஐந்து பேரில், ஒருவன்மட்டும் பேசினான், 'நான் ஒரு க்யூப அகதி, இதற்குமுன், சிஐஏவுக்குப் பாதுகாப்பு ஆலோசகராகப் பணிபுரிந்திருக்கிறேன்'

அவ்வளவுதான். அதுவரை சாதாரண வழக்காக இருந்த 'வாட்டர்கேட் விவகாரம்', அந்த வினாடியிலிருந்து சரித்திரத்தில் இடம் பிடித்துவிட்டது.

க்யூபாவில் சிஐஏ நடத்திய, நடத்திக்கொண்டிருக்கிற தில்லுமுல்லுகள் எல்லோருக்கும் தெரிந்த ரகசியம். அவர்களோடு தொடர்புடைய சிலர், அதுவும், க்யூபாவிலிருந்து தப்பிவந்த அகதிகள், ராத்திரி வேளையில், அமெரிக்காவின் முக்கிய எதிர்க்கட்சியான மக்களாட்சிக் (டெமாக்ரடிக்) கட்சியின் அலுவலகத்தில் நுழைந்து ஏதோ சில்மிஷம் செய்திருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு, அது அமெரிக்காவில் தேர்தல் நேரம். அப்போதைய அதிபர் ரிச்சர்ட் நிக்ஸன் (Richard Milhous Nixon) மீண்டும் ஆட்சிப் பொறுப்பைப் பிடிப்பதற்காகத் தீவிர பிரசாரங்களில் இறங்கியிருந்தார்.

இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, அன்றைய இரவில், வாட்டர்கேட் என்ற அந்த ஹோட்டல் வளாகத்தில் என்ன நடந்திருக்கும் என்பதை அமெரிக்கப் பொதுமக்களால் சுலபத்தில் ஊகித்துவிடமுடிந்தது.

நம்முடைய உளவு நிறுவனங்கள், அடுத்தவர்களை உளவு பார்ப்பதோடு நிறுத்திக்கொள்வதில்லை, நம்மீதும் ஒரு கண் வைத்திருக்கிறார்கள் என்பது தெரிந்தபோது,

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்கர்கள் அதிர்ந்துபோனார்கள். இந்த துரோகத்தை அவர்களால் ஜீரணித்துக்கொள்ளவே முடியவில்லை.

வாட்டர்கேட் விவகாரத்தால், அதிகம் பாதிக்கப்பட்டவர் என்று பார்த்தால், அதிபர் நிக்ஸன்தான். மிகக் கேவலமானமுறையில் அவர் பதவி விலகவேண்டியிருந்தது.

ஆனால், அமெரிக்கர்கள் அதோடு சமாதானமடையவில்லை. நிக்ஸன் கிடக்கிறார், அரசியல்வாதி, ஓட்டுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார், இந்த உளவு நிறுவனங்களுக்கு எங்கே போச்சு புத்தி?

அமெரிக்காவின் உள்விவகாரங்களைக் கண்காணிப்பதற்காக FBI, வெளிவிவகாரங்களுக்கு CIA என்று அங்கே இரண்டு உளவு நிறுவனங்கள் உண்டு. இரண்டுக்குமான எல்லைகள் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தாலும், இவர்களுக்குள் நீ உசத்தியா, நான் உசத்தியா என்கிற அதிகாரப் போட்டிகளை எப்போதும் தவிர்க்கமுடிந்ததில்லை.

ஆனால், அமெரிக்கக் குடிமக்களை உளவு பார்ப்பதில்மட்டும், இவர்கள் கை கோர்த்துக்கொண்டு செயல்பட்டிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் பயன்படுத்திய வழிமுறைகள் பல, மனிதாபிமானமற்றவை, சட்டவிரோதமானவை என்பது தெரியவந்தது.

வாட்டர்கேட் விவகாரம் வரிசையாகப் பல திடுக்கிடும் தகவல்களை வெளிக்கொண்டுவந்தது. முதன்முறையாக, அமெரிக்கர்கள் தங்களுடைய உளவு நிறுவனங்களைக் கொஞ்சம் கோபத்தோடு பார்க்கத் தொடங்கினார்கள்.

அமெரிக்காவைப் பாதுகாக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, இவர்கள் அப்படி என்ன செய்கிறார்கள்? வெளிநாடுகளில் குழப்பம் விளைவிக்கிறார்கள், தீவிரவாதிகளுக்குப் பணமாகவும்,

Join / Telegram : @Tamil_Books_Library

ஆயுதங்களாகவும் அள்ளிக்கொடுத்து ஆதரவளிக்கிறார்கள், தங்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளாத அரசாங்கங்களைக் கவிழ்க்கிறார்கள், அல்லது, அந்த அரசுகளின் தலைவர்களைக் கொல்கிறார்கள், இதெல்லாம் எந்த ஊர் நியாயம்?

இதுமாதிரியான கேள்விகளையெல்லாம் சிஐஏவிடம் வேறு யாரேனும் கேட்டிருந்தால், 'சர்த்தான் போய்யா' என்று அலட்சியப்படுத்திவிட்டுப் போயிருப்பார்கள். ஆனால் இந்தமுறை, அமெரிக்கர்களே கேட்கிறார்கள். அவர்களுடைய வரிப்பணத்தில் இயங்குகிற ஓர் அமைப்பு, பதில் சொல்லிதான் ஆகவேண்டும்.

இந்த விஷயத்தில், சிஐஏ வலியுறுத்தக்கூடிய நியாயம் என்று எதுவும் இல்லை. ஆகவே, அவர்கள் பிடிவாதமாக மௌனம் காத்தார்கள். அவர்களுடைய பங்காளிகளான FBIயும் அவ்வாறே.

ஒருவேளை, அவர்கள் வாய் திறந்து பேசியிருந்தாலும், என்ன பெரிதாகச் சொல்லியிருக்கமுடியும்? மிஞ்சிப்போனால், 'தேசப் பாதுகாப்புக்காகதான் இதையெல்லாம் செய்தோம்' என்று சொல்வார்கள். அதை இனிமேல் யாரும் நம்பத் தயாராக இல்லை.

வாட்டர்கேட் விவகாரத்தைத் தொடர்ந்து சிஐஏவின் நடவடிக்கைகள்மீது ஒரு பெரிய பூதக் கண்ணாடி விழுந்தது. அங்கே என்ன நடக்கிறது என்று மக்கள் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள், முதன்முறையாக, அதன் செயல்பாடுகளைப் பத்திரிகைகள் பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்தன.

விழுந்த இமேஜை எப்படி மீண்டும் தூக்கி நிறுத்துவது என்று சிஐஏ கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், அங்கிருந்த ஒருவர்மட்டும் கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்தித்தார்.

அவர் பெயர் வில்லியம் கால்பி (William E Colby). சிஐஏ செயல் பிரிவின் துணைத் தலைவராக

Join / Telegram : @Tamil_Books_Library

இயங்கிக்கொண்டிருந்த கால்பி, 'சிஐஏ தன்னைத் தானே சுயபரிசோதனை செய்துகொள்ளவேண்டிய நேரம் இது' என்றார்.

'இந்த விஷயத்த்¢ல் அதிகம் உணர்ச்சிவயப்பட்டுப் பிரயோஜனமே இல்லை. ஏதோ தப்பு நடந்துவிட்டது. இல்லாவிட்டால், இத்தனை ஜனங்கள் நமக்கு எதிராகத் திரும்பமாட்டார்கள். ஆகவே, கொஞ்சம் நிதானமாக உட்கார்ந்து யோசிப்போம், நம்மீது தவறு இருந்தால் திருத்திக்கொள்வோம்' என்றார் கால்பி.

வேறொரு சந்தர்ப்பத்தில் அவர் இதைச் சொல்லியிருந்தால், கையில் டிஸ்மிஸ் ஆர்டரைக் கொடுத்து வெளியே அனுப்பியிருப்பார்கள். ஆனால் இப்போது, அவருடைய பேச்சில் கொஞ்சம் நியாயம் இருப்பதாகத் தோன்றியது.

ஆகவே, அப்போதைய சிஐஏ இயக்குனர் (James R. Schlesinger) கால்பியின் யோசனையை ஏற்றுக்கொண்டார். தன்னுடைய மூத்த அதிகாரிகள் எல்லோரையும் வரவழைத்து, அவர்களிடம் இதுபற்றி விரிவாகப் பேசினார்.

(Italics Start)நண்பர்களே, தேசத்தைக் காப்பாற்றுகிற வேகத்தில், நாம் எல்லோரும் ஏதாவது ஒன்றிரண்டு தவறுகள் செய்திருக்கலாம். அல்லது, வேறொருவர் செய்த தப்புகளைப்பற்றி அரசல்புரசலாகக் கேள்விப்பட்டிருக்கலாம்.

இதுவரை, அதையெல்லாம் வெளியே சொல்வது சரியாக இருக்காது என்று மறைத்துவிட்டோம், இப்போது வேறு யாரோ அதைக் கண்டுபிடித்து நம்முடைய மூக்கை உடைத்துவிட்டார்கள்

நாம்தான் மற்றவர்களை உளவு பார்க்கவேண்டும். அவர்கள் நம்மை உளவு பார்த்தால், அது நமக்குதான் அசிங்கம். ஆகவே, இந்த விஷயத்தில் நாம் ஒரு முடிவெடுக்கவேண்டியது அவசரத் தேவையாகிவிட்டது.

Join / Telegram : @Tamil_Books_Library

சிஐஏ உளவு அமைப்பு, சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது. நாம் இப்படிதான் இயங்கவேண்டும் என்று அரசியல் சட்டம் நமக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது.

ஆனால் உண்மையில், நாம் அதன்படிதான் நடக்கிறோமா? அல்லது இஷ்டம்போல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோமா? எங்கேயெல்லாம், எப்போதெல்லாம் சிஐஏவின் அடிப்படை நோக்கங்களில் நாம் சமரசம் செய்துகொண்டிருக்கிறோம்? சட்டத்தை மீறியிருக்கிறோம்? அத்தனையையும் நாம் கவனித்துப் பதிவு செய்தாகவேண்டும்.

இந்த விஷயத்தில் வெட்கப்படுவதற்கோ, பயப்படுவதற்கோ அவசியம் இல்லை. நாம் என்ன தவறு செய்திருக்கிறோம் என்று தெளிவாகத் தெரிந்தால்தான், அதைச் சரி செய்துகொள்வது சாத்தியம். (Italics End)

சிஐஏ இயக்குனரே இப்படிச் சொல்லிவிட்டபிறகு, மற்ற அதிகாரிகளும் மனம் திறக்கத் தொடங்கினார்கள். சிஐஏ செயல்படும்விதத்தில், அது பயன்படுத்திய, பயன்படுத்துகிற வழிமுறைகளில் தங்களுக்குத் தவறு என்று தோன்றியதையெல்லாம் விளக்கமாகப் பட்டியல் போட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

இப்படி சிஐஏ ஊழியர்களிடமிருந்து திரட்டப்பட்ட குற்றச்சாற்றுகளையெல்லாம் கால்பி தொகுத்துப் பார்த்தபோது, அது கிட்டத்தட்ட எழுநூறு பக்கங்களைத் தொட்டிருந்தது. இந்த ரகசிய ஆவணத்துக்கு, 'குடும்ப நகைகள்' (Family Jewels) என்று செல்லப் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இதற்குள், பழைய சிஐஏ இயக்குனர் விலகியிருந்தார். புதிய இயக்குனராக, வில்லியம் கால்பி தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவிக்கு வந்ததும், அவர் சந்தித்த முதல் பிரச்னை - இந்தக் 'குடும்ப நகை'களை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

Join / Telegram : @Tamil_Books_Library

சிஐஏவின் நடவடிக்கைகளில் இத்தனை பிரச்னைகள், குறைகள், சட்டமீறல்கள் இருக்கக்கூடும் என்று கால்பியே எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தப் பட்டியலை நிதானமாக வாசித்து, 'படுபாவிகள், இப்படியெல்லாம் அயோக்கியத்தனம் செய்திருக்கிறார்களே' என்று உச்சுக்கொட்டமட்டும்தான் அவரால் முடிந்தது.

ஆனால் அப்போதும், அந்தத் தலையணை சைஸ் குற்றப் பத்திரிகையை, அவர் ஒரு நெகட்டிவ் விஷயமாகக் கருதவில்லை. அதுவரை தன்னிஷ்டம்போல் செயல்பட்டுக்கொண்டிருந்த சிஐஏ, இப்படிக் கொஞ்சம் நிதானமாகத் தன்னைச் சுய பரிசோதனை செய்துகொள்வது நல்ல விஷயம்தான் என்று நம்பினார் அவர். இதன்மூலம், சிஐஏவின் செயல்பாடுகள் கொஞ்சமாவது மேம்பட்டால், நல்லதுதானே?

ஆகவே, வில்லியம் கால்பி அந்தக் 'குடும்ப நகை'ப் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு, நேராக அமெரிக்க அரசாங்கத்திடம் சென்றார். 'ஐயன்மீர், சிஐஏவில் என்னென்ன குறைகள் என்று நாங்களே ஒரு லிஸ்ட் போட்டிருக்கிறோம், இதைப் படித்து, செய்யவேண்டியதைச் செய்யுங்கள்'

கால்பி கொடுத்த பட்டியலை வாசித்ததும், அமெரிக்க அரசுக்கு ஆச்சர்யத்தைவிட, அதிர்ச்சிதான் அதிகமாக இருந்தது.

காரணம், அந்தப் பட்டியலில் இருந்த பெரும்பாலான விஷயங்கள் அவர்களுடைய சம்மதத்துடன் அல்லது ஆசிர்வாதத்துடன்தான் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்தத் தகவல்களெல்லாம் வெளியே தெரியவந்தால், அவர்களுக்குதான் பிரச்னை.

தவிர, இதுபோன்ற நடவடிக்கைகளுக்காக இப்போது சிஐஏமீது நடவடிக்கை எடுத்துவிட்டால், அதன்பிறகு அமெரிக்கா உலகத்தைக் காவல் காப்பது எப்படி? உளவு பார்ப்பது என்ன உப்புமா சமைப்பதுபோல் சுலபமான

Join / Telegram : @Tamil_Books_Library

சமாசாரமா? இப்படி ஆங்காங்கே ஒன்றிரண்டு சட்டமீறல்கள்கூடச் செய்யக்கூடாது என்றால் எப்படி?

நீண்ட யோசனைக்குப்பிறகு, இந்த விஷயத்தில் நாம் தலையிடாமல் இருப்பதுதான் நல்லது என்கிற முடிவுக்கு வந்தது அமெரிக்கா. கால்பி கிடக்கிறார் என்று அவருடைய பட்டியலைக் கிடப்பில் தூக்கிப் போட்டுவிட்டார்கள்.

ஆனால், எப்படியோ இந்த விஷயம் வெளியே கசிந்துவிட்டது. 'நியூ யார்க் டைம்ஸ்' இதழைச் சேர்ந்த சேமர் ஹெர்ஷ் (Seymour Hersh) என்ற பத்திரிகையாளர் இதனை மோப்பம் பிடித்துவிட்டார்.

'சிஐஏ தனது அத்துமீறல்களைப்பற்றி இப்படி ஒரு பட்டியல் தயாரித்திருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மைதானா?' என்று கால்பியிடமே நேரடியாகக் கேட்டுவிட்டார் சேமர் ஹெர்ஷ். கால்பி அதற்கு நேர்மையாக ஒரு பதில் தரப்போக, அது பரபரப்புச் செய்தியாகிவிட்டது.

1974 டிசம்பர் 22ம் தேதி, 'நியூ யார்க் டைம்ஸ்' இதழில் இதுபற்றிய விரிவான கட்டுரை வெளியானது. சிஐஏவின் வெளிநாட்டு நடவடிக்கைகள், அவர்கள் அமெரிக்கக் குடிமக்களை உளவு பார்ப்பது என்று பல விஷ்யாங்கள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகின.

ஏற்கெனவே வாட்டர்கேட் விவகாரத்தில் தொடங்கி சிஐஏவின் பெயர் ஊரெல்லாம் நாறிக்கொண்டிருக்கிறது. இப்போது இந்தச் செய்தி வெளியானபிறகு, எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றி, அதில் அவர்களே எகிறிக் குதித்ததுபோலாகிவிட்டது.

'அமெரிக்க உளவு நிறுவனங்களின் செயல்பாடுகள்பற்றி நேர்மையான விசாரணை வேண்டும்' என்று பத்திரிகைகளும் பொதுமக்களும் கோரிக்கை எழுப்பத் தொடங்கினார்கள். வேறு வழியே இல்லாமல், அமெரிக்க அரசாங்கம் இதற்குச் சம்மதிக்கவேண்டியதாயிற்று.

Join / Telegram : @Tamil_Books_Library

செனட் உறுப்பினர் ஃப்ராங்க் சர்ச் (Frank Church) என்பவர் தலைமையில் இதற்காக ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. 'சர்ச் கமிட்டி' என்று அழைக்கப்பட்ட இந்தக் குழுவினர், அமெரிக்க உளவு நிறுவனங்களின் செயல்பாடுகள், எல்லைமீறல்கள் குறித்து விரிவான விசாரணைகளை நிகழ்த்தினார்கள்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், சர்ச் கமிட்டி தனது முடிவுகளைத் தொடர் அறிக்கைகளாக வழங்கியது. இந்த அறிக்கைகளில், அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள், ஏஜென்ட்களின் நடவடிக்கைகளில் எவையெல்லாம் தவறானவை, அவற்றைச் சரி செய்வதற்கான சிபாரிசுகள் போன்றவை விரிவாக விவாதிக்கப்பட்டன.

எழுபதுகளின் மத்தியில் நிகழ்ந்த இந்த சர்ச் கமிட்டி விசாரணைகளின்போதுதான், சிஐஏ வெளிநாட்டுத் தலைவர்களைக் கொல்வதற்காகச் செய்த முயற்சிகள் பல வெளிச்சத்துக்கு வந்தன. தகவல்கள் சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஓர் உளவுத்துறை, இப்படிக் கொலை வெறி பிடித்துத் திரியவேண்டிய அவசியம் என்ன என்பது பலருக்கு ஆச்சர்யம் அளித்தது. அதற்காக அவர்கள் பயன்படுத்திய வழிமுறைகளைக் கேட்கும்போது, இந்த ஆச்சர்யம் திகிலாகவும் அருவருப்பாகவும் மாறியது.

இதன்மூலம், சிஐஏவுக்குமட்டுமல்ல, அமெரிக்காவுக்கும் அவமானம்தான். அவர்கள் உடனடியாக இதுமாதிரியான நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று அமெரிக்கர்களே விரும்பத் தொடங்கிவிட்டார்கள்.

ஆகவே, இதற்கான விசேஷ உத்தரவு ஒன்று வெளியிட்டது அமெரிக்க அரசு. இதன்மூலம், சிஐஏ வெளிநாட்டுத் தலைவர்களைக் கொல்லும் முயற்சிகள் அனைத்தும் தடை செய்யப்பட்டன.

விஷயம் இதோடு நிற்கவில்லை. சிஐஏ அமெரிக்கக் குடிமக்களை உளவு பார்த்திருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது. கடிதங்களைத் திறந்து படிப்பது, தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக்கேட்பது,

அப்பாவி அமெரிக்கர்களைப் பின்தொடர்ந்து, அவர்களைப்பற்றிய துண்டு துக்கடாத் தகவல்களையெல்லாம் பதிவு செய்துவைப்பது என்று பல விஷயங்களில் அத்துமீறி நுழைந்திருந்தார்கள்.

'ஏன் இப்படிச் செய்தீர்கள்?' என்று கேட்டால், 'அவர்கள் வெளிநாட்டு ஒற்றர்களோ என்று எங்களுக்குச் சந்தேகம், அதுதான் கொஞ்சம் துப்பறிந்தோம்' என்று சுலபமாகச் சொல்லிவிட்டது சிஐஏ. ஆனால் அதற்காக, உள்நாட்டு விவகாரங்களில், அதுவும் இத்தனை அசிங்கமானமுறையில் சிஐஏ மூக்கை நுழைத்திருக்கக்கூடாது என்றது சர்ச் கமிட்டி.

அமெரிக்காவுக்கு வெளியிலும், சிஐஏவின் நடவடிக்கைகளில் ஏகப்பட்ட அத்துமீறல்கள் தெரியவந்தன. குற்றவாளிகள், அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிப்பதற்காக, அவர்களுக்கு போதைப் பொருள்களைக் கொடுத்துப் பழக்கப்படுத்தியிருக்கிறார்கள், பல பேரைக் கைது செய்திருக்கிறோம் என்கிற விஷயத்தையே வெளியில் சொல்லாமல் வருடக்கணக்காக அவர்களை மறைத்துவைத்துக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள், சில நடவடிக்கைகளுக்கு மாஃபியா கும்பலைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று பட்டியல் நீண்டது.

மொத்தத்தில், சிஐஏவைக் கட்டுப்பாடில்லாத ஒரு 'மத யானை' என்று வர்ணித்தது சர்ச் கமிட்டி. இனிமேலும் இவர்களை இப்படி இஷ்டம்போல் இயங்க அனுமதிப்பதற்கில்லை, உடனடியாக அவர்களுடைய அதிகாரங்களைக் குறைத்தாகவேண்டும் என்று சிபாரிசு செய்தது.

ரகசியமானமுறையில் நடந்த சர்ச் கமிட்டி விசாரணை அறிக்கைகள் மற்றும் 'Family Jewels' ஆவணங்களின் பெரும்பாலான பகுதி, இப்போது பகிரங்கமாக வெளியிடப்பட்டுவிட்டது. ஆனால் அப்போது, அமெரிக்கர்களைப்பொறுத்தவரை, சிஐஏவின் வால் ஒட்ட

Join / Telegram : @Tamil_Books_Library

நறுக்கப்பட்டிருக்கிறது என்றுமட்டும்தான் தெரிந்துகொண்டார்கள்.

சர்ச் கமிட்டி சிபாரிசுகளின்படி, சிஐஏவின் பல உளவு நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன, அல்லது மாற்றப்பட்டன. இத்தனை தீவிரமாக உளவு பார்ப்பதும், அடுத்தவர்கள் விஷயத்தில் தலையிடுவதும் நமக்குத் தேவையில்லை, என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்கள். குறிப்பாக, அமெரிக்கர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடுவதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள் என்று ஒரு குட்டும் வைக்கப்பட்டுவிட்டது.

கட்டுக்கடங்காமல் துள்ளிக்கொண்டிருந்த ஓர் அமைப்புக்கு, திடீரென்று இப்படி ஒரு மூக்கணாங்கயிறு போடப்பட்டது அதிர்ச்சிதான். ஆனால், சிஐஏவின் அதிதீவிர நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கிறபோது, அப்போது இல்லாவிட்டாலும், காலப்போக்கில் இது நிச்சயம் நடந்திருக்கும் என்பது புரிகிறது.

ஆனால், சிஐஏ அதிகாரிகள் பலருக்கு, இதில் மிகுந்த மன வருத்தம். 'நாங்கள் உத்தமர்கள் என்று சொல்லவரவில்லை. தப்புச் செய்தோம்தான். ஆனால், அரசாங்கம் தலையசைத்தபிறகுதானே செய்தோம்?' என்று ஆதங்கப்பட்டார்கள்.

இப்படியெல்லாம் செய்யாமல், இந்தக் காலத்தில் உளவுத்துறையை நடத்தமுடியாது என்பது அவர்களுடைய கட்சி. நாட்டின் பாதுகாப்பு என்பது சீரியஸான விஷயம், அதில் சமரசங்களுக்கு இடமில்லை. குற்றவாளிகளைக் கூப்பிட்டு, 'வா ராஜா, உட்கார், காஃபி சாப்பிடுகிறாயா?' என்று தலை வருடிக்கொண்டிருக்கமுடியாது. அதிரடியாக இறங்கினால்தான் உண்டு.

அமெரிக்காவின் விரோதிகளை உளவு பார்ப்பதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும் அரசாங்கம் சிஐஏவுக்குக் கொடுத்திருந்த உரிமையை, நம்பிக்கையை, இப்போது

Join / Telegram : @Tamil_Books_Library

அவர்களே மீறிவிட்டார்கள் என்று அந்த அதிகாரிகள் வருந்தினார்கள்.

இதில் இன்னொரு விஷயம், சர்ச் கமிட்டியால் கண்டுபிடிக்கப்பட்ட பல அத்துமீறல்கள், ஏழெட்டு வருடங்களுக்குமுன்பு நடந்தவை. அவை தவறு என்று புரிந்துகொண்டு, அவற்றை சிஐஏவே திருத்திக்கொண்டிருந்தது.

அதைக் கவனிக்காமல், அநாவசியமாகப் பழைய குப்பைகளைக் கிளறி சிஐஏவை அசிங்கப்படுத்துவது நியாயமில்லை என்பதுதான் அவர்களுடைய முக்கியமான ஆதங்கம். குறிப்பாக, 'ரௌடி'ப்பட்டம் அவர்களை மிகவும் அவமானப்படுத்தியிருந்தது.

சிஐஏவின் இந்த வருத்தங்களை அமெரிக்க அரசு கண்டுகொள்ளவில்லை. ஏற்கெனவே ஏகப்பட்ட அசிங்கங்கள் வெளிவந்துவிட்ட சூழலில், ஊர் வாயை மூடுவதற்காகவேனும் உளவுத்துறையைக் கொஞ்சம் கட்டுப்படுத்திவைப்பதுதான் நல்லது என்று அவர்களுக்குத் தோன்றத் தொடங்கியிருந்தது.

இதனால், எழுபதுகளின் இறுதிப் பகுதியில் தொடங்கி, சிஐஏவின் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வானளாவிய பட்ஜெட், மண்ணுக்கு இறங்கியது. ஆள்குறைப்பு செய்தார்கள், மிச்சமிருந்தவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் லென்ஸ் வைத்துக்கொண்டு ஆராய்ந்தார்கள்.

இப்படி சிஐஏவின் பல் பிடுங்கப்பட்டதில், பலருக்கு சந்தோஷம். ஆனால் சிலர், 'இதெல்லாம் நல்லதுக்கில்லை, நாளைக்கே பேர்ல் துறைமுகத் தாக்குதல்போல் ஒரு விபரீதம் நடந்துவிட்டால், அதற்கு யார் பொறுப்பு?' என்று எச்சரித்தார்கள்.

கடைசியில், அதுதான் நடந்தது. சிஐஏவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட அடுத்த இருபது ஆண்டுகளுக்குள், அமெரிக்காவுக்குப் பல வலுவான விரோதிகள்

Join / Telegram : @Tamil_Books_Library

உருவாகிவிட்டார்கள். 'வல்லரசாவது மண்ணாங்கட்டியாவது' என்று தாக்கத் தயாராகிவிட்டார்கள்.

இவர்களில் பலரை, அமெரிக்காவே, அதிலும் குறிப்பாக சிஐஏவே பாலூட்டிச் சீராட்டி வளர்த்ததுதான் விநோதம்!

Join / Telegram : @Tamil_Books_Library

## 8. ரகசியம், பரம ரகசியம்

'உளவு நிறுவனம்' என்று சொன்னால், உடனடியாக நம் மனத்தில் தோன்றுகிற பிம்பம் வேறு.

மாறுவேஷம் அணிந்த உளவாளிகள், கையில், பையில் ஏகப்பட்ட எலக்ட்ரானிக் சாதனங்கள், எதற்கும் இருக்கட்டும் என்று இடுப்பில் செருகிய துப்பாக்கி, கூர்மையான பார்வை, இருட்டில், மழையில் யாரையோ பின்தொடர்ந்து போகிறார்கள், கரப்பான்கள்மட்டும் புகுந்து செல்லக்கூடிய ஒளிமறைவுப் பிரதேசங்களில் ஒட்டுக்கேட்கும் கருவிகளைப் பொருத்துகிறார்கள், ரகசிய ஆவணங்களை ஃபோட்டோ பிடிக்கிறார்கள், 'எல்லாத் தகவலும் கிடைச்சுடுச்சு, ஓவர்' என்று வயர்லெஸ் ரேடியோவில் சேதி சொல்கிறார்கள்.

இவை அனைத்தும், சிஐஏவிலும் உண்டு. ஆனால், அவர்களுடைய நிஜமான நடவடிக்கைகள் அதன்பிறகுதான் தொடங்குகிறது.

1947ம் ஆண்டு சிஐஏ தொடங்கப்பட்டபோது, அது இத்தனை பெரிய ராட்சஸ நெட்வொர்க்காக இல்லை. வழக்கமான அரசு அலுவலங்களைப்போல, வாஷிங்டனில் ஒரு சிறிய வாடகைக் கட்டடத்தில்தான் இயங்க ஆரம்பித்தார்கள்.

உலகப் போர்க் களேபரங்களெல்லாம் ஒருவழியாக முடிந்தபிறகுதான், அவர்கள் சற்றே பெரிய அலுவலகத்துக்கு இடம் மாற முடிந்தது. அப்போதும், அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகைக்கு அருகில்தான் அவர்களுடைய அலுவலகம் இருக்கவேண்டும் என்று ஒரு கட்டாயம்.

காரணம், சிஐஏவின் அதிமுக்கியமான 'கஸ்டமர்', அமெரிக்க அதிபர்தான். அவருக்குத் தகவல்களைத் திரட்டிக்கொடுப்பதுதான் அவர்களுடைய பிரதான வேலை.

Join / Telegram : @Tamil_Books_Library

தகவல்கள் என்றால், இஸ்லாமாபாத்தில் இன்று மழை பெய்தது, டில்லியில் கடுமையான தூசுப் புயல், ஜோர்டனில் ஜோராராக ஓர் ஊர்வலம் நடந்துகொண்டிருக்கிறது என்று தொடங்கி, பல்வேறு நாடுகளில் நிகழ்கிற சமூக மாற்றங்கள், ராணுவ நடவடிக்கைகள், அறிவியல் முன்னேற்றங்கள், இன்னபிற விவரங்களையெல்லாம் தொகுத்துத் தருகிறார்கள்.

சிஐஏ தொடங்கப்பட்ட புதிதில், இந்த அறிக்கைக்குப் பெயர், 'National Intelligence Daily'. அமெரிக்க அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பில் இருந்த சுமார் 250 மூத்த அதிகாரிகளுக்கு இந்தத் தினசரி தகவல் அறிக்கை வழங்கப்பட்டது.

செய்தித்தாள்மாதிரிதான். ஆனால், பரம ரகசியமான செய்தித்தாள். அதில் இடம்பெறும் தகவல்கள், அநேகமாக சிஐஏவுக்கு வெளியில் வேறு யாருக்கும் தெரிந்திருக்காது.

கென்னடி அமெரிக்க அதிபரானபோது, இந்த வழக்கத்தில் ஒரு சின்ன மாற்றம் வந்தது. காரணம், 'National Intelligence Daily'யை ஏதோ சுண்டல் விநியோகம்போல் எல்லோருக்கும் வழங்குவது அவருக்குப் பிடிக்கவில்லை.

எல்லோருக்கும் எல்லா ரகசியங்களும் தெரிந்துவிட்டால், அதன்பிறகு அதிபர் பதவிக்கு என்ன மரியாதை? அவருக்குமட்டுமே தெரிந்த ரகசியங்கள் என்று சிலது இருந்தால்தானே கொஞ்சம் மதிப்பாக இருக்கும்?

'எனக்குமட்டும் தனியாக ஒரு தினசரி அறிக்கை தயார் செய்யுங்கள்' என்று சிஐஏவுக்கு ஆணையிட்டார் கென்னடி. அதாவது, அதிபரின் தேவைக்கேற்ப, அவர் தெரிந்துகொள்ளவிரும்பும் தகவல்களைமட்டும் உள்ளடக்கிய 'சுருக்'கமான ஓர் அறிக்கை.

இதற்கு PDB என்று பெயர் வைத்தார்கள் - President's Daily Brief.

Join / Telegram : @Tamil_Books_Library

சுமார் எட்டுமுதல் பத்து பக்கங்களைக் கொண்ட PDBதான், அமெரிக்காவின் மிக ரகசியமான ஆவணம். இதைத் தயாரித்து அமெரிக்க அதிபரிடம் வழங்குவதற்காகவே, சிஐஏவில் ஒரு தனிக் குழு இயங்கிக்கொண்டிருக்கிறது.

தினமும் காலை எழுந்தவுடன் பல் தேய்த்துக் காஃபி குடித்துவிட்டு, PDBயைப் புரட்டுவதுதான் அமெரிக்க அதிபரின் முதல் வேலை. ஒருவேளை அவர் ஊரில் இல்லாவிட்டாலும்கூட, பாதுகாப்பான ரகசிய ஃபேக்ஸ்(Fax)மூலம் அவருக்கு PDB அனுப்பப்பட்டாகவேண்டும்.

ஆரம்பத்தில், அமெரிக்க அதிபருக்குமட்டும் என்றிருந்த PDB, அதன்பிறகு வேறு சில முக்கிய அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டது. ஆனால், யாரெல்லாம் இதைப் படிக்கலாம் என்று தீர்மானிப்பது அதிபர்தான்.

'புக்' என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த அறிக்கையின் அடிப்படையில்தான், அதிபர் பல அரசியல், ராணுவ முடிவுகளை எடுப்பார். ஆகவே, கடைசி விநாடித் தகவல்களையும் இதில் இடம்பெறச் செய்யவேண்டியது சிஐஏவின் பொறுப்பு.

இதனால், ஒவ்வொரு நாள் இரவும், PDB அறிக்கை தயார் செய்யப்பட்டபிறகு, மறுநாள் அதிகாலையில் எழுந்து, ராத்திரிமுழுவதும் வந்த தகவல்களைத் தொகுக்கிறார்கள். புதிய செய்திகள், புகைப்படங்கள், அலசல்களைச் சேர்த்து, அதன்பிறகுதான் அச்சுக்கு அனுப்புகிறார்கள்.

1989ல் ஜார்ஜ் புஷ் (George Bush - இப்போதைய அதிபரின் தந்தை) அமெரிக்க அதிபரானபோது, PDBயின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. காரணம், ஜார்ஜ் புஷ் அரசியலுக்கு வருமுன், சிஐஏவின் இயக்குனராக இயங்கியவர்.

இதனால், உளவுத்துறையை எப்படி மேலும் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளமுடியும் என்று அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. PDB அறிக்கையைத் தயாரித்து

Join / Telegram : @Tamil_Books_Library

கொரியரில் அனுப்பிக்கொண்டிருந்த சிஐஏ அதிகாரிகளைக் கூப்பிட்டு, 'இதை எனக்குப் படித்துக் காட்டுங்கள்' என்றார் புஷ்.

அதாவது, வெறுமனே அறிக்கை தயாரித்தால் போதாது. அதில் இடம்பெற்றிக்கும் செய்திகளின் பின்னணித் தகவல்கள், கூடுதல் விவரங்களை அதிபருக்கு விளக்கிச் சொல்லவேண்டும், அதிபருக்கு எழும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துவைக்கவேண்டும்.

அன்றைய PDBயைப் படிக்கும் அதிபர், ஏதேனும் கூடுதல் தகவல்களைக் கேட்கலாம். அப்படி அவர் கேட்கும் ஒரு விவரம் சிஐஏவிடம் இல்லாவிட்டால், எப்பாடுபட்டாவது அதைத் திரட்டியாகவேண்டும், மறுநாள் PDBயில் அந்தத் தகவல் இடம்பெறாவிட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரியின் வேலைக்குக் கத்திதான்.

சில சமயங்களில், கேள்வியின் முக்கியத்துவத்தைப்பொறுத்து, உடனடியாகவும் தகவல்களைத் திரட்டித் தரவேண்டியிருக்கும். இதற்காகதான், சிஐஏவின் அலுவலகம், அதிபர் மாளிகைக்கு அருகில் இருக்கவேண்டும் என்கிற வழக்கம் உருவாகிவிட்டது.

PDBயில் இடம் பெறும் தகவல்கள் ரகசியம் என்றால், அவை எங்கிருந்து, யாரால், எப்படித் திரட்டப்பட்டன என்பது இன்னும் ரகசியம். இதுமட்டும் வெளியே தெரிந்துவிட்டால், சம்பந்தப்பட்டவர்களின் உயிருக்கு ஆபத்து என்பதால், சட்டப்படியே இந்தத் தகவல்களை சிஐஏ வெளியில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

உலகம்முழுவதும், நூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் சிஐஏ அலுவலகங்கள் இயங்கிவருகின்றன - அமெரிக்காவின் எதிரி நாடுகளில்மட்டுமல்ல, நட்பு நாடுகளிலும்.

காரணம், அரசியல்போலவே, இங்கேயும் யாரும் நிரந்தரப் பகை கிடையாது, நிரந்தர நட்பும் கிடையாது என்பது அமெரிக்காவின் கட்சி. ஈரான் - ஈராக் போரின்போது,

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றிருந்த ஈராக், பின்னர் அவர்களுக்கே எதிராகத் திரும்பியது ஒரு பிரபலமான உதாரணம்.

இதனால், பகை நாடுகளோடு நிறுத்திக்கொள்ளாமல், தன்னுடன் சுமுக உறவு கொண்டிருக்கும் நாடுகளிலும் தொடர்ந்து உளவு பார்க்கிறது அமெரிக்கா. உறவும் வேண்டாம், பகையும் வேண்டாம் என்று ஒதுங்கிப்போகிறவர்களையும் விடமாட்டார்கள்.

சிஐஏ தனது அலுவலகங்களை 'ஸ்டேஷன்'கள் (Stations) என்று அழைக்கிறது. சிஐஏவின் ஸ்டேஷன்கள் அமைத்திருக்கும் பெரும்பாலான நாடுகளின் பெயர்களைக்கூட நாம் கேள்விப்பட்டிருக்கமாட்டோம். ஆனால் அங்கேயும் என்ன நடக்கிறது என்கிற தகவல் அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது.

அலுவலகம் என்றால், 'சிஐஏ' என்று பளபளக்கும் நியான் விளக்குகளெல்லாம் இருக்காது. பெரும்பாலும் ஒரு நபர் அல்லது இரண்டு நபர் அலுவலகங்கள்தான். சில நாடுகளில் இருபது, முப்பது பேர் கொண்ட பக்கா நெட்வொர்க்கும் உண்டு.

இந்தக் குழுவுக்குப் பொறுப்பாக ஓர் அதிகாரி இருப்பார், அவரை 'COS' (Chief Of Station) என்று அழைப்பார்கள். அந்நாடு சம்பந்தமான சகல தகவல்களையும் திரட்டித் தரவேண்டியது அவருடைய பொறுப்பு.

இதற்காக, COS சில அதிகாரிகளை நியமிப்பார். சில சமயங்களில், குறிப்பாக சிறிய நாடுகளில் அவரே இந்தப் பொறுப்பையும் கவனிக்கவேண்டியிருக்கும்.

இந்த அதிகாரிகள்தான், அமெரிக்காவுக்கு உதவக்கூடிய உளவாளிகள், ஒற்றர்களைத் தேடிக் கண்டறிகிறார்கள். 'ஏஜென்ட்கள்' என்று அழைக்கப்படும் இவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து, அவர்கள் தருகிற தகவல்களைத் தொகுத்துச் சரி பார்த்து

Join / Telegram : @Tamil_Books_Library

மேலிடத்துக்கு அனுப்பவேண்டியது ஸ்டேஷனின் தலைமை அதிகாரியுடைய பொறுப்பு.

வெளிநாட்டு ஸ்டேஷன்கள்தான் சிஐஏவின் முக்கியமான நெட்வொர்க். ஆனால், பெரும்பாலான சமயங்களில் அவர்களுக்கு உள்நாட்டி(அமெரிக்காவி)லும் கொஞ்சம் வேலை இருக்கிறது.

சட்டப்படி, சிஐஏ உள்நாட்டில் தகவல் திரட்டக்கூடாது. ஒருவேளை ஏதேனும் காரணத்துக்காக அவர்கள் அமெரிக்கக் குடிமக்களை விசாரிக்க நேர்ந்தால், ஒளிவு மறைவு ஆகாது. 'நாங்கள் சிஐஏ' என்று சொல்லிவிட்டு, கேள்விகளை நேரடியாகதான் கேட்கவேண்டும், மறைமுகமாக ஒற்றறியக்கூடாது.

ஆனால், வெளிநாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு வருகிற அரசியல்வாதிகள், அதிகாரிகள், விஞ்ஞானிகளின் கதை வேறு. பல சந்தர்ப்பங்களில் சிஐஏ அவர்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு அயல்நாடுகளை உளவு பார்த்திருக்கிறது.

சிஐஏவின் வருடாந்திர பட்ஜெட்டில், இதற்காகப் பெரிய தொகை ஒதுக்கப்படுகிறது. அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயல்பட முன்வருகிறவர்களுக்கு நல்ல சம்பளம், சவுகர்யங்களைச் செய்து தருவார்கள். அவர்களைப்பற்றிய விவரங்களைப் பரம ரகசியமாகப் பாதுகாப்பார்கள்.

ஆனால், இதையெல்லாம் செய்தித்தாளில் கட்டம் கட்டி 'ஒற்றர்கள் தேவை' என்று விளம்பரம் கொடுக்கமுடியாது. லென்ஸ் வைத்துத் தேடவேண்டியிருக்கும்.

அமெரிக்கர்கள் பிஸினஸ் விஷயமாகவோ அல்லது சுற்றுலாவுக்காகவோ ஏதேனும் ஒரு முக்கியமான வெளிநாட்டுக்குச் சென்று திரும்பினால், உடனடியாக ஒரு சிஐஏ அதிகாரி அவர்களைச் சந்திப்பார். அங்கே என்ன பார்த்தீர்கள், அந்தத் தகவல்களில் நமக்கு உபயோகமானது என்ன என்றெல்லாம் விசாரித்துப் பதிவு செய்துகொள்வார்.

Join / Telegram : @Tamil_Books_Library

ஆனால், இதுமட்டும் போதாது. உள்ளூரில் இருக்கும் அயல்நாட்டுத் தூதரகங்களில் என்ன நடக்கிறது, அவர்களுடைய நாட்டிற்கும் தூதரகத்துக்கும் இடையே என்னென்ன தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன என்பதும் சிஐஏவுக்கு முக்கியம். இதற்காக, உள்ளூரில் ஒற்றர்களைத் தேடுகிறார்கள்.

இந்த விஷயத்தில் சிஐஏவின் முதல் தூண்டில், வெளிநாட்டிலிருந்து இங்கே வருகிறவர்களில் யாருக்கெல்லாம் அமெரிக்க வாழ்க்கை பிடித்திருக்கிறது? அதன் சுகம், சவுகர்யங்களில் மயங்கிப்போய்க் கிடக்கிறார்கள்?

அமெரிக்காவில் வாழ்வது ஜாலிதான். ஆனால், அதன் ஆடம்பரங்களையெல்லாம் அனுபவிக்கவேண்டுமானால் பணம் அதிகம் தேவை. 'ஹ்ம்ம், நமக்குக் கொடுத்துவெச்சது அவ்வளவுதான்' என்று பெருமூச்சு விடும் வெளிநாட்டவர்கள்தான், சிஐஏவின் முதல் இலக்கு.

அடுத்தபடியாக, ஒவ்வொரு நாட்டிலும், அதன் ஆட்சியாளர்கள் அல்லது கொள்கைகளோடு பொருந்தாமல் சிலர் வருத்தத்தில் இருப்பார்கள், அல்லது கோபத்தில். இவர்களை வளைத்துப்பிடித்து, 'நீங்கள் எவ்வளவு பெரிய ஆள், உங்களைப் புரிந்துகொள்ளாமல் இப்படி அசிங்கப்படுத்துகிறார்களே' என்று பக்குவமாகப் பேசினால், பட்சி படிந்துவிடும்.

இப்படித் தங்களுடன் இணைந்து பணியாற்றக்கூடியவர்களை சிஐஏ தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கிறது. இதற்காக, வெளிநாட்டு மக்கள் பங்கு பெறும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், பார்ட்டிகளில் தவறாமல் கலந்துகொள்வார்கள். பல சமயங்களில், இவர்களே ஒரு விசாவுக்கு ஏற்பாடு செய்து ஆள் பிடிப்பதும் உண்டு.

மிக அபூர்வமாக, பிளாக்மெயில் உத்திகளையும் பயன்படுத்தியிருக்கிறது சிஐஏ. ஆனால், 'நீ எங்களுக்குச் சாதகமாகச் செயல்படாவிட்டால், இதைச்

Join / Telegram : @Tamil_Books_Library

செய்துவிடுவேன், அதைப் பிடுங்கிவிடுவேன்' என்று மிரட்டுவது, அவ்வளவாகப் பயன்படாது என்பது அங்கிருக்கும் பெரும்பாலான அதிகாரிகளின் கருத்து.

இப்படி ஒருவரை 'வருங்கால ஒற்றர்' என்று தேர்ந்தெடுத்துக் கட்டம் கட்டியபிறகு, உடனே அவர் கையில் அப்பாயின்ட்மென்ட் ஆர்டரைக் கொடுத்துவிடமாட்டார்கள். பல வாரங்கள், அல்லது மாதங்கள் பொறுமையாகக் காத்திருப்பார்கள், கவனிப்பார்கள்.

யார் அவர்? என்ன வேலை செய்கிறார்? ஓய்வு நேரத்தில் என்ன பொழுதுபோக்கு? அவருடைய குடும்ப / தனிப்பட்ட பிரச்னைகள் பிரச்னைகள் என்னென்ன? இப்போதைய அவசர, அவசியத் தேவைகள் என்னென்ன? அவரைக் கவரவேண்டுமானால், என்ன செய்யலாம்?

சம்பந்தப்பட்ட நபர் இசைப் பிரியரா? அவரைப் பின்தொடரும் சிஐஏ அதிகாரி, ச-ரி-க-ம-ப-த-நி என்று அரைகுறையாகவேனும் தாளம் போடக் கற்றுக்கொண்டாகவேண்டும். மீன் பிடிப்பதுதான் அவருடைய பொழுதுபோக்கு என்றால், வெறும் தூண்டிலோடு மணிக்கணக்காக அவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கவேண்டும்.

இப்படி ஓர் இயல்பான பழக்கத்தை உருவாக்கிக்கொண்டபிறகுதான், அவரை நேரில் சந்தித்துப் பேசுவார்கள். 'என்ன சார், எப்படி இருக்கீங்க? இந்த ஊர் பிடிச்சிருக்கா?' என்று சம்பிரதாயமாகத் தொடங்கி, அதன்பிறகு விஷயத்துக்கு வருவார்கள்.

உங்களுக்குப் பணத்தேவையா? டாலர்களைக் கொட்டத் தயாராக இருக்கிறோம். இங்கேயே செட்டிலாகவேண்டுமா? குடியுரிமை காத்திருக்கிறது. உடம்பு சரியில்லையா? லேட்டஸ்ட் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கிறோம். ஏதேனும் தப்புச் செய்துவிட்டீர்களா? பிரச்னையில்லை, சாட்சிகளைச் சுலபமாக அழித்துவிடலாம்.

Join / Telegram : @Tamil_Books_Library

இப்படி யாருக்கு என்ன தேவை என்று அறிந்து தூண்டில் போடுவது சிஐஏ அதிகாரிகளுக்குக் கை வந்த கலை. ஏதேனும் ஒரு பலவீனம் இல்லாத மனிதர்கள் உண்டா? அதைக் கச்சிதமாகக் கண்டுபிடித்து மடக்கிவிடுவார்கள்.

சிஐஏவால் கட்டம் கட்டப்பட்டவர்களில் பலர், அவர்களோடு இணைந்து பணியாற்ற முன்வருவார்கள். மிகச் சிலர், 'அதெல்லாம் முடியாது, நான் என் நாட்டுக்குத் துரோகம் செய்யமாட்டேன்' என்பார்கள், அல்லது 'வெளியே போய்யா' என்று கத்துவார்கள்.

அதற்கெல்லாம் அலட்டிக்கொண்டால், உளவுப் பிழைப்பு நடத்தமுடியாது. 'ரொம்ப நன்றி சார்' என்று முகத்தைத் துடைத்துக்கொண்டு வெளியே வரவேண்டியதுதான்.

சிஐஏவுடன் இணைந்து பணியாற்ற முன்வரும் ஒற்றர்கள் ஒவ்வொருவருக்கும், மாதச் சம்பளம் உண்டு. இதுதவிர, அவர்கள் சிஐஏ அதிகாரிகளைச் சந்தித்துத் தகவல்களை வழங்கும்போதெல்லாம், கூடுதலாக போனஸ் வழங்குவார்கள்.

இந்தச் சம்பள, போன்ஸ் விவரங்கள் ஒரேமாதிரியாக இருக்காது. ஒவ்வொருவருடைய தகுதி / அவர்கள் இப்போது இருக்கும் நிலைமை / கொண்டுவரும் தகவல்களின் முக்கியத்துவம் ஆகியவற்றைப்பொறுத்துதான் சிஐஏ பர்ஸை அகலமாகவோ, குறுகலாகவோ திறக்கும்.

வெளிநாட்டு ஒற்றர்களைப் பரிசோதிப்பதற்கும் சிஐஏ ஒரு வழிமுறை வைத்திருக்கிறது. ஆரம்பத்தில், ஏற்கெனவே தங்களுக்குப் பதில் தெரிந்த கேள்விகளைமட்டும் கேட்பார்கள். சம்பந்தப்பட்ட நபர் அவற்றுக்கு எப்படி பதில் சொல்கிறார் என்பதைப் பொறுத்துதான், கடினமான பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

இப்படி ஓர் ஒற்றர்மீது நம்பிக்கை வந்ததும், அவர்களுடன் பேசுவதற்காக ஒரு சிஐஏ அதிகாரியை நியமித்துவிடுவார்கள். அதன்பிறகு, இந்த ஒற்றர்கள்

Join / Telegram : @Tamil_Books_Library

திரட்டும் அனைத்துத் தகவல்களும், இந்த அதிகாரி வழியாகதான் மேலிடத்துக்குச் செல்லும்.

இதற்காக, ஒவ்வொரு நாட்டிலும் ரகசியமாகத் தனி வீடுகளை வாடகைக்கு எடுத்துவைத்திருந்தது சிஐஏ. இங்கேதான் ஒற்றர்களும் சிஐஏ அதிகாரிகளும் சந்தித்துப் பேசுவார்கள். இந்தச் சந்திப்புகள் ஒவ்வொன்றும், அவர்களுக்கே தெரியாமல் பதிவு செய்யப்படும்.

இதையெல்லாம் கதைபோல் சொல்வதற்குச் சுவாரஸ்யமாகதான் இருக்கிறது. ஆனால், இப்படி வெளிநாட்டில் உட்கார்ந்துகொண்டு அந்த ஊர் விவகாரங்களையெல்லாம் உளவு பார்த்துக்கொண்டிருப்பது சுலபமான காரியமில்லை. மாட்டிக்கொண்டால் தொலைத்துவிடுவார்கள்.

இதனால்தான், வெளிநாடுகளில் செயல்படும் தன்னுடைய அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும், விதவிதமான 'கோல்கேட்' பாதுகாப்பு வளையங்களுக்கு ஏற்பாடு செய்கிறது சிஐஏ.

பெரும்பாலும், இவர்கள் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளாக இருப்பார்கள். சிலருக்கு வேறொரு பெயர், வேறொரு உபத்திரவமில்லாத அடையாளம்கூடத் தரப்பட்டிருக்கும். இந்த முகமூடிகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டுதான் ரகசியக் காரியங்களில் ஈடுபடுவார்கள்.

அதுமட்டுமில்லை, ஒவ்வொருமுறை உள்ளூர் ஒற்றர்களைச் சந்திக்கச் செல்லும்போதும், இவர்கள் அதற்குப் பக்காவாக ஒரு மாற்றுக் கதை தயார் செய்தாகவேண்டும். ஒருவேளை மாட்டிக்கொண்டுவிட்டால், 'நான் சும்மா இந்தப்பக்கம் காற்று வாங்க வந்தேன்' என்று அசட்டுத்தனமாக உளறிக்கொட்டாமல், கொஞ்சமாவது நம்பும்படியாகப் பொய் சொல்லவேண்டியிருக்கும்.

Join / Telegram : @Tamil_Books_Library

இத்தனை எச்சரிக்கைகளையும் மீறி, சில சமயங்களில் சிஐஏ அதிகாரிகள், அல்லது ஏஜென்ட்கள் உள்ளூர்க் காவல்துறை / உளவுத்துறையினரிடம் சிக்கிக்கொண்டுவிடுவது உண்டு. அதுமாதிரியான சந்தர்ப்பங்களில், முள்ளில் விழுந்த சேலையை எடுப்பதுபோல் மிகக் கவனமாக நிலைமையைக் கையாளவேண்டியிருக்கும்.

தூதரக அதிகாரிகள் என்பதுபோன்ற போர்வையில் வந்திருக்கும் அமெரிக்கர்கள், பெரும்பாலும் இந்தச் சிக்கலில் இருந்து சுலபமாகத் தப்பித்துவிடுவார்கள். சில சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு பதிலாக, அமெரிக்காவில் கைதாகியிருக்கும் ஒற்றர்களை விடுவித்துப் பண்டமாற்று செய்துகொள்வதும் உண்டு.

இந்த அதிகாரிகளோடு ஒப்பிடுகையில், 'ஏஜென்ட்'கள் எனப்படும் உள்ளூர் ஒற்றர்களுக்குதான் ஆபத்து அதிகம். அவர்கள் ஏதேனும் ஒரு ரகசியத் தகவலைத் திரட்டிக்கொண்டிருக்கும்போது மாட்டிக்கொண்டுவிட்டால், அமெரிக்காவும் காப்பாற்றாது, உள்நாட்டிலும் உதவி கிடைக்காது.

இத்தனை ஆபத்துகள் உண்டு என்று தெரிந்தும்கூட, அநேகமாக ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமானவர்கள் சிஐஏவின் ஒற்றர்களாகப் பணிபுரிய முன்வருகிறார்கள். இதற்கு முக்கியக் காரணம், அவர்கள் வாரி வழங்குகிற பணம்தான்.

தன்னுடைய ஒற்றர்களைப்பற்றிய தகவல்களை, சிஐஏ பரம ரகசியமாகப் பாதுகாக்கிறது. ஆரம்பத்திலேயே ஒவ்வொருவருக்கும் ஒரு ரகசிய எண், பெயர் (Code Number / Name) ஒதுக்கிவிடுகிறார்கள். அதன்பிறகு, எந்த சிஐஏ ஆவணத்திலும், சம்பந்தப்பட்ட நபரின் நிஜப் பெயர் பயன்படுத்தப்படாது. எல்லாம் சங்கேதக் குறிப்புகளாகதான் எழுதிவைத்திருப்பார்கள்.

எந்த ரகசிய எண் அல்லது பெயர் நிஜத்தில் யாரைக் குறிக்கிறது என்பது பிரம்ம ரகசியம். யாராலும் அத்தனை

Join / Telegram : @Tamil_Books_Library

சுலபத்தில் இந்தத் தகவலைத் தெரிந்துகொண்டுவிடமுடியாது. ஏழு கடல், ஏழு மலை தாண்டி, அதுவும் வெவ்வேறு இடங்களில் தனித்தனியே பிரித்து ஒளித்துவைத்து, அதன்மீது விஷப் பாம்புகளை நெளியவிட்டிருப்பார்கள்.

இப்படி ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமான ரகசிய ஏஜென்ட்களைத் தேர்ந்தெடுக்கிறது சிஐஏ. இவர்களிடமிருந்து வரும் தகவல்களைத் திரட்டித் தொகுப்பதற்கும் பிரமாதமான ஒரு நெட்வொர்க் கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

அந்தந்த நாட்டில் சேகரிக்கப்படும் தகவல்கள், முதலில் உள்ளூர் சிஐஏ 'ஸ்டேஷன்' அலுவலகத்துக்குச் சென்று சேர்கின்றன. இவற்றைத் தொகுத்து, தலைமை அலுவலகத்துக்கு அனுப்பவேண்டியது அவர்களுடைய பொறுப்பு.

ஆனால், வருகிற எல்லாத் தகவல்களையும், அப்படியே பொட்டலம் கட்டி அனுப்பிவிடமுடியாது. அவற்றில் எது முக்கியம், எது முக்கியமில்லை என்று முதலில் பிரித்தாகவேண்டும்.

இதற்காக, சிஐஏ அதிகாரிகள் தங்களுடைய மேலிடத்துக்குச் செல்லும் அனைத்துத் தகவல்களையும், அவற்றின் முக்கியத்துவம் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கிறார்கள் - Flash, Immediate, Priority & Routine.

இவற்றில், Flash, Immediate ஆகிய இரண்டு வகைகளும் முக்கியமான தகவல்கள். மற்ற இரண்டும் சுமார் ரகம். ஆனால், அவற்றையும் புறக்கணிப்பதற்கில்லை, துண்டு துக்கடாத் தகவல்களைக்கூட, மேலிடத்துக்குத் தவறாமல் அனுப்பிவைத்தாகவேண்டும்.

இப்படி உலகம்முழுவதிலும் இருந்து, சிஐஏவின் தலைமை அலுவலகத்துக்குத் தகவல் அறிக்கைகள் வந்து

Join / Telegram : @Tamil_Books_Library

குவிகின்றன. அங்கே பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள், இந்தத் தகவல்களைத் திரட்டி, மதிப்பெண் போடுகிறார்கள்.

இந்தத் தகவல் நமக்கு நன்கு பயன்படக்கூடியது, ஆகவே 20 மார்க், இது சுமார்தான், மூன்று மார்க் கொடுத்தால் போதும், இது ஒன்றுக்கும் பயன்படாது, கோழி முட்டை - இப்படி ஒவ்வொரு தகவலுக்கும் மார்க் தரப்படுகிறது.

வருடம்முழுவதும் இப்படித் தரப்படுகிற ஸ்கோர்களைக் கூட்டிப் பார்த்து, ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் சராசரி மதிப்பெண்களைக் கணக்கிடுவார்கள். இதன் அடிப்படையில்தான், எந்த ஸ்டேஷன் எவ்வளவு திறமையாக இயங்குகிறது என்பது தீர்மானிக்கப்படும்.

ஒவ்வொரு நாளும் வரும் தகவல்களில், அதிக முக்கியத்துவம் வாய்ந்த (அதாவது, அதிக மதிப்பெண் வாங்கிய) விஷயங்கள்மட்டும்தான், அதிபரின் பார்வைக்குச் செல்கிற PDB செய்தி அறிக்கையில் இடம்பெறுகிறது.

இதோடு, சிஐஏவின் அதிகார எல்லைகள் முடிவடைந்துவிடுகின்றன. அதன்பிறகு, அந்தத் தகவல்களின் அடிப்படையில் என்ன செய்யலாம் என்று முடிவெடுக்கிற பொறுப்பு, அதிபர் மற்றும் செனேட் சபையின் கையில்தான்.

சிஐஏவின் சரித்திரத்தில், பல முக்கியமான தகவல்களை அவர்கள் முன்கூட்டியே கண்டறியாமல் கோட்டை விட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. இதற்கு நேரெதிராக, அவர்கள் தகவல்களைச் சரியான நேரத்தில் கண்டறிந்து சொல்லியும், அதிபர், மற்ற அதிகாரிகள் அதைக் கண்டுகொள்ளாமல் சொதப்பிய தருணங்களும் உண்டு.

இதனால், அமெரிக்க அரசுகளால் சிஐஏவை முழுக்கப் புறக்கணிக்கவும் முடியாது. அதற்காக அவர்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்தால் ஆபத்தாகிவிடும் என்றும் பயப்படுவார்கள். கடந்த அரை நூற்றாண்டுகாலமாக, இந்த

Join / Telegram : @Tamil_Books_Library

இரண்டு நேரெதிர்ச் சிந்தனைகளுக்கும் இடையில்தான் சிஐஏ வளர்ந்துவந்திருக்கிறது.

Join / Telegram : @Tamil_Books_Library

## 9. புதிய கூட்டணி

ரஷ்யாவில் போல்ஷ்விக் புரட்சி முடிவடைந்து சோவியத் யூனியன் உருவாகியிருந்த காலகட்டம்.

இந்தப் புதிய கூட்டமைப்புக்கான கொடியை வடிவமைக்கும் பொறுப்பு, ஓர் ஓவியரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் சுறுசுறுப்பாகச் செக்கச்செவேல் என்று ஒரு கொடியைத் தயாரித்து, நடுவில் ஒரு வாள் வரைந்தார்.

லெனின் பார்வைக்கு இந்தக் கொடி சென்றபோது, உடனடியாக அந்த வாளை நீக்கும்படி உத்தரவிட்டார்.

ஏன் நீக்கவேண்டும்? வாள் என்பது வீரத்தின் சின்னம் இல்லையா?

'அதனால்தான் அதை நீக்கவேண்டும்' என்றார் லெனின், 'நாடு பிடிக்கிறவர்களுக்குதான் வாள் தேவை, நாம் அதற்கு எதிரானவர்கள்'

இப்படி ஓர் உயர்ந்த கொள்கையின் அடிப்படையில் உருவான சோவியத் யூனியன், அடுத்தவர்களின் நிலப் பகுதிகளை ஆக்கிரமிப்பதில்லை என்பதில் உறுதியாக இருந்தது. ஆனால் அரை நூற்றாண்டு காலத்துக்குப்பிறகு, அவர்களும் இன்னொரு தேசத்தின்மீது போர் தொடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

ஆஃப்கானிஸ்தான் யுத்தம். சுமார் பத்து வருட காலம் நீடித்த இந்தப் போரில், சோவியத் யூனியனுக்குக் கிடைத்தது கொஞ்சம். இழந்தது அதிகம்.

இப்படியொரு புண்ணிய காரியத்தில், அமெரிக்கா பங்கேற்காமல் இருக்கமுடியுமா? அவர்கள் தங்களுடைய பிரதிநிதிகளாக சிஐஏவை அனுப்பிவைத்தார்கள். ஆஃப்கன் குட்டை மேலும் குழம்பியது.

அதைப்பற்றிப் பார்ப்பதற்குமுன், ஆஃப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் நுழைய நேர்ந்த பின்னணித்

Join / Telegram : @Tamil_Books_Library

தகவல்களைக் கொஞ்சம் சுருக்கமாகப் புரிந்துகொண்டுவிடுவது அவசியம்.

ஆஃப்கானிஸ்தான் ஒரு முஸ்லீம் நாடு. சோவியத் யூனியன் ஒரு கம்யூனிஸ்ட் கூட்டமைப்பு. புவியியல்ரீதியில் இரண்டும் அருகருகே இருந்தாலும்கூட, மொழி, கலாசாரம் என்று பல விஷயங்களில் இவர்கள் வேறுபட்டிருந்தார்கள்.

இந்தமாதிரியான சூழ்நிலைகளில், அதிகம் பாதிக்கப்படுகிறவர்கள், இந்த இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளில் வாழ்கிறவர்கள்தான். சோவியத் யூனியனின் ஆஃப்கன் எல்லையில் வாழ்ந்த முஸ்லீம்களுக்கு, கம்யூனிஸ்ட் ஆட்சியின் சில கொள்கைகள் பிடிக்கவில்லை. சிறுபான்மையினர் என்கிற காரணத்தால் தாங்கள் ஒதுக்கப்படுகிறோம் என்று நினைத்தார்கள்.

தவிர, கம்யூனிஸ்ட்கள் எல்லாம் கடவுளுக்கு விரோதமானவர்கள் என்பது அவர்களுடைய உறுதியான நம்பிக்கை. நாஸ்திகர்களின் ஆட்சியின்கீழ் குடிமக்களாக இருப்பதில் அவர்களுக்குச் சில மன வருத்தங்கள் இருந்தன.

இதைப் புரிந்துகொண்ட சோவியத் யூனியன், ஆஃப்கானிஸ்தானுக்குப் பலவிதமான அரசியல், பொருளாதார உதவிகளை அளிக்கத் தொடங்கினார்கள். ஆஃப்கனில் சோவியத் ஆதரவுடன் ஓர் இடதுசாரி அரசு அமைந்தது.

'PDPA' என்ற அந்த ஆஃப்கன் குடியரசுக் கட்சி(People's Democratic Party Of Afghanistan)யில் ஆரம்பத்தில் எல்லாம் ஒழுங்காகதான் இருந்தது. 1967ல்தால் உள்கட்சிப் பூசல்கள், பகை, ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகள் என்று சகல குழப்பங்களும் தொடங்கின.

இதனால், கட்சியில் எல்லோரும் தங்களை வருங்காலப் பிரதமர்களாகக் கருதிக்கொண்டார்கள். 'அவன் ஏன் பதவியில் இருக்கிறான்? அவனைக் கவிழ்த்துவிட்டு நான்

Join / Telegram : @Tamil_Books_Library

ஏன் பதவிக்கு வரக்கூடாது?' என்பதில் தொடங்கி, நீ இந்த ஊழல் செய்தாய், நான் அந்த ஊழல் செய்தேன் என்கிற ரேஞ்சுக்கு அடித்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இதனால், ஆஃப்கன் அரசியலில் சாக்கடை நாற்றமடிக்க ஆரம்பித்தது.

1973ம் ஆண்டு, தாவூத் என்பவர் அப்போதைய அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டுப் பதவிக்கு வந்தார். ஐந்து வருடம் கழித்து இன்னொரு ராணுவப் புரட்சி, அடுத்த சில மாதங்களில் மற்றுமொரு குட்டிப் புரட்சி என்று நிலைமை கை மீறத் தொடங்கியிருந்தது.

சோவியத் யூனியனைப் பொறுத்தவரை, ஆஃப்கனின் உள்விவகாரங்களில் நேரடியாகத் தலையிட அவர்கள் விரும்பவில்லை. ஆனால், அங்கே அமையும் அரசு தங்களுக்கு ஆதரவானதாக இருக்கவேண்டும் என்றுமட்டும் விரும்பினார்கள்.

ஆனால், அமாவாசைக்கு ஓர் ஆட்சிக் கவிழ்ப்பு, பவுர்ணமியில் இன்னொரு புதிய அரசாங்கம் என்று கலாட்டா தேசமாகிக்கொண்டிருக்கிறது ஆஃப்கன். இந்த நிலைமையில், ஆட்சிக்கு வருகிறவர்கள் எல்லோரும் சோவியத் யூனியன் ஆதரவாளர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியுமா?

அங்கேதான் பிரச்னை தொடங்கியது. அஃபிசுல்லா அமீன் என்ற ராணுவப் புரட்சிக்காரர், சோவியத்துடன் இணைந்து செயல்படுவதில்லை என்று முடிவெடுத்தார்.

இதனால் கடுப்பான சோவியத் யூனியன், தமது படையினரை ஆஃப்கானிஸ்தானுக்குள் அனுப்பிவைத்தது. இதன் நோக்கம், ஆஃப்கனை ஆக்கிரமித்து சோவியத் யூனியனில் சேர்த்துக்கொள்வது அல்ல, அங்கே ஒரு சிவப்பு அரசாங்கம் அமைப்பதுமட்டுமே.

அதுவரை, ஆஃப்கானிஸ்தான் என்று ஒரு தேசம் இருப்பதே அமெரிக்காவுக்குத் தெரிந்திருக்குமோ, இல்லையோ. சோவியத் யூனியன் இப்படி ஓர் ஆக்கிரமிப்பு

Join / Telegram : @Tamil_Books_Library

செய்திருக்கிறார்கள் என்று தெரிந்ததும், மளமளவென்று தங்களுடைய தரப்புக் கைங்கர்யங்களுக்குத் தயாராகிவிட்டார்கள்.

இதுவே உலகப் போர் சமயமாக இருந்தால், சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பை விலக்க நாங்கள் ஆஃப்கனுக்கு உதவுகிறோமாக்கும் என்று சொல்லிக்கொண்டு அமெரிக்கா தனது ராணுவத்துடன் கிளம்பியிருக்கும். ஆனால் இப்போது அமைதிக்காலம். ஆகவே, கொஞ்சம் மறைமுகமாகதான் செயல்படவேண்டியிருக்கும்.

வெளிநாடு, மறைமுகம். போதாதா? உடனடியாக சிஐஏவைக் கூப்பிட்டுவிட்டார் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் (Jimmy Carter).

ஆஃப்கானிஸ்தானில் என்ன நடக்கிறது? அதில் நாம் செய்யக்கூடியது என்ன? அதைவிட முக்கியமாக, இதனால் நமக்கு உடனடி, நீண்டகாலப் பலன்கள் என்னென்ன உண்டு?

சிஐஏ உருவாக்கப்பட்டபோது, அதன் கடமைகள் என்று ஒரு லிஸ்ட் கொடுத்திருந்தார்கள். இதுதவிர, காலப்போக்கில் சிஐஏவே தனக்கென்று சில சட்டதிட்டங்களை உருவாக்கிக்கொண்டிருந்தது. இந்த எவற்றிலும், அடுத்த நாடுகளின்மீது படையெடுக்கும் உரிமை இல்லை.

ஆனால் அதேசமயம், திரைமறைவில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ராணுவ விமானங்கள், டாங்கிகளில் அமெரிக்கக் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு ஆஃப்கானுக்குக் கிளம்பமுடியாதேதவிர, வேறுவிதத்தில் சோவியத் யூனியனை எதிர்க்கலாம்.

பிரம்மாண்டமான சோவியத் யூனியனுடன் ஒப்பிடுகையில், ஆஃப்கானிஸ்தான் சிறிய தேசம். ஆனால் அதற்காக, அவர்கள் படை திரட்டிக்கொண்டு வந்ததும், 'வாங்க மச்சான் வாங்க' என்று யாரும் பாட்டுப் பாடி

Join / Telegram : @Tamil_Books_Library

வரவேற்கப்போவதில்லை. நிச்சயமாக சோவியத் ஆக்கிரமிப்புக்கு உள்ளூரில் எதிர்ப்பு இருக்கும் என்று கணித்தது சிஐஏ.

வழக்கம்போல், அந்த எதிர்ப்பாளர்களுக்கு தாராளமாக உதவத் தீர்மானித்தார்கள். அவர்கள் கையை வைத்து, சோவியத் யூனியனின் கண்ணைக் குத்துவதுதான் அடிப்படை நோக்கம்.

பொருளாதாரரீதியில் பின்தங்கிய தேசமான ஆஃப்கனில், புரட்சி அமைப்புகளும் வறுமையில்தான் இருந்தன. படை பலம் ஓரளவு இருந்தாலும், ஆயுதங்கள் விஷயத்தில் சில நூற்றாண்டுகள் பின்னே இருந்தார்கள். அடி, உதை தெரியும், ஆனால், முறைப்படி தந்திரமாகப் போர் செய்கிற புத்திசாலித்தனம் தெரியாது.

இதையெல்லாம், சிஐஏவுக்குமுன்பே சிலர் கவனித்திருந்தார்கள் - பாகிஸ்தான் உளவுத்துறையான ஐஎஸ்ஐ (ISI - Inter Services Intelligence).

பாகிஸ்தானுக்கு ஏன் ஆஃப்கானிஸ்தான்மீது பிரியம் என்பது தனிக்கதை. அது இங்கே வேண்டாம். இப்போதைக்கு, சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த ஆஃப்கன் முஜாஹிதீன்களுக்கு ஐஎஸ்ஐ உதவத் தீர்மானித்திருந்தது என்பதோடு நிறுத்திக்கொள்வோம்.

உதவி என்றால், முஜாஹிதீன்களுக்கு வயிறு நிறைய சாப்பாடு போடுவதில் தொடங்கி, ஆயுதப் பயிற்சி, யுத்தப் பயிற்சி என்று சகலத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இதற்காக, பாகிஸ்தான் - ஆஃப்கன் எல்லைகள் திறந்துவிடப்பட்டிருந்தன.

இதைக் கேள்விப்பட்ட சிஐஏ, உற்சாகமாகிவிட்டது. குட்டையைக் குழப்புவதற்கு இன்னொரு சிநேகிதன் என்று ஐஎஸ்ஐ உடன் கை கோர்த்துக்கொண்டார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

ஆஃப்கான் போராளிகளுக்கு வழங்குவதற்காக, சீனா, எகிப்து உள்ளிட்ட சில நாடுகளில் இருந்து சுமார் 15 மில்லியன் டாலர்கள் மதிப்பிற்கு ஆயுதங்களை வாங்கியது சிஐஏ. இந்த ஆயுதங்கள் அமெரிக்க விமானங்களில் ஏற்றப்பட்டு, பாகிஸ்தான் சென்று சேர்ந்தன.

இந்த ஆயுதங்களை, ஆஃப்கானில் செயல்பட்டுவரும் பல போராளிக் குழுக்களுக்குப் பிரித்து வழங்கும் பொறுப்பு பாகிஸ்தானுடையது. இதிலும், சிஐஏ ஒரு சின்ன சூட்சுமம் வைத்திருந்தது.

ஆஃப்கன் போராளிக் குழுக்களில் யாரெல்லாம் அதிதீவிரவாதிகள், பழி பாவங்களுக்கு அஞ்சாதவர்கள் என்று கணக்குப்போட்டு, அவர்களுக்குமட்டும் அதிக அளவு ஆயுதங்களைக் கொடுத்தார்கள். இதன்மூலம், சோவியத் யூனியனுக்கு பாதிப்பு கூடுதலாக இருக்கும் என்பது அவர்களுடைய கணக்கு.

துப்பாக்கி, வெடிகுண்டு என்று தொடங்கி, எலக்ட்ரானிக் சாதனங்கள், ஏவுகணைகள், ரசாயன ஆயுதங்கள் என்று பல்வேறு உதவிகள் அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தானுக்கும், பிறகு ஆஃப்கனுக்கும் ரகசிய கொரியர் சர்வீஸில் சென்று சேர்ந்தன. ஒவ்வோர் ஆண்டும் இப்படி அனுப்பப்பட்ட ஆயுதங்கள், உபகரணங்களின் எடைமட்டும் பல ஆயிரம் டன்!

அமெரிக்கா வெறுமனே ஆயுதங்கள் அனுப்புவதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. சிஐஏ அதிகாரிகள் பலர், பாகிஸ்தானுக்குச் செல்வதற்கு சீஸன் டிக்கெட் வாங்கிக்கொண்டார்கள். ஐஎஸ்ஐ அலுவலகத்தில் உள்ளூர்க்காரர்களைவிட அதிகமாக அமெரிக்க முகங்களைப் பார்க்கமுடிந்தது.

இந்த சிஐஏ அதிகாரிகளுக்கு இரண்டு பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தன. ஐஎஸ்ஐ அதிகாரிகள், உளவாளிகள், ஒற்றர்களுக்கு அடிப்படை விஷயங்களையும் நவீன தொழில்நுட்பங்களையும் சொல்லித்தருவது, மற்றும்

Join / Telegram : @Tamil_Books_Library

ஆ்ப்கன் போராளிகளுக்கு நேரடியாகச் செய்யக்கூடிய உதவிகள், பயிற்சிகளைச் செய்து முடிப்பது.

தங்களுக்கு அமெரிக்காவின் முழு ஆதரவு, ஆசிர்வாதம் இருக்கிறது என்று தெரிந்ததும், பாகிஸ்தானுக்கும் பலம் கூடிவிட்டது. அங்கிருந்து வரும் ஆயுதங்களைப் போராளிகளுக்குச் சென்று சேர்ப்பதில் ஆரம்பித்து, போர்ப் பயிற்சிகள்வரை அனைத்திலும் வேகம் கூடியது.

1979ல் சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பு தொடங்கியபோது, இத்தனூண்டு தேசமான ஆ்ப்கனைச் சீக்கிரமாகச் சுருட்டித் தாம்பூலம் போட்டுக்கொண்டுவிடலாம் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், ஐஎஸ்ஐ, சிஐஏ என்று இரண்டு வலுவான எதிரிகளை அவர்கள் சந்திக்கவேண்டியிருந்தது.

இவர்கள் நேருக்கு நேர் நின்று போரிட்டால்கூடப் பரவாயில்லை. பின்னால் நின்றுகொண்டு, ஆ்ப்கன் புரட்சியாளர்களைத் தயார் செய்கிறார்கள். போதாக்குறைக்கு, உலகெங்கிலும் இருந்து முஸ்லீம் இளைஞர்கள் (பிரபல உதாரணம்: ஒஸாமா பின் லேடன்) ஆ்ப்கானிஸ்தானுக்கு உதவக் கிளம்பிவந்திருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு, காடு, மலைகள் நிறைந்த ஆ்ப்கானிஸ்தானின் புவியியல் அமைப்பால், அந்நாட்டை யாராலும் அத்தனை சுலபத்தில் முழுக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துவிடமுடியாது. யார் எங்கிருந்து தாக்குகிறார்கள் என்றே தெரியாமல் திணறிப்போய்விட்டது சோவியத் யூனியன்.

இத்தனையையும் நமுட்டுச் சிரிப்போடு பார்த்துக்கொண்டிருந்தது சிஐஏ. பனிப்போரின் உச்சத்தில், இப்படி சோவியத் யூனியனைத் தடுமாறச் செய்ததில் அவர்களுக்கு சந்தோஷம் தாங்கவில்லை.

சில மாதங்களில் முடியவேண்டிய யுத்தம், இந்தத் திரை மறைவுக் குழப்பங்களால் வருடக்கணக்காக நீடித்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

ஐஎஸ்ஐ, சிஐஏவின் உதவி பெற்ற ஆ்ப்கன் போராளிகள், சோவியத் யூனியனுக்குக் கடுமையான நெருக்கடி கொடுத்தார்கள். அவர்கள் எத்தனை கூடுதல் துருப்புகள், ஆயுதங்களைக் கொண்டுவந்து இறக்கினாலும், யுத்தம் முடிகிற வழியாகத் தெரியவில்லை.

சிஐஏவைப் பொறுத்தவரை, சோவியத் யூனியனை வலுவிழக்கச் செய்யும் ஓர் உத்திதான் இது. தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு யுத்தத்தில் ஈடுபடும் ஒரு தேசம், எந்த அளவுக்குத் துவண்டுபோகும் என்பதை அவர்கள் ஏற்கெனவே வியட்நாம் போரில் அனுபவப்பூர்வமாக அறிந்திருந்தார்கள்.

ஆகவே, அதே தந்திரத்தைப் பயன்படுத்தி, சோவியத் யூனியனுக்குக் கடும் சேதம் உருவாக்கத் தொடங்கியது சிஐஏ. ஆயிரக்கணக்கான சோவியத் போர் வீரர்கள் ஆ்ப்கன் போராளிகளால் கொல்லப்பட்டார்கள், இப்படி ஒரு நீண்ட யுத்தத்துக்கான பெரும் செலவை சோவியத்தால் சமாளிக்கவேமுடியவில்லை.

முழுசாகப் பத்து ஆண்டுகள் (1979 - 89) நீடித்த சோவியத் யூனியன் - ஆ்ப்கானிஸ்தான் யுத்தம், லட்சக்கணக்கானவர்களைப் பலி வாங்கியது. இந்தப் போரின்மூலம் அநாதைகளாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் பல லட்சங்களைத் தாண்டியது.

இதுதவிர, யுத்தத்தின்போது அந்நாட்டில் பதிக்கப்பட்ட கண்ணி வெடிகள், இன்றுவரை முழுவதுமாக அகற்றப்பட்டுவிடவில்லை. ஒவ்வொரு நாளும், சில அப்பாவிகளேனும் இவற்றில் சிக்கி உயிரிழந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஆ்ப்கானிஸ்தானுக்கு ஏகப்பட்ட பாதிப்புகளை உருவாக்கியபிறகும், சோவியத் யூனியனால் அவர்களை முழுமையாக ஜெயிக்கமுடியவில்லை. நேரடித் தாக்குதல், கெரில்லாப் போர் என்று பலவகைகளில் ஆ்ப்கன் போராளிகள் அவர்களை விரட்டியடித்துவிட்டார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

1989ம் ஆண்டு, சோவியத் யூனியன் ஆஃப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியது. இதனால் அதிக சந்தோஷம் அடைந்தவர்கள், ஆஃப்கன் போராளிகள்கூட இல்லை. ஐஎஸ்ஐ - சிஐஏ கூட்டணிதான்.

சந்தேகமே இல்லை. அவர்களுடைய மிகப் பெரிய வெற்றி இது. இன்றுவரை, ஐஎஸ்ஐ, சிஐஏ ஆகிய இரு நிறுவனங்களின் சரித்திரத்திலும், ஆஃப்கானிஸ்தான் வெற்றி குறிப்பிடத்தக்க இடம் பிடித்திருக்கிறது.

ஆஃப்கானிஸ்தானுக்கும் முன்பும் பின்பும் சிஐஏ பல நாடுகளில் வேட்டையாடியிருக்கிறது, விளையாடியிருக்கிறது. ஆனால், இந்தமுறை சோவியத் யூனியனுக்கு மிகப் பெரிய இழப்பை உண்டாக்கிவிட்டது அவர்களுக்குத் தனிப்பட்ட சந்தோஷம்.

இதற்காக அவர்கள் பில்லியன் கணக்காக டாலர்களைச் செலவழிக்கவேண்டியிருந்தது. அதனால் என்ன? எதிரிக்கு ஒரு கண் போச்சு, நமக்கு எந்த இழப்பும் இல்லை, போதாதா?

ஆஃப்கானிஸ்தான் யுத்தத்தின் பின்னணியில் நின்று இயங்கியதால், அமெரிக்காவுக்கு அரசியல் லாபங்கள் அதிகம், நஷ்டங்கள் குறைவு.

ஆனால், இந்த ஆக்கிரமிப்பின் பின்விளைவாக நிகழ்ந்த ஒரு சம்பவம், உலக சரித்திரத்தையே மாற்றியமைத்துவிட்டது. அந்தச் சம்பவம், மறைமுகமாக சிஐஏவின் இருப்புக்கே ஆபத்தாக அமைந்துவிட்டது.

Join / Telegram : @Tamil_Books_Library

## 10. சறுக்கல்

சோவியத் யூனியனுக்கும் நமக்கும் நடுவே உள்ள இடைவெளி, எத்தனை பெரியது?

- இதுதான், இரண்டு தலைமுறை அமெரிக்க ஆட்சியாளர்கள், ராணுவத்தினர், உளவுத்துறை அதிகாரிகளைப் பித்துப் பிடித்ததுபோல் அலையச் செய்த கேள்வி. இதற்கு விடை தெரியாதவரை, அவர்களால் நிம்மதியாகச் சாப்பிட, தூங்கக்கூட முடியவில்லை. அப்படியே தூங்கினாலும், ராத்திரிக் கனவுகளில் சோவியத் காம்ரேட்கள் கை நிறைய ஆயுதங்களோடு வந்து பயமுறுத்தினார்கள்.

இடைவெளி என்றால், கிலோ மீட்டர் கணக்கு அல்ல. அமெரிக்காவைக் கவலை, குழப்பத்தில் தள்ளுவதற்காகவே Bomb Gap, Missile Gap என்று வேறு பல இடைவெளிகள் இருந்தன.

Generation Gap (தலைமுறை இடைவெளி) தெரியும், அதென்ன Bomb Gap? Missile Gap?

'Bomb Gap' என்றால், (அணு)குண்டுகளைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தில் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் நடுவில் உள்ள வித்தியாசம். அதேபோல், ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் ஓர் இடைவெளிக் கணக்குப் போட்டால், அதுதான் 'Missile Gap'.

உதாரணமாக, அணுகுண்டு ஆராய்ச்சியில், அமெரிக்காவைவிட, சோவியத் யூனியன் இரண்டு ஆண்டுகள் முன்னே இருப்பதாக நம்பப்பட்டது. இதேபோல், ரசாயன ஆயுதங்கள், ஏவுகணைகள், செயற்கைக் கோள்கள், எலக்ட்ரானிக் ஒற்று அறியும் சாதனங்கள் என்று எல்லா விஷயங்களிலும், அவர்களைவிடத் தாங்கள் சில மாதங்களாவது பின்தங்கியிருக்கிறோம் என்று நினைத்தது அமெரிக்கா.

Join / Telegram : @Tamil_Books_Library

இந்த எண்ணத்திற்கு எண்ணெய் ஊற்றி வளர்த்தது, சாட்சாத் சிஐஏவேதான்.

திரும்பத் திரும்பச் சொல்வதற்கு போரடிக்கிறது. ஆனாலும், சொல்லிதான் ஆகவேண்டும் - இரண்டாம் உலகப் போருக்குப்பிறகு, சோவியத் சமுதாயம், மற்ற யாருடைய பார்வையிலும் படாதபடி ஒரு மறைப்புக்குள் ஒளிந்துகொண்டுவிட்டார்கள். அங்கே என்ன நடக்கிறது என்பது யாருக்கும் தெரியவில்லை.

இந்த 'யாருக்கும்' என்பதில் சிஐஏவும் அடக்கம். சிஐஏமட்டுமல்ல, வேறு எந்தக் கொம்பாதிகொம்பர்களாலும், அப்போதைய சோவியத் யூனியனுக்குள் அத்தனை சுலபத்தில் ஊடுருவமுடியவில்லை.

இதனால், அமெரிக்காவின் பதற்றம் அதிகரித்தது. சோவியத் யூனியனில் என்ன நடக்கிறது, வளர்ச்சியா, வீழ்ச்சியா, இன்னொரு புரட்சியா, மக்கள் முன்னேறுகிறார்களா அல்லது கீழே விழுந்து கிடக்கிறார்களா, அடிப்படை வசதிகள் எந்த அளவு கிடைக்கின்றன, அறிவியல் முன்னேற்றங்கள் உண்டா, அவர்களிடம் உள்ள ராணுவம் எத்தனை பெரியது, ஆயுதங்கள் எப்படிப்பட்டவை இப்படி எந்தத் தகவலும் தெரிந்துகொள்ளமுடியாமல் தவித்தார்கள்.

ஆனால், இந்த உப்புமாத் தகவல்களெல்லாம் அமெரிக்காவுக்கு எதுக்கு?

எந்த ஒரு நாட்டின் அரசியல், ராணுவ பலமும், அதன் வளர்ச்சியைப் பொறுத்துதான் இருக்கிறது. சோவியத் யூனியனில் தொழில் வளர்ச்சி எப்படி, மக்களின் சராசரி வருமானம் என்ன, அரசாங்கத்துக்கு வருவாய் எப்படி வருகிறது, அதை எப்படிச் செலவு செய்கிறார்கள், ராணுவத்துக்கு எந்த அளவு பணம் ஒதுக்குகிறார்கள் என்பதெல்லாம் தெரிந்தால்தான், அவற்றின் அடிப்படையில் அமெரிக்கா தனது மாற்று நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

Join / Telegram : @Tamil_Books_Library

எல்லாம் ஏட்டிக்குப் போட்டி கணக்குதான் - அணு ஆராய்ச்சிக்காக சோவியத் யூனியன் பத்து ரூபாய் செலவழிக்கிறது என்று தெரிந்தால், உடனடியாக, அதே ஆராய்ச்சிக்கு அமெரிக்கா இருபது ரூபாய் செலவிடத் தயாராக இருந்தது.

ஆனால், 'பத்து ரூபாய்' என்கிற அந்த அடிப்படைத் தகவலே தெரியாவிட்டால், அமெரிக்கா என்ன செய்யும்? நம்முடைய அணு ஆராய்ச்சிக்கு இருபது ரூபாய் செலவழித்தால் போதுமா, அல்லது இருநூறு / இரண்டாயிரம் ரூபாய் தேவைப்படுமா என்று தெரியாமல் மண்டை உடையுமில்லையா?

பனிப்போர்க் காலகட்டத்தில், அமெரிக்கா அனுபவித்த அத்தனை அவஸ்தைகளுக்கும் அடிப்படை, இந்த ஒரு விஷயம்தான் - 'சோவியத் யூனியன் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லையே, ஐயகோ, இப்போது நான் என்ன செய்வேன்' என்று எந்நேரமும் பதறிக்கொண்டிருந்தார்கள்.

இத்தனைக்கும், அப்போது சோவியத் யூனியனில் நடந்துகொண்டிருந்த அணு ஆராய்ச்சி, ஏவுகணை வடிவமைப்புத் திட்டங்கள், விண்வெளி ஆய்வுகள் என அனைத்தும், கிட்டத்தட்ட அமெரிக்காவுக்குச் சமமான நிலையில்தான் இருந்தன. இடைவெளி என்று பார்த்தால், அதிகம் இல்லை.

ஆனால், அந்த விஷயம் அமெரிக்காவுக்குத் தெரியாதில்லையா? அவர்கள் விதவிதமான கற்பனைகளை வளர்த்துக்கொண்டு அநியாயத்துக்கு பயந்துபோனார்கள்.

அமெரிக்காவைத் தாக்கி அழிப்பதற்காகவே, சோவியத் யூனியன் விதவிதமான வண்ணங்களில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைத் தயார் செய்திருக்கிறது. அவற்றில் நிரப்பி அனுப்புவதற்காகக் கொடும் ரசாயன ஆயுதங்களையெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதுதவிர, ஜப்பானில் அமெரிக்கா வீசியதைப்போல நாலு மடங்கு பெரியதாக

Join / Telegram : @Tamil_Books_Library

அணுகுண்டுகள் தயார் செய்து அவற்றில் கம்யூனிஸ்ட் சிவப்பு வர்ணம் பூசிக்கொண்டிருக்கிறார்கள் - அமெரிக்கர்கள்மத்தியில் இப்படி ஏகப்பட்ட வதந்திகள் பரவிக்கொண்டிருந்தன.

பிரச்னை என்னவென்றால், இவையெல்லாம் வதந்திகள்தான், சோவியத் யூனியனிடம் அப்படிப்பட்ட பயங்கர ஆயுதங்கள் எவையும் இல்லை என்று உறுதியாகச் சொல்வதற்கோ, 'அநாவசியமாகக் கண்டதை நினைத்துக்கொண்டு பயப்படாதீர்கள்' என்று நம்பிக்கை தருவதற்கோ, அப்போது அமெரிக்காவில் யாரும் இல்லை.

இதனால், வெங்காயம், வெங்காயமாகக் கூம்பு கோபுரங்கள் நிறைந்த மாஸ்கோவில் உட்கார்ந்துகொண்டு, சோவியத் அதிகாரிகள் சாண்ட்விச் கடித்தபடி, ஒரு ஸ்விட்ச் தட்டலில் அமெரிக்காவின் முக்கிய இலக்குகளையெல்லாம் அழித்துவிடுவார்கள் என்கிற அளவுக்குக் கற்பனைகள் பரவியிருந்தது.

வெறுத்துப்போன அமெரிக்க அரசாங்கம், சிஐஏவின் பட்ஜெட்டை அதிகப்படுத்தியது. என்ன செய்வீர்களோ, ஏது செய்வீர்களோ தெரியாது, ரஷ்யாவுக்குள் என்ன நடக்கிறது என்பதை எங்களுக்குக் கிரிக்கெட் போட்டிபோல் 'லைவ்' ஒளிபரப்பு செய்தாகவேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள்.

சோவியத் எல்லைக்குள், அதன் அரசியல், ராணுவ வட்டாரங்களுக்குள் ஊடுருவுவது கடினமான காரியம்தான். ஆனாலும், சிஐஏ சளைக்காமல் தனது முயற்சிகளைத் தொடர்ந்துகொண்டிருந்தது.

பதிலுக்கு, சோவியத் உளவுத்துறையான கேஜிபியும், இவர்களுக்கு நன்றாகவே தண்ணிகாட்டினார்கள். இந்த இரு உளவு அமைப்புகளின் போட்டியில், பனிப்போர் மேலும் தீவிரமடைந்துகொண்டிருந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

அப்போது சிஐஏ அறிந்துகொள்ள விரும்பிய விஷயங்கள் இரண்டு - சோவியத் யூனியனிடம் அணுகுண்டுகள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் உண்டா, ஆம் எனில், அவை அமெரிக்காவரை பாயுமா?

சுலபமான கேள்விகள்தான். ஆனால், அவர்கள் என்னதான் முயன்றும், இதற்குமட்டும் தெளிவான பதில் கிடைக்கவே இல்லை. தட்டுத்தடுமாறி அவர்கள் சேகரித்த விவரங்களும், நிஜமா, பொய்யா என்று நிச்சயமாகத் தெரியாதபடி மசங்கலாக இருந்தன.

இந்த விஷயத்தில், சோவியத் யூனியன் ஆட்சியாளர்கள் மகா கில்லாடிகளாக இருந்தார்கள். உள்ளூரில் எத்தனை பிரச்னைகள் இருந்தாலும், அமெரிக்காவின் பார்வையில் தாங்கள் ஒரு சம போட்டியாளர்களாக கருதப்படவேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம்.

இதற்காக, அவர்கள் தங்களுடைய பொருளாதாரம், தொழில் வளர்ச்சி, ராணுவம், பாதுகாப்பு நடவடிக்கைகளைப்பற்றிய அனைத்து விவரங்களையும் வேண்டுமென்றே மறைத்தார்கள். அல்லது, போலி ஒற்றர்கள், டபுள் ஏஜென்ட்களைப் பயன்படுத்தி, வேண்டுமென்றே தவறான தகவல்களை சிஐஏவிடம் கசியச்செய்து பயமுறுத்தினார்கள்.

இதனால், சிஐஏவின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது. 'சோவியத் யூனியனிடம் நமக்குச் சேதம் உண்டாக்கக்கூடிய ஆயுதங்கள் உண்டா, இல்லையா?' என்று அமெரிக்க ஆட்சியாளர்கள் கேட்டால், பதில் சொல்லமுடியாமல் பேந்தப் பேந்த விழிக்கவேண்டியிருந்தது.

சரி போகட்டும், சோவியத் யூனியனின் வளர்ச்சி எப்படி இருக்கிறது? மாதம் மும்மாரி பெய்கிறதா? எல்லோரும் சுகமாகச் சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டு எப்போது அமெரிக்காவைத் தாக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்களா? அல்லது, பசி, பட்டினி என்று உள்ளூர்ப் பிரச்னைகளில்

Join / Telegram : @Tamil_Books_Library

தடுமாறிக்கொண்டிருக்கிறார்களா? சோவியத் பொருளாதாரம் வளர்கிறதா, அல்லது சரிந்துகொண்டிருக்கிறதா?

இதற்கும் சிஐஏவிடம் சரியான பதில் இல்லை. எல்லா வெளிநாடுகளிலும் வெற்றிகரமாகச் செயல்பட்டே பழக்கப்பட்ட அவர்களுக்கு, சோவியத் யூனியனில்மட்டும் முழி பிதுங்கியது. அடிப்படைத் தகவல்களைக்கூடத் திரட்டமுடியாமல் திணறினார்கள்.

ஆனால், இதையெல்லாம் வெளியே சொல்லிக்கொண்டிருக்கமுடியுமா? 'ஸாரி, தகவல் கிடைக்கலை' என்று சொன்னால் காரித் துப்பமாட்டார்களா?

அதனால் சிஐஏ என்ன செய்தது, சோவியத் யூனியன்பற்றித் தங்களுக்குக் கிடைத்த மிகச் சில தகவல்களோடு, கொஞ்சம் மசாலா சேர்க்கத் தொடங்கினார்கள். பத்து என்றால் நூறு, ஆயிரம் என்றால் லட்சம் என்று எதையும் கொஞ்சம் மிகைப்படுத்தித் தர ஆரம்பித்தார்கள்.

இதன்மூலம், சோவியத் யூனியனின் ராணுவ, ஆயுத பலம்பற்றி அமெரிக்காவுக்குத் தொடர்ந்து ஒரு தவறான பிம்பம் கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்களுடைய பலம் நம்மைவிடப் பல மடங்கு அதிகம் என்கிற நினைப்பால், தங்களது பாதுகாப்புக்காகவும், ஆயுத, விண்வெளி ஆராய்ச்சிகளுக்காகவும் முன்பைவிடக் கூடுதலாகச் செலவிடத் தொடங்கியது அமெரிக்கா.

இப்படி அமெரிக்கர்கள் சோவியத்தின் வளர்ச்சி(?)யை நினைத்துக் கவலையில் இருந்தபோது, நிஜமாகவே சோவியத் யூனியனுக்குள் அப்படி என்னதான் நடந்துகொண்டிருந்தது?

அப்போது சிஐஏவுக்கும் தெரியாத அந்த ரகசியம், மிகத் தாமதமாகதான் உலகுக்குத் தெரியவந்தது - கடுமையான

Join / Telegram : @Tamil_Books_Library

பொருளாதார வீழ்ச்சியால் திணறிக்கொண்டிருந்தது சோவியத் யூனியன்.

சோவியத்தின் சரிவுக்குக் காரணங்கள் என்ன என்பதெல்லாம் இந்தப் புத்தகத்தின் நோக்கத்துக்கு அப்பாற்பட்ட விஷயங்கள். அந்தக் கூட்டமைப்பு அப்படிச் சரிந்துகொண்டிருப்பதை சிஐஏ கவனிக்காமல் தவறவிட்டதுதான் இங்கே முக்கியம்.

சிஐஏவின் சரித்திரத்தில் மிகப் பெரிய சறுக்கல் இது. அன்றைய சூழலில் அமெரிக்காவின் முக்கியமான எதிரி என்று பார்த்தால், அது சோவியத் யூனியன்மட்டும்தான். அவர்கள் அடுத்து என்ன செய்துவிடுவார்களோ என்று அமெரிக்கர்கள் பதறிக்கொண்டிருக்கையில், சோவியத் அவர்களை எதிர்க்கப் பலமில்லாமல் விழுந்துகொண்டிருக்கிறது. அதை சிஐஏ கவனிக்கத் தவறிவிட்டது.

இதனால், கடைசிவரை சோவியத்பற்றி அமெரிக்கா கொண்டிருந்த லேசான அச்சம் குறையவே இல்லை. அவர்களுடைய அச்சத்தைப் போக்கி தைரியம் கொடுத்திருக்கவேண்டிய சிஐஏ, அதற்கு நேரெதிராகச் செயல்பட்டுச் சொதப்பியிருந்தது.

சோவியத் யூனியனின் ராணுவ, ஆயுத பலத்தை மிகைப்படுத்திக் கூறியதுகூடப் பரவாயில்லை. அவர்களுடைய பொருளாதார வீழ்ச்சியை சிஐஏ கவனிக்காமல் விட்டதுதான் மிகப் பெரிய தவறாகிவிட்டது. கடைசிவரை, அவர்களுடைய வளர்ச்சி விகிதம் நன்கு இருப்பதாகதான் அமெரிக்காவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தது சிஐஏ.

சோவியத் யூனியனின் பொருளாதாரச் சரிவுபற்றி அமெரிக்காவுக்கு முன்பே தெரிந்திருந்தால், அவர்கள் வலுவான அடக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கக்கூடும். யார் கண்டது, சோவியத்தை உடைத்துச் சிதறடிக்கிற கைங்கர்யத்தை, அமெரிக்காவேகூட நிகழ்த்திவைத்திருக்கலாம்.

Join / Telegram : @Tamil_Books_Library

சிஐஏவின் புண்ணியத்தில், அந்த அசம்பாவிதம் நடக்கவில்லை. சோவியத் யூனியன் தானாகவே உடைந்தது, பல நாடுகளாகப் பிரிந்தது.

இத்தனை ஆண்டுகளாக, அமெரிக்காவுக்குப் பெரும் சவால் கொடுத்துக்கொண்டிருந்த ஓர் எதிரிக் கூட்டமைப்பு, இப்போது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இதைச் சந்தோஷமாகக் கொண்டாடவேண்டிய அமெரிக்கா, கொஞ்சம் திகைப்போடுதான் இந்தச் சூழலை எதிர்கொண்டது. இதற்கு முழுக் காரணம், சிஐஏவின் ஒன்றரைக் கண் பார்வைதான்.

அதுவரை, 'சோவியத் யூனியன் பரம சௌக்யமாக இருக்கிறது, நன்றாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள், அடுத்த செவ்வாய்க்கிழமை சாயங்காலம் கொழுத்த ராகுகாலத்தில் அவர்கள் நம்மைத் தாக்கினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை' என்கிற ரேஞ்சுக்கு ரிப்போர்ட்கள் கொடுத்துக்கொண்டிருந்த சிஐஏவுக்கு, சோவியத்தின் திடீர் சரிவு பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

அந்த திகைப்பிலிருந்து அவர்கள் விலகுவதற்குள், அடுத்த அதிர்ச்சி, 'சோவியத் யூனியன்தான் இல்லை என்றாகிவிட்டதே, இனிமேல் எதற்கு சிஐஏ?' என்று அமெரிக்கர்களே பேசத் தொடங்கினார்கள், 'இத்தனை ஆண்டுகளாக, மக்கள் வரிப்பணத்தை சிஐஏவுக்குச் செலவழித்ததெல்லாம் போதும், மரியாதையாக அதை இழுத்து மூடுங்கள்' என்று கோரிக்கைகள் எழுந்தன.

பெரும்பான்மை அமெரிக்கர்களின் கருத்து, சிஐஏ இனிமேல் தேவையில்லை என்பதாகதான் இருந்தது. ஆனால், இப்படிச் சொன்னவர்கள் யாரும், சிஐஏவின் செயல்பாடுகளைப்பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

சோவியத்திற்கும் அமெரிக்காவுக்கும் பனிப்போர் தொடங்கிய அதே காலகட்டத்தில்தான், சிஐஏ பலம் பெற ஆரம்பித்திருந்தது. ஆனால் அதற்காக, அவர்கள் சோவியத் யூனியனை உளவு பார்ப்பதைமட்டுமே

Join / Telegram : @Tamil_Books_Library

தங்களுடைய முழு நேர வேலையாக எடுத்துக்கொள்ளவில்லை.

சிஐஏவின் பல இலக்குகளில் ஒன்று, அதுவும் முக்கியமான ஒன்று சோவியத் யூனியன். மற்றபடி, பனிப்போர் உச்சத்தில் இருந்தபோதுகூட, அவர்கள் சோவியத்தை உளவு பார்ப்பதற்குத் தங்களின் நேரம், பணத்தில் இருபது சதவிகிதத்துக்குமேல் செலவிட்டது இல்லை.

இதனால், சோவியத் யூனியன் சரிந்துவிட்டது என்பதற்காக சிஐஏவை மூட்டை கட்டிவிடமுடியாது என்று கருதியது அமெரிக்க அரசாங்கம். அவர்களுக்கு வேறு பல முக்கியமான கடமைகள் பாக்கியிருந்தன.

எனினும், மக்கள் மத்தியில் அவர்கள் இழந்த மரியாதை திரும்பக் கிடைப்பதாக இல்லை. பனிப்போர், சோவியத் அபாயம் இல்லாததால், பகிரங்கமாகவும் தைரியமாகவும் சிஐஏவை விமர்சிக்கிறவர்கள் அதிகமாகிவிட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில், சிஐஏவுக்கு, தேச பக்தி, அமெரிக்காவின் பாதுகாப்பு ஆகிய நோக்கங்கள் போதவில்லை. 'இப்போது நம்முடைய பாதுகாப்புக்கு என்ன குறைச்சல் வந்துவிட்டது?' என்று பலர் பேசத் தொடங்கினார்கள்.

பத்திரிகைகள், பிற ஊடகங்களில், சிஐஏவின் பழைய தவறுகள், குறைகளெல்லாம் பட்டியலிடப்பட்டன. இவர்களுக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் செலவழித்தது போதும் என்று எதிர்ப்புக் குரல்கள் வலுத்தன.

ஒருகட்டத்துக்குமேல், அமெரிக்க அரசால் இந்த எதிர்ப்பைச் சமாளிக்கமுடியவில்லை. சிஐஏவின் அதிகாரங்கள் (மீண்டும்) குறைக்கப்பட்டன. அவர்களுடைய செலவுக்காக ஒதுக்கப்படும் பட்ஜெட்டும் கணிசமாகக் குறைந்திருந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

இப்படியொரு சிரமமான சூழ்நிலையை, சிஐஏ அதற்குமுன் எப்போதும் சந்தித்தது இல்லை. அடுத்த ஏழு வருடங்களுக்குள், சிஐஏவுக்கு ஐந்து இயக்குனர்கள் மாறிவிட்டார்கள். யாராலும் நிலைமையைச் சமாளிக்கமுடியவில்லை.

இதே காலகட்டத்தில், சிஐஏவை ஆதரித்துப் பேசியவர்களும் இருந்தார்கள். ஆனால், 'உளவுத்துறை நாட்டுக்கு அவசியம்' என்று சொல்கிறவர்களைவிட, 'அது வீண் செலவு' என்று வாதாடியவர்கள், 'சிஐஏவின் வாலைக் கொஞ்சம் நறுக்கிவைப்பது நல்லது' என்று விமர்சித்தவர்கள்தான் அதிகம்.

வேறுவழியில்லாமல், சிஐஏ தன்னுடைய எல்லைகளைக் குறுக்கிக்கொண்டு செயல்படப் பழகிக்கொண்டது. முன்புபோல் அதிதீவிரமாக இல்லாமல், மிக அவசியமான வேலைகளைமட்டும் செய்துகொண்டிருந்தார்கள்.

ஆனால் அப்போதும், அவர்கள் முழுமையாக நம்பிக்கை இழந்திருக்கவில்லை. உளவுத்துறையின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்துகொள்கிற நாள் வரும் என்று நம்பி, காத்திருந்தார்கள்.

சுமார் பத்து வருடங்களுக்குப்பிறகு நிகழ்ந்த 9/11 தாக்குதலின்போதுதான், அமெரிக்காவில் மீண்டும் சிஐஏவுக்கு மவுசு கூடியது. உளவுத்துறை அவசியம் என்பதைப் புரிந்துகொண்டு, அதற்கு உரிய முக்கியத்துவம் தரத் தொடங்கினார்கள்.

ஆனால் அதுவரையில், அமெரிக்கச் சமூகத்தில் ஒரு வேண்டாத விருந்தாளிபோல்தான் சிஐஏ செயல்படவேண்டியிருந்தது.

இந்தக் காலகட்டத்தில், மக்களிடையே தங்கள் இமேஜை உயர்த்திக்கொள்வதற்காக, சிஐஏ என்னென்னவோ செய்து பார்த்தது - பல பழைய ரகசிய ஆவணங்களை பகிரங்கமாக வெளியிட்டார்கள், முதன்முறையாக, பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சிச்

Join / Telegram : @Tamil_Books_Library

செய்தியாளர்களுடன் நல்லுறவு வளர்த்துக்கொள்ள முற்பட்டார்கள்.

ஆனால், சோவியத் சறுக்கலின்போது அவர்கள் வாங்கியிருந்த அடி மிகப் பெரியது. இதுபோன்ற சின்னச் சின்ன மருந்துகளால், அதைக் குணப்படுத்தவும் முடியவில்லை, சிஐஏவைப் பழையபடி பலப்படுத்தவும் முடியவில்லை.

நாம் உயிர் பிழைக்கவேண்டுமானால், அதற்கு ஒரு சக்தி வாய்ந்த 'சூப்பர்' மருந்து தேவை என்று யோசித்தது சிஐஏ. இதற்காக அக்கம்பக்கம் திரும்பிப் பார்த்தபோது, அவர்களுக்குத் தோதாகக் கிடைத்தது ஒரு சர்வரோக நிவாரணி.

தீவிரவாத எதிர்ப்பு!

Join / Telegram : @Tamil_Books_Library

## 11. தீவிர(ஷ)வாதம்

'தீவிரவாதம்' என்கிற வார்த்தைக்கு, அகராதி சொல்லும் அர்த்தமும், அமெரிக்கா சொல்கிற அர்த்தமும் எப்போதும் ஒத்துப்போனதில்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, அத்துமீறுகிறவர்கள், ஆக்கிரமிக்கிறவர்கள், அடுத்தவர்களைக் காரணமில்லாமல் தாக்குகிறவர்கள் எல்லோரும் தீவிரவாதிகள்தான். தங்களைத்தவிர வேறு யாரும் இதையெல்லாம் செய்யக்கூடாது என்று மொத்தக் குத்தகை எடுத்துக்கொண்டிருந்ததால் அப்படி நினைத்தார்களோ என்னவோ.

சோவியத் யூனியன் சரிவதற்குப் பல ஆண்டுகள்முன்பாகவே, உலகம்முழுவதும் தீவிரவாதம் பரவி வருவதைக் கவனித்துவிட்டது சிஐஏ. சீக்கிரத்தில், இது நமக்குப் பெரிய தலைவலியாகும் என்பதையும் புரிந்துகொண்டுவிட்டார்கள்.

தொழில்நுட்பம் வளர்ந்துகொண்டிருக்கிறது. நமக்குக் கிடைக்கிற அதே கருவிகள், அதே உபகரணங்கள், அதே ஆயுதங்கள் தீவிரவாதிகளுக்கும் கிடைக்கத் தொடங்கினால், கடைசியில் உலகம்முழுவதும் கெரில்லா யுத்தங்கள்தான் மிஞ்சும் என்று எண்ணிய சிஐஏ, சீக்கிரத்தில் சுதாரித்துக்கொண்டுவிட்டார்கள்.

காரணம், அமெரிக்கா ஒரு பணக்கார நாடு என்பதும், அதன் வல்லரசு அடையாளமும் எல்லோருக்கும் தெரிந்த விஷயங்கள். பழுத்த மரத்துக்குதான் கல்லடி விழும்.

தவிர, உலகத்தில் அரை இஞ்ச் மீதமில்லாமல் உளவு பார்த்துக்கொண்டிருக்கிறது சிஐஏ. தங்களை மீறி யார் என்ன செய்தாலும், 'யாருப்பா அங்கே?' என்று அதட்டி மிரட்டாவிட்டால் அமெரிக்காவுக்குப் பொழுது போகாது.

இதனால் எரிச்சலடைந்த பல குழுக்கள், அமெரிக்காமீது தங்களுடைய ஆயுதங்களைத் திருப்பக்கூடும் என்று

Join / Telegram : @Tamil_Books_Library

கருதியது சிஐஏ. இதைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்று தீவிர(?)மாக யோசிக்கத் தொடங்கினார்கள்.

1986ம் ஆண்டு, சிஐஏவில் தீவிரவாதத் தடுப்புப் பிரிவு (Counter-Terrorism Center) உருவாக்கப்பட்டது. இவர்களுடைய வேலை, உலகம்முழுக்க எங்கே என்னென்ன தீவிரவாதக் குழுக்கள் உருவாகியிருக்கின்றன, அவற்றுக்கு யாரெல்லாம் ஆதரவு தருகிறார்கள், அவர்களுடைய நோக்கம் என்ன, இலக்கு என்ன என்பதை ஆராய்வது.

ஏற்கெனவே யாரும் பயங்கர ஆயுதங்களைத் தயாரிக்கக்கூடாது, அதற்காகதான் ஊர்முழுக்க வேவு பார்க்கிறோம் என்று தனக்கான ஒரு நியாயத்தை உருவாக்கிக்கொண்டிருந்த சிஐஏ, இந்தப் புதிய பிரிவை அதன் நீட்சியாகவே பார்த்தது. பயங்கர ஆயுதங்கள்போலவே, பயங்கரவாதிகளையும் கண்டுபிடித்துக் களையெடுக்கப்போகிறோம் என்று கிளம்பினார்கள்.

இதற்கான ஆள் பலமும், தொழில்நுட்பமும் ஏற்கெனவே சிஐஏவிடம் இருந்தது. அதற்கு இப்போது ஒரு புதிய அர்த்தம், நோக்கம் கற்பித்துக்கொண்டார்கள். அவ்வளவுதான்.

எப்போதும், அதிநவீன தொழில்நுட்பத்துக்கு ஒரு படி மேலே இருக்கவேண்டும் என்பதுதான் சிஐஏவின் கொள்கை. அவர்களுடைய பிழைப்பு என்னதான் மனித உளவாளிகள், ஒற்றர்களை நம்பியிருந்தாலும், தொழில்நுட்பத்தோடு கை கோர்த்துக்கொண்டால், மேலும் பல மடங்கு சிறப்பாகச் செயல்படமுடியும் என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருந்தார்கள்.

அப்போது பல பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள செயற்கைக் கோள்களை சிஐஏ பயன்படுத்திக்கொண்டிருந்தது. வானத்திலிருந்துமட்டுமல்ல, தண்ணீருக்குள்ளும் சென்று பார்க்கக்கூடிய உபகரணங்கள் அவர்கள்வசம் இருந்தன.

Join / Telegram : @Tamil_Books_Library

இதனால், உலகம்முழுவதும் சிஐஏவுக்குக் கண்கள் உண்டு. நீங்கள் மொட்டை மாடியில் துண்டு உலர்த்துவதில் தொடங்கி, சாலைகள், பாலங்கள், ராணுவ நடவடிக்கைகள், அறிவியல் ஆராய்ச்சிகள், தீவிரவாதிகளின் நடமாட்டங்கள், போதைப் பொருள் கடத்தல் என்று சகலத்தையும் அவர்களால் கண்காணிக்கமுடியும்.

இந்தச் செயற்கைக் கோள்கள் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான புகைப்படங்களைக் கொண்டுவந்து குவிக்கின்றன. இவற்றை நிதானமாக உட்கார்ந்து ஆராய்வதற்காகவே, சிஐஏவில் NPIC (National Photographic Interpretation Center) என்று ஒரு தனிப் பிரிவு இருக்கிறது.

ஆரம்ப காலத்தில், சோவியத் யூனியனின் ஆயுத ஆராய்ச்சிகளை அடையாளம் காண்பதற்காக உருவாக்கப்பட்ட பிரிவு இது. சோவியத் எல்லையினுள் வேவு விமானங்கள் அல்லது செயற்கைக் கோள்கள் பல நேரங்களில், வெவ்வேறு கோணங்களில் எடுத்து அனுப்பிய புகைப்படங்களை, பூதக் கண்ணாடி சகிதம் உட்கார்ந்துகொண்டு ஆராய்வார்கள்.

அதன்பிறகு, புகைப்படங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அதையெல்லாம் அலசி ஆராய்வதற்கான கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர்களும் வந்துவிட்டன.

வெறும் புகைப்படங்களை வைத்துக்கொண்டு என்ன பெரிதாக ஆராய்ந்துவிடமுடியும் என்று நினைக்காதீர்கள். ஒரு சில புகைப்படங்களின் அடிப்படையில், ஒரு நகரத்தின் குத்துமதிப்பான மக்கள் தொகை, வீடுகளின் அமைப்பு, கலாசார முறைகள், அது தொழிற்சாலைகள் நிரம்பிய பகுதியா, அல்லது மக்கள் அதிகம் வாழ்கிற பகுதியா என்றெல்லாம் துல்லியமாகக் கண்டுபிடித்துவிடக்கூடிய கில்லாடிகள் சிஐஏவில் உண்டு.

அதுமட்டுமில்லை, 'இன்ஃப்ரா-ரெட்' (InfraRed) எனப்படும் அகச்சிவப்புக் கதிர்களைச் சரியானமுறையில் பயன்படுத்தினால், அதே புகைப்படங்களில் இருந்து வேறு

Join / Telegram : @Tamil_Books_Library

சில விவரங்களையும் தோண்டியெடுப்பது சாத்தியம். அந்தப் புகைப்படங்கள் எடுப்பதற்குச் 'சற்றுமுன்னால்' என்ன நடந்தது என்பதைக்கூட சிஐஏவால் ஓரளவு சரியாகவே ஊகித்துவிடமுடியும்.

ஒருவேளை, இப்படிக் கண்ணால் பார்ப்பது ஏமாற்றினால்?

அதற்காகதான், காதால் கேட்கும் விஷயங்களையும் திரட்டுகிறது சிஐஏ. நண்பர்கள், எதிரிகள், வம்புக்காரர்கள், சாதுக்கள் என்று எந்த வித்தியாசமும் பார்க்காமல், எல்லா தேசங்களிலும் முக்கியமான அலுவலகங்களை ஒட்டுக்கேட்கிறார்கள்.

இப்படி உலகம்முழுக்கப் பல அலுவலகங்களையும், அவற்றின் தொலைபேசி இணைப்புகளையும் சிஐஏ வழிமறித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதனால், ரகசியப் பேச்சுவார்த்தைகள், ஆக்கிரமிப்புத் திட்டங்கள் என்று சகலத்தையும் முன்கூட்டியே தெரிந்துகொண்டுவிடுகிறார்கள்.

இதற்கு பயந்துதான், ஃபிடல் காஸ்ட்ரோ போன்ற பல தலைவர்கள், முக்கியமான விஷயங்களைத் தொலைபேசியில் பேசுவதைத் தவிர்க்கிறார்கள். வேறு பல அலுவலகங்களில், ஒட்டுக்கேட்கமுடியாத விசேஷ அறைகள் அமைக்கப்பட்டிருக்கும்.

சரி, போகட்டும் என்று சிஐஏ சும்மா இருந்துவிடுவதில்லை. வேறு பல புதுப்புது தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து, இந்த 'முன்ஜாக்கிரதை முத்தண்ணா'க்களையும் மடக்குவதற்கான புதிய வழிகளைத் தேடியபடி இருக்கிறார்கள்.

சிஐஏ உளவாளிகள், ஒற்றர்களுக்குத் தேவைப்படும் நவீன கருவிகள், உபகரணங்களைத் தயாரிப்பதற்காகவே, தனியாக ஓர் அறிவியல் - தொழில்நுட்பப் பிரிவை உருவாக்கியிருக்கிறார்கள். அதன் பெயர், The Directorate Of Science And Technology.

Join / Telegram : @Tamil_Books_Library

பல ஊடகங்களில், சிஐஏ என்று சொன்னதும், 'ஜேம்ஸ் பாண்ட் 007'ன் பொம்மை காட்டுவார்கள், அல்லது பாண்ட் படங்களில் வருகிற தீம் ம்யூசிக்கை இசைப்பார்கள்.

இந்த பிம்பம், சிஐஏவுக்குப் பிடிக்கவில்லை. 'துப்பறியும் கதைகள், சினிமாக்களில் வருவதையெல்லாம் அப்படியே நம்பிவிடாதீர்கள், எங்களுக்கும் ஜேம்ஸ் பாண்டுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை' என்று சிஐஏவின் பல இயக்குனர்கள் கரடியாகக் கத்திக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், ஜேம்ஸ் பாண்ட் படங்களில் வருவதைக்காட்டிலும் பிரம்மாண்டமான, நம்பமுடியாத தொழில்நுட்பங்களையெல்லாம் சிஐஏவின் அறிவியல் பிரிவு உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

ஆனால் இதையெல்லாம் வெளியே சொல்லிக்கொண்டிருந்தால், உளவுப் பணிகள் பாதிக்கப்படுமில்லையா? அதனால்தான், தங்களுடைய கண்டுபிடிப்புகளைப் பகிரங்கமாக்காமல் அடக்கி வாசிக்கிறார்கள்.

யாருக்கும் தெரியாதபடி ரகசியமாகப் பொருத்தக்கூடிய ஒட்டுக் கேட்கும் கருவிகள், கேமெராக்கள், இருட்டிலும் தெளிவாகப் பார்க்க உதவுகிற எலக்ட்ரானிக் சாதனங்களில் தொடங்கி, விதவிதமான உடைகள், மாறுவேடங்கள், ரகசியத் தகவல்களை எழுதுவதற்கான காகிதங்கள் என்று இந்தப் பட்டியல் நீள்கிறது.

இந்த ஆராய்ச்சிப் பிரிவின் இன்னொரு முக்கியமான நோக்கம், சாதாரணமாக நாம் பயன்படுத்தக்கூடிய பொருள்களில், ரகசிய அறைகளை அமைப்பது.

உதாரணமாக, ஒரு சின்னப் பேனாவுக்குள் ரகசியமாகச் செய்திகளை மறைத்துவைப்பதற்கான துளியூண்டு அறை ஒன்றை உருவாக்கியிருப்பார்கள். வெளிப் பார்வைக்கு, அது ஒரு சாதாரணப் பேனாபோல்தான் தெரியும். ஆனால், சிஐஏ ஏஜென்ட்கள் அதற்குள் பல விஷயங்களை மறைத்துவைத்துக் கடத்துவிடமுடியும்.

Join / Telegram : @Tamil_Books_Library

பேனாமட்டுமில்லை. உங்களைச் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்துக்கொள்ளுங்கள். தூண், துரும்பு என நம் கண்ணில் படும் அத்தனையினுள்ளும், சிஐஏவினால் ஒரு ரகசிய அறை உருவாக்கி எதையாவது ஒளித்துவைத்துவிடமுடியும். சிஐஏவால் திரட்டப்படும் பல தகவல்கள், இப்படி மரத்தினுள் ஒளித்துவைத்த மாமத யானைகளாகதான் கை மாறுகின்றன.

இந்த விஷயத்தில், சிஐஏதான் உலகின் டாப். இதுபோன்ற ஆராய்ச்சிகளுக்காக ஏகப்பட்ட பணம் செலவிடுவதில், அவர்களை யாரும் நெருங்கமுடியாது. இதனால், எவராலும் தொடமுடியாத பல தொழில்நுட்பங்கள் அவர்களிடம் உண்டு.

பெரும்பாலும், இவற்றை சிஐஏவேதான் வடிவமைத்து, ரகசியமாகத் தயாரிக்கிறது. மிகச் சில தருணங்களில், வெளியாள்களை அனுமதிப்பது உண்டு.

இப்படித் தயாரிக்கப்பட்ட சாதனங்கள், உலகம்முழுவதும் உள்ள சிஐஏ ஏஜென்ட்களின் தேவைக்கேற்ப அனுப்பப்படுகிறது. அதன்பிறகு, உட்கார்ந்த இடத்தில் சகல தகவல்களையும் சுருட்டிக்கொண்டுவிடலாம்.

ஆராய்ச்சிதவிர, சிஐஏ ஓர் அச்சகமும் வைத்திருக்கிறது. இதில்தான் பரம ரகசியங்களில் தொடங்கி, பச்சைப் பொய்கள்வரை அனைத்தும் அச்சாகின்றன.

சிஐஏ இயங்கிவரும் நாடுகளில், மக்களிடையே ஏதேனும் ஓர் அமெரிக்க ஆதரவுக் கருத்தைப் பரப்பவேண்டியிருந்தால், அதற்கான துண்டுப் பிரசுரங்களை இங்குதான் அச்சிட்டு விநியோகிப்பார்கள். இதுதவிர, பல முக்கியமான விஷயங்களைப்பற்றிய சிறு, பெரிய நூல்களையும் தயாரிக்கிறார்கள். அதிபரின் PDB அறிக்கைகூட இங்குதான் அச்சிடப்படுகிறது.

ஆனால் இதையெல்லாம்விட, சிஐஏ அச்சகத்தின் முக்கியமான நோக்கம், போலி ஆவணங்களைத் தயார் செய்வது. வெளிநாடுகளில் பணிபுரியும் சிஐஏ

Join / Telegram : @Tamil_Books_Library

அலுவலர்கள், ஏஜென்ட்களுக்குப் போலியான அடையாள அட்டைகள் / சான்றிதழ்கள் போன்றவற்றை இங்குதான் அச்சிட்டு விநியோகிக்கிறார்கள்.

இப்படி ஏகப்பட்ட தயாரிப்புகளுடன் உலகத்தை நோட்டம் பார்க்கக் கிளம்பும் சிஐஏ அதிகாரிகள் ஆரம்பத்தில் அரசியல்வாதிகளை, ஆட்சியாளர்களை, ராணுவத்தினரை, அவர்களை எதிர்க்கும் அதிருப்திக் குழுக்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு, அறிவியல் ஆய்வுகள், விண்வெளி ஆராய்ச்சிகள், போதை மருந்துப் போக்குவரத்து என்று அவர்களது கண்காணிப்பு எல்லைகள் விரிவடைந்தன.

சிஐஏவில் தீவிரவாதத் தடுப்புப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டபிறகு, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தீவிரவாதக் குழுக்களின் நடமாட்டம்பற்றிய தகவல்களையும் சிஐஏ உளவாளிகள் சேகரிக்கத் தொடங்கினார்கள். இவர்களில் யாரேனும் அமெரிக்காவைத் தாக்கும் அபாயம் உண்டா என்பதுதான் அவர்களுடைய முக்கியக் கவலையாக இருந்தது.

அமெரிக்காவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளில் யார் ஈடுபட்டாலும், அந்தக் குழுக்களின் நடமாட்டம்பற்றிய தகவல்களை சிஐஏ சேகரித்து, அமெரிக்க அரசிடம் கொடுத்துவிடும். அதன்பிறகு, அந்தத் தகவல்களை எங்கே, எப்போது, எப்படி வெளியிடுவது, எப்படிப் பயன்படுத்துவது, எப்படி எதிர் நடவடிக்கைகள் எடுப்பது என்பதையெல்லாம், அரசாங்கமும் சிஐஏவும் சேர்ந்து முடிவெடுக்கின்றன.

பல சந்தர்ப்பங்களில், இதுபோன்ற எதிர் நடவடிக்கைகளில் சிஐஏவின் பெயரே வெளியில் வராது. விஷயத்தைச் சொல்லிவிட்டு, என் கடமை தீர்ந்தது என்று போய்க்கொண்டே இருப்பார்கள்.

இதனால், நிஜமாகவே சிஐஏ தீவிரவாதத்தை ஒழிக்கப் பாடுபடுகிறது என்கிற பிம்பம் அமெரிக்க மக்கள் மத்தியில் உருவாகவில்லை. ஏதோ சும்மா பொழுதுபோகாமல்

Join / Telegram : @Tamil_Books_Library

இந்தத் தகவல்களையெல்லாம் திரட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நினைத்தார்கள். இதன் முக்கியத்துவம் அப்போது யாருக்கும் புரிந்திருக்கவில்லை.

பொதுவாகவே, அமெரிக்கர்கள் தங்களை மையமாக வைத்துதான் உலகம் சுழல்கிறது என்று நினைக்கிறவர்கள். ஒரு விஷயத்தில் தங்களுக்கு ஆதாயம் இல்லாவிட்டால், அதில் அக்கறை காட்டமாட்டார்கள். அந்தச் சம்பவம் எந்தவிதத்திலும் அமெரிக்காவைப் பாதிக்கமுடியாது என்பதுபோல் அலட்சியமாக நடந்துகொள்வார்கள்.

இதனால், தொண்ணூறுகளில் உலகமயமாகிக்கொண்டிருந்த தீவிரவாதம், தங்களையும் நேரடியாகப் பாதிக்கக்கூடும் என்று அவர்களுக்கு எண்ணத் தோன்றவில்லை. சிஐஏவின் தீவிரவாதக் கண்காணிப்புகூட, சோவியத் யூனியனுக்குப் பதிலாக, நோட்டம் விடுவதற்கு இன்னும் சில புதிய விரோதிகள் கிடைத்திருக்கிறார்கள் என்கிற அளவில்தான் நடந்துகொண்டிருந்தது.

கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில்தான், மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு எதிரான பல தீவிரவாத அமைப்புகள் உருவாகிப் பலம் பெற்றுக்கொண்டிருந்தன. இதை சிஐஏ கவனித்தது. ஆனால், தங்களுக்கு உடனடி பாதிப்பு இல்லை என்று தெரிந்தபிறகு, 'பொடிப் பசங்க, பிழைச்சுப்போகட்டும்' என்று விட்டுவிட்டார்கள்.

இப்படிப் 'பிழைத்துப் போன' பையன்கள்தான், பிறகு அமெரிக்காவின் கண்ணில் விரல் விட்டு ஆட்டினார்கள். 'குய்யோ முறையோ' என்று அலறியடித்துக்கொண்டு, தீவிரவாத ஒழிப்பு ஆயுதத்தைக் கையில் எடுத்தது அமெரிக்கா.

இதற்கெல்லாம் முன்னோட்டம்போல, தொண்ணூறுகளின் தொடக்கத்தில் ஒரு விஷயம்

Join / Telegram : @Tamil_Books_Library

நடந்தது - ஈராக் அதிபர் சதாம் உசேன், பக்கத்திலிருந்த குட்டி தேசமான குவைத்தை ஆக்கிரமிக்கத் தீர்மானித்தார்.

சதாம் உசேன் ஏற்கெனவே அமெரிக்காவுக்கு அறிமுகமான ஆசாமிதான். ஈரான் - ஈராக் யுத்தத்தின்போது, அமெரிக்கா ஈராக்கை ஆதரித்துக்கொண்டிருந்தது.

ஆனால் அதற்காக, சிஐஏ சதாம் உசேனை முழுவதுமாக நம்பிவிடவில்லை. வழக்கம்போல், ஈராக்கினுள்ளும் ஊடுருவியிருந்தார்கள், அங்கே என்ன நடக்கிறது என்று ஒரு விஷயம் மிச்சம் வைக்காமல் உளவு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இதனால், ஈராக் ராணுவத்தின் செயல்பாடுகளைப்பற்றி சிஐஏ ஓரளவு துல்லியமாகவே புரிந்துகொண்டுவிட்டது. ஈராக்கிடம் என்னென்னவிதமான ஆயுதங்கள் உண்டு, அவை எத்தனை தூரம் சென்று தாக்கக்கூடியவை, என்னவிதமான சேதம் உண்டாக்கக்கூடியவை, அவர்களுடைய ஆயுதங்கள் எங்கே தயாராகின்றன, எங்கே சேகரிக்கப்படுகின்றன என்று சகல விவரங்களையும் திரட்டிவிட்டார்கள்.

போர் முடிந்தபிறகும், ஈராக்கின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை அறிந்துகொள்வதற்காகத் தங்களின் கண்காணிப்பைத் தொடர்ந்தது சிஐஏ. அப்போதுதான், கவலைக்குரிய ஓர் அம்சத்தை அவர்கள் கவனித்தார்கள்.

ஈராக்கின் ஆயுத பலம், கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எண்ணிக்கை அளவில்மட்டுமல்ல. முன்பைவிடக் கூடுதல் சக்தி வாய்ந்த, அதிக தூரம் பாயக்கூடிய ஆயுதங்களைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றது சிஐஏ.

ஆனால், அப்போதைய சூழ்நிலையில், அமெரிக்க அரசாங்கத்துக்கு இவையெல்லாம் வெறும் தகவல்களாகமட்டுமே தெரிந்தன. ஈராக் தனது ஆயுதங்களை அமெரிக்காவை நோக்கித்

Join / Telegram : @Tamil_Books_Library

திருப்பாதவரையில், இவர்கள் அதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

எதற்கும் இருக்கட்டும் என்று சிஐஏ ஈராக்கில் தனது உளவுப் பணிகளை மேலும் விரைவாக முடுக்கிவிடத் தொடங்கியது. ஈராக் ராணுவம் எங்கே, என்ன செய்துகொண்டிருக்கிறது என்று விநாடி சுத்தமாக தகவல்களைத் திரட்டத் தொடங்கினார்கள்.

அதுமட்டுமில்லை, சதாம் உசேனும் அவரது சக மந்திரிமார்களும் நான்கு சுவர்களுக்குள்ளும், அதற்கு வெளியிலும் என்ன பேசுகிறார்கள், சுற்றுவட்டாரப் பதினெட்டுப் பட்டி நாடுகளோடு அவர்களுக்கு என்னவிதமான நல்லுறவு இருக்கிறது, நாளைக்கே ஒரு பிரச்னை என்றால், யாரெல்லாம் சதாமுக்கு ஆதரவாக வருவார்கள், யாரெல்லாம் எதிர்த்து நிற்பார்கள் போன்ற விவரங்களையும் சேகரித்தது சிஐஏ.

இதையெல்லாம் தொகுத்துப் பார்க்கிறபோது, அவர்களுக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது - சதாம் உசேன், சாதாரணமானவர் இல்லை.

சதாமின் பேச்சில் எப்போதும் நெருப்பு பறக்கிறது. அவருக்கு யார்மீதும் பெரிய மரியாதையோ, பயமோ இருப்பதுபோல் தெரியவில்லை. எதுவானாலும், அதில் தனக்கும் தன் நாட்டுக்கும் ஆதாயம் இருக்கிறதா என்பதைப்பற்றிமட்டும்தான் கவலைப்படுகிறார். அது இல்லை என்றாகிவிட்டால், அதற்காக யாரையும் பகைத்துக்கொள்ளத் தயங்கமாட்டார்போலிருக்கிறது.

கிட்டத்தட்ட இதேமாதிரியான குணங்கள் அமெரிக்காவுக்கும் உண்டு என்பதை அப்போது சிஐஏவுக்கு யாரும் எடுத்துச்சொல்லவில்லை. ஆகவே, 'சதாம் உசேன் இந்தப் பகுதியின் தாதாவாக முயற்சி செய்கிறார்' என்றுமட்டும் தங்கள் தலைமையகத்துக்கு ரிப்போர்ட் அனுப்பினார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

ஒருகாலத்தில் சிஐஏ இயக்குனராக இருந்த ஜார்ஜ் புஷ், இப்போது அமெரிக்காவின் துணை அதிபராக இருந்தார். அவருக்கு சதாம் உசேன்பற்றிய சகல சமாசாரங்களும் தெரிந்திருந்தது. சதாம் யார், எப்படிப்பட்டவர், வருங்காலத்தில் என்னவெல்லாம் செய்யக்கூடியவர் என்பதையெல்லாம், ஓர் உளவுத்துறை அதிகாரிக்கே உரிய லாவகத்துடன் ஊகித்துப் புரிந்துகொண்டிருந்தார் அவர்.

ஆகவே, அதிபர் ரொனால்ட் ரீகனை(Ronald Reagan)ச் சந்தித்து, 'சதாமை நம்பவேண்டாம்' என்று எச்சரித்தார் ஜார்ஜ் புஷ்.

இந்த எச்சரிக்கையை ரீகன் எந்த அளவு மதித்தார் என்பது தெரியாது. ஆனால், சதாம் உசேனால் தங்களுக்கு உடனடி ஆபத்து எதுவும் இல்லை என்பதே அப்போதைய அமெரிக்காவுக்குப் போதுமானதாக இருந்தது.

1990ம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து, ஈராக் ராணுவத்தின் நடவடிக்கைகள் சற்றே சந்தேகத்துக்கிடமாக இருந்தன. சதாம் ஏதோ ஒரு திட்டத்துடன்தான் அவர்களைச் சில இடங்களில்மட்டும் குவிக்கிறார் என்று நினைத்தது சிஐஏ.

இத்தனை ஆண்டுகளாக சதாமைத் தொடர்ந்து கண்காணித்துக்கொண்டிருக்கிற அவர்களுக்கு, காரணமில்லாமல் இந்த எலி கோவணத்தோடு ஓடாது என்பது நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகவே, ஈராக் ராணுவத்தின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள்.

குவைத் எல்லையில் உள்ள கடற்பகுதியில்தான், ஈராக் ராணுவம் பலம் சேர்த்துக்கொண்டிருந்தது. இதைச் சுட்டிக்காட்டி, சதாம் குவைத்தை ஆக்கிரமிக்கக்கூடும் என்று அமெரிக்காவுக்குக் குறிப்பு அனுப்பியது சிஐஏ.

ஆரம்பத்திலிருந்தே, குவைத் ஓர் அமெரிக்க விசுவாசி தேசம். அதுமட்டுமின்றி, குவைத்தை ஈராக்

Join / Telegram : @Tamil_Books_Library

ஆக்கிரமித்துவிட்டால், அதனால் அமெரிக்காவுக்கும் சில பொருளாதார இழப்புகள் உண்டு.

ஆகவே, இந்த விஷயத்தில் தலையிட்டாகவேண்டும் என்று தீர்மானித்தது அமெரிக்கா. ரீகனுக்குப்பிறகு அதிபராகியிருந்த ஜார்ஜ் புஷ், ஈராக்கின் அமெரிக்கத் தூதர்மூலம் சதாம் உசேனுக்குத் தூது அனுப்பினார், 'குவைத் விஷயத்தில் உங்களுக்கு என்ன பிரச்னையானாலும், பேசித் தீர்த்துக்கொள்ளலாம், ராணுவ நடவடிக்கைகள் எதுவும் வேண்டாம்'

'குவைத்மேல் கையை வைத்தால், பல்லை உடைப்பேன்' என்பதுபோல் அமெரிக்கா நேரடியாக மிரட்டியிருந்தால்கூட சதாம் உசேன் தனது முடிவை மாற்றிக்கொண்டிருக்கமாட்டார். இந்த அறிவுரைகளெல்லாம் அவருக்கு எம்மாத்திரம்? சுருட்டிக் காது குடைந்தபடி, 'நான் குவைத்தை ஆக்கிரமிக்கப்போகிறேனா? சேச்சே, யார் சொன்னது? அதெல்லாம் இல்லை' என்றார் அலட்சியமாக.

ஆனால், அவர் சொல்வது உண்மையில்லை என்பது அப்போது எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாக இருந்தது. 'இன்னும் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள், ஈராக் படைகள் குவைத்தினுள் நுழைந்துவிடக்கூடும்' என்று அமெரிக்காவுக்குக் குறிப்பு அனுப்பியது சிஐஏ.

குட்டியூண்டு தேசம் குவைத். அதைப் பிடிக்கவேண்டுமானால், சதாமுக்கு ஒரு சின்னப் படைகூடப் போதும். ஆனால், ஆயிரக்கணக்கான ஈராக் துருப்புகள் அந்நாட்டை மெல்லச் சுற்றிவளைத்துக்கொண்டிருந்தன.

1990 ஆகஸ்ட் 1ம் தேதி, ஈராக் ராணுவம் குவைத்தைக் கைப்பற்றியது. அதனை ஈராக்கின் ஒரு பகுதியாக அறிவித்துவிட்டா சதாம் உசேன்.

அதற்குமேல், அமெரிக்காவால் சும்மா இருக்கமுடியவில்லை. குவைத்தை விடுவிப்பதற்காக,

Join / Telegram : @Tamil_Books_Library

அவர்களும் யுத்தத்தில் குதித்தார்கள்.

ஸ்கட், பாட்ரியாட் என்று ரகம்ரகமாக ஏவுகணைகள் பறந்த இந்த வளைகுடாப் போரில், அமெரிக்க ராணுவம்தான் கதாநாயகன், சிஐஏ வழக்கம்போல் திரைக்குப் பின்னாலிருந்துமட்டுமே உதவவேண்டியிருந்தது.

ஆனால், 'வளைகுடாப் போர்' என்று வர்ணிக்கப்பட்ட இந்த யுத்தத்தில், சிஐஏவின் பங்கு மிக மிக முக்கியமானது. போரின் முடிவில், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இதனை வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சதாம் உசேனும் ஈராக் ராணுவமும் எந்த நேரத்தில் என்ன செய்யப்போகிறது என்பது கடவுளுக்கும் தெரியாத சமாசாரங்கள். ஆனால், ஒவ்வொருமுறையும், சிஐஏமட்டும் எப்படியோ அந்தத் தகவல்களைக் கொத்திக்கொண்டு வந்துவிட்டார்கள்.

ஈராக் வட்டாரங்களில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்கள், சிஐஏ தலைமையகத்தில் நாள்முழுவதும் மெகாசீரியல்கள்போல் ஓடிக்கொண்டிருந்தன. இன்னும் தங்களது உளவாளிகள், ஒற்றர்கள், நவீன தொழில்நுட்பங்கள் என்று சகலத்தையும் பயன்படுத்தி, அமெரிக்க அரசாங்கம், ராணுவத்துக்குத் தேவையான விவரங்களை அவர்கள் தொடர்ந்து சப்ளை செய்துகொண்டிருந்தார்கள்.

முன்பெல்லாம், சிஐஏ தலைமை அலுவலகம் ஒரு நாளுக்கு ஒரு தகவல் அறிக்கைதான் தயார் செய்யும். மிஞ்சிப்போனால் இரண்டு, அதற்குமேல் அபூர்வம்.

ஆனால், வளைகுடாப் போர் நடந்தபோது, மணிக்கு ஓர் அறிக்கை என்கிற அளவில் தகவல்கள் வந்து குவிந்துகொண்டிருந்தன. ஈராக் தரப்பில் என்ன நடக்கிறது என்பதை, டிவியில் நேரடி ஒளிபரப்புக் கிரிக்கெட் மேட்ச் பார்ப்பதுபோல் அமெரிக்கா உடனுக்குடன் தெரிந்துகொண்டுவிட முடிந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

இதற்கு முக்கியக் காரணம், சதாம் உசேன் குவைத்தைப்பற்றி யோசிப்பதற்குமுன்பே ஈராக்முழுவதும் ஊடுருவியிருந்த சிஐஏ நெட்வொர்க்தான். தவிர, பல ஆண்டுகளாக சதாமின் ராணுவ நடவடிக்கைகளைப் பார்த்துப் பார்த்து, இந்த மனிதர் அடுத்து என்ன செய்வார் என்பதை ஓரளவு சரியாகவே கணிக்கக் கற்றுக்கொண்டிருந்தது சிஐஏ.

இதனால், ஈராக்கின் தரைப்படை வீரர்கள் நடமாட்டத்தில் தொடங்கி, பீரங்கிகள், ஏவுகணைகள், இவற்றையெல்லாம் தயாரிக்கிற இடங்கள், ஏவுதளங்கள் என்று எல்லா விவரங்களும் அமெரிக்காவுக்குக் கிடைத்துவிட்டது. ஒவ்வொன்றாகத் தேடிப் பிடித்து அழிக்க வசதியாக இருந்தது.

வளைகுடாப் போரின்போது சிஐஏ செய்த இன்னொரு முக்கியமான வேலை, சதாம் உசேனுக்கு ஆதரவாக யாரெல்லாம் வருகிறார்கள் என்பதைக் கண்காணித்தது.

இந்த ஆதரவில் இரண்டு வகைகள் உண்டு. முதலாவது, 'அண்ணன் சதாம் உசேன் செய்வதுதான் சரி, அவருக்குப் பின்னே அணி திரள்வோம்' என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு, ஈராக் படைகளுக்கு ஆதரவாகத் தங்களுடைய ராணுவத்தை அனுப்புவது.

இதுகூடக் கொஞ்சம் பரவாயில்லை, இரண்டாவது வகை 'ஆதரவு'தான் மிகவும் ஆபத்தானது - ஈராக்குக்கு எதிராகப் படை திரட்டுகிறவர்களையெல்லாம், அவர்கள் எதிர்பாராத நேரத்தில் முதுகில் குத்திச் சேதம் உண்டாக்குவது.

சதாம் உசேன் விஷயத்தில், இந்த இரண்டாம் வகை ஆதரவு தருவதற்கு நிறைய பேர் இருந்தார்கள். பல நாடுகளில் இருந்த தீவிரவாதக் குழுக்கள், அவருக்கு உதவும்வகையில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள்மீது நேரடி, மறைமுகத் தாக்குதல்கள் நிகழ்த்தத் தீர்மானித்திருந்தன.

Join / Telegram : @Tamil_Books_Library

இவர்களையெல்லாம், சிஐஏவின் 'தீவிரவாதத் தடுப்பு'ப் பிரிவு கவனித்துக்கொண்டது. தங்களது உளவுப் பிரிவின் உதவியுடன், நூறுக்கும் மேற்பட்ட தாக்குதல் முயற்சிகளை முன்கூட்டியே கண்டறிந்து, அந்தந்த நாடுகள், ஆட்சியாளர்களின் உதவியோடு தடுத்து நிறுத்தினார்கள்.

சிஐஏவின் உதவிமட்டும் இல்லாவிட்டால், அமெரிக்கா இப்படி ஓர் ஆபத்தை எதிர்பார்த்திருக்கவும் முடியாது. தவிர்த்திருக்கவும் முடியாது.

அதனால்தான், போரின் முடிவில் வெளியான அனைத்துத் தகவல் அறிக்கைகளும் சிஐஏவைப் புகழ்ந்திருந்தன. மிகச்சில தருணங்களைத்தவிர, வளைகுடாப் போர் தொடர்பாக சிஐஏ திரட்டித் தந்த எல்லாத் தகவல்களும் சரியாகவே இருந்தன.

அதையெல்லாம்விட முக்கியம், ஈராக் குவைத்தை ஆக்கிரமிக்கப்போகிறது என்று சிஐஏ முன்கூட்டியே அறிந்து சொல்லிவிட்டது. இதனால், அமெரிக்கா தனது அரசியல்ரீதியிலான நிலைபாடுகளைத் தெளிவாக்கிக்கொள்ள ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

இதுதவிர, போரின்போது ராணுவத்துக்குத் தேவையான தகவல்கள், தீவிரவாத இயக்கங்களின் தாக்குதல் முயற்சிகளைப்பற்றிய விவரங்கள் போன்றவற்றைத் திரட்டித் தந்த சிஐஏ, வளைகுடாப் போரில் அமெரிக்காவின் வெற்றிக்கு மிக முக்கியமான பங்களிப்பைச் செய்திருக்கிறது.

இத்தனைக்கும், இப்படி ஒரு நேரடிப் போரின்போது உளவுப் பணியாற்றுவது சிஐஏவுக்குப் புதிய அனுபவம். என்றாலும், நிலைமையைப் பிரமாதமாகச் சமாளித்து நல்ல பெயர் வாங்கினார்கள்.

ஆனால், இதெல்லாம் கொஞ்ச காலத்துக்குதான். வளைகுடாப் போரின் ஞாபகங்கள் மறைந்தபிறகு, மக்கள்

Join / Telegram : @Tamil_Books_Library

மீண்டும் 'சிஐஏ எதற்கு?' என்று கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

'ஐயா மஹாராஜனங்களே, சோவியத் யூனியன் போய்விட்டால், இனிமேல் நமக்கு எதிரிகளே இல்லை என்று அர்த்தமில்லை, நாங்கள் உலகம்முழுவதும் இருக்கிற தீவிரவாத இயக்கங்கள், அவற்றின் செயல்பாடுகளைப்பற்றித் தகவல் திரட்டிக்கொண்டிருக்கிறோம். இதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது, தவிர்ப்பதன்மூலம், அமெரிக்காவுக்கு ஆபத்து எதுவும் வராதபடி பார்த்துக்கொள்கிறோம்' என்றது சிஐஏ.

ஆனால், மக்களுக்கு இதில் நம்பிக்கை வரவில்லை. ஏதோ சில ஒன்றரையணா லெட்டர் பேட் இயக்கங்களைக் கண்காணித்துக்கொண்டு சிஐஏ தனது நேரத்தையும், மக்களின் வரிப்பணத்தையும் வீணாக்குகிறது என்றுதான் பலரும் நினைத்தார்கள்.

நல்லவேளையாக, அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்கு, சிஐஏவின் அவசியமும் தெரிந்திருந்தது, தீவிரவாதத்தைத் தடுத்து நிறுத்துவதன் முக்கியத்துவமும் புரிந்திருந்தது. அதனைச் சரியானவிதத்தில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று விரும்பினார்.

இதனால், சிஐஏவுக்கு உடனடி ஆபத்து எதுவும் வந்துவிடவில்லை. எப்போதும்போல் உலகத்தைச் சுற்றிக் கண்களைப் படரவிட்டுக்கொண்டு காத்திருந்தார்கள்.

என்ன பிரயோஜனம்? அவர்கள் தவிர்க்க நினைத்த அந்தத் 'தீவிரவாதத் தாக்குதல்' கடைசியில் நிகழ்ந்துவிட்டது - சிஐஏவின் மிகப் பெரிய தோல்வி அது!

Join / Telegram : @Tamil_Books_Library

## 12. பத்திரமில்லை

இரண்டாயிரமாவது ஆண்டு பிறக்கப்போகிறது. உலகமெங்கும் மில்லேனியக் கொண்டாட்டங்கள் ஜோராகத் தொடங்கியிருந்த நேரம்.

அப்போது, சிஐஏவிலிருந்து அமெரிக்க அதிபருக்கு ஒரு ரகசியக் கடிதம் வந்தது. வழக்கமான 'ஹேப்பி நியூ இயர்' வாழ்த்து அல்ல. எச்சரிக்கை.

'பல தீவிரவாத இயக்கங்கள், அமெரிக்காவின் முக்கிய இலக்குகளைத் தாக்கத் திட்டமிட்டிருப்பதாக அறிகிறோம். அடுத்த சில மாதங்களுக்குள், அமெரிக்க மண்ணில் ஐந்து முதல் பதினைந்து பெரிய தாக்குதல்கள்வரை நிகழ வாய்ப்புகள் உண்டு. ஜாக்கிரதை!'

அவ்வளவுதான். தலையும் இல்லாமல், வாலும் இல்லாமல், ஏதோ சிஐஏவே அமெரிக்காவை மிரட்டுகிறதுபோல் இப்படி ஒரு குறிப்பு வந்தால், அதிபர் என்ன செய்யமுடியும்?

சரி, ஜாக்கிரதையாக இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அவர் தனது வேலையைப் பார்க்கப் போய்விட்டார். அதற்குமேல் சிஐஏவால் செய்யக்கூடியது எதுவும் இல்லை.

ஒன்று, இரண்டு தாக்குதல்கள் இல்லை, ஐந்திலிருந்து பதினைந்து. ஏதோ தீபாவளிக்குப் பட்டாசு வெடிப்பதுமாதிரி அமெரிக்காமுழுவதும் வரிசையாகத் தாக்குதல்கள் நடக்கப்போகின்றன என்று கணித்திருந்தது சிஐஏ.

ஆனால், யார் இதையெல்லாம் செய்யப்போகிறார்கள் என்பதில்தான் குழப்பம்.

அன்றைய தேதிக்கு, உலகத் தீவிரவாத இயக்கங்கள் அனைத்தைப்பற்றிய புள்ளி விவரங்களை சிஐஏ விரல் நுனியில் வைத்திருந்தது. அவர்கள் அளவுக்கு இந்த ரகசிய

Join / Telegram : @Tamil_Books_Library

இயக்கங்களைப்பற்றித் தெரிந்துகொண்டிருந்தவர்கள் வேறு யாரும் இல்லை.

இதன் அடிப்படையில், அமெரிக்காவின் விரோதிகள் என்று சிலரை வட்டம் போட்டிருந்தார்கள். அவர்களைப்பற்றிய தகவல்கள் அரசுக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டிருந்தன.

அதற்குமேல், இந்த அமைப்புகளைக் கட்டுப்படுத்துகிற, அல்லது ஒழித்துவிடுகிற முயற்சிகளில் சிஐஏ நேரடியாக ஈடுபடமுடியாது. வேண்டுமென்றால், அந்தந்த நாட்டு அரசாங்கம் / ராணுவம் / காவல்துறைக்கு வேண்டிய தகவல்களைக் கொடுத்து உதவலாம்.

சிஐஏ அதைதான் செய்தது. எந்த இயக்கத்தின்மீது லேசான சந்தேகம் எழுந்தாலும்கூட, உடனடியாக அவர்களைப்பற்றிய தகவல்கள் பரிமாறப்பட்டன. எதிர் நடவடிக்கைகளுக்குத் திட்டமிடப்பட்டது. இந்த விஷயத்தில் கொஞ்சம் முன்னெச்சரிக்கையோடு இருந்தால் தப்பே இல்லை.

ஆனால் இத்தனைக்குப்பிறகும், அமெரிக்க மண்ணில், அவர்கள்மீதே தாக்குதல் நிகழ்த்தக்கூடிய இயக்கங்கள் எவை என்று அவர்களால் துல்லியமாகக் கண்டறியமுடியவில்லை. இவர்களாக இருக்கலாம், அவர்களாக இருக்கலாம் என்று குத்துமதிப்பாக ஊகம் செய்யமட்டுமே முடிந்தது.

மற்ற எல்லா நாடுகளையும்விட, அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு ஜாக்கிரதை உணர்ச்சி அதிகம். இந்த மனோபாவம், அவர்களுடைய காவல்துறையில் ஆரம்பித்து ராணுவம், உள் / வெளி விவகாரத்துறைகள், உளவுத்துறை என்று அத்தனையிலும் பிரதிபலிக்கும்.

அப்பேர்ப்பட்ட அமெரிக்காவில், ஏதோ ஒரு தீவிரவாத இயக்கம் சட்டென்று உள்ளே நுழைந்து பட்டாசு வெடித்துவிடமுடியுமா என்ன? இந்த எண்ணம்தான்

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்க அரசாங்கத்தைக் கொஞ்சம் அசட்டையாக இருக்கச் செய்துவிட்டது.

சிஐஏவைப் பொறுத்தவரை, ஏதோ பெரிய தாக்குதல் நடக்கப்போகிறது என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் அதைச் செய்யப்போவது யார் என்பதுதான் சரியாகத் தெரியவில்லை.

உண்மையில், அந்தத் தகவலும் அப்போது அவர்களிடம்தான் இருந்தது. ஆனால் அதைச் சரியாகக் கவனிக்க / துப்பறியத் தவறிவிட்டார்கள்.

1999ம் ஆண்டு, ஜெர்மன் உளவுத்துறை சிஐஏவைத் தொடர்புகொண்டிருந்தது. அப்போது ஜெர்மனியில் வாழ்ந்துகொண்டிருந்த ஒரு தீவிரவாதியின் தொலைபேசி இணைப்பை ஒட்டுக்கேட்டபோது, எதேச்சையாக ஒரு தகவல் அவர்களுக்குச் சிக்கியிருந்தது.

யாரோ அமெரிக்காமீது ஒரு பெரிய தாக்குதல் நிகழ்த்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதை நடத்தப்போகிற குழுவைச் சேர்ந்த ஒரு நபரின் பெயர் மார்வான் (* முழுப் பெயர் Marwan AlShehhi). அவனுடைய தொலைபேசி எண் இது.

மேற்படி தகவல்களை ஒப்படைத்ததும், ஜெர்மன் உளவுத்துறையின் கடமை முடிந்துவிட்டது. அதற்குமேல் எல்லாவற்றையும் சிஐஏ பார்த்துக்கொள்ளும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

சிஐஏ என்ன செய்தது? மார்வான் என்கிற பெயரையும், அந்த ஆளுடைய தொலைபேசி எண்ணையும் குறித்துவைத்துக்கொண்டு, அதோடு விஷயத்தை மறந்துவிட்டார்கள்.

அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. வருடம்முழுவதும் இப்படி ஏகப்பட்ட தீவிரவாதிகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி எண்கள், ஈமெயில் அட்ரஸெல்லாம் அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டுதான்

Join / Telegram : @Tamil_Books_Library

இருக்கிறது. அத்தனையையும் ஒவ்வொன்றாகத் தோண்டித் துருவுவதற்கு நேரம் பிடிக்குமில்லையா?

இதனால்தான், அமெரிக்காமீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த குழுவின் தும்பு கையில் கிடைத்தும்கூட, சிஐஏ 'ஜஸ்ட் லைக் தட்' அதைத் தவறவிட்டது. அது எத்தனை காஸ்ட்லியான பிழை என்பது, அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

மார்வான் தனி நபர் இல்லை. அவனோடு, ஒரு மிகப் பெரிய குழு இருந்தது, வலுவான இயக்கப் பின்னணி இருந்தது. என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொடுக்கவும் வழிநடத்தவும் ஒரு 'தலைவர்' இருந்தார்.

ஒஸாமா பின் லேடன்!

பின் லேடனின் 'அல் காய்தா' (Al Qaeda) இயக்கத்தைப்பற்றியும், அதன் அடிப்படைக் கொள்கைகள், கட்டமைப்பு, போர்ப் பயிற்சி நடவடிக்கைகள், படை பலம், ஆயுத பலம் என்று சகல விஷயங்களையும் சிஐஏவுக்கு அத்துப்படியாகியிருந்தது. 'சந்தர்ப்பம் கிடைத்தால், அமெரிக்காமீது தாக்குதல் நடத்தக்கூடிய அமைப்புகள்' என்று சிஐஏ தயாரித்துவைத்திருந்த ஒரு பட்டியலில், அல் காய்தாவுக்கு ஒரு முக்கியமான இடம் இருந்தது.

ஆனால், இவை எல்லாமே, பொதுவான தகவல்கள்தான். இவற்றைத் தாண்டி, அல் காய்தாவின் அடுத்த திட்டங்கள், அவை செயல்படுத்தப்படவிருக்கும் விதம், இடம், நாள், கிழமை என்பதெல்லாம் சிஐஏவுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஒரு மனிதர் கறுப்பா, சிவப்பா என்று தெரிந்துவைத்திருப்பதற்கும், அவர் இன்று சாயங்காலம் ஆறு மணிக்கு எங்கே இருப்பார், என்ன செய்துகொண்டிருப்பார் என்பதைத் தெரிந்துகொள்வதற்கும் வித்தியாசம் இருக்கிறதில்லையா? அங்கேதான் சிஐஏ தவறிவிட்டது.

Join / Telegram : @Tamil_Books_Library

அல் காய்தாவும், ஒஸாமா பின் லேடனும் அமெரிக்காவுக்கு விரோதமாக ஏதோ செய்யக்கூடும் என்பதுமட்டும் தெரியும். ஆனால், இவர்கள்தான் உள்ளே நுழைந்து தாக்கப்போகிறார்களா என்பது தெரியாது, அப்படியே தாக்கினாலும், எங்கே, எப்போது, எப்படி என்று ஒரு மண்ணாங்கட்டி விவரமும் தெரியாது.

கேட்பதற்கு மடத்தனமாகத் தோன்றுகிறதில்லையா? அதனால்தான், சிஐஏ அமெரிக்க அரசாங்கத்திடம் விவரமாக எதுவும் சொல்லவில்லை. 'ஏதோ தாக்குதல் நடக்கப்போகிறது' என்று பொதுவாகக் குறிப்பிட்டதுடன் நிறுத்திக்கொண்டுவிட்டார்கள்.

இந்த எச்சரிக்கைக்குப்பிறகும், தாக்குதல் முயற்சிகளைத் தடுக்க சிஐஏ தன்னால் முடிந்ததைச் செய்துகொண்டுதான் இருந்தது. ஆனால் இவனா, அவனா, எவன் தாக்கப்போகிறான் என்பது நிச்சயமாகத் தெரியாததால், கவனம் சிதறிவிட்டது.

தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் சிஐஏவுக்குச் சுமார் பதினைந்து ஆண்டுகால அனுபவம் உண்டு. தவிர, உலகம்முழுவதும் அவர்களுடைய உளவு நெட்வொர்க் வலுவாக அமைந்திருந்தது.

இதன்மூலம், பல தீவிரவாத இயக்கங்களைப்பற்றிய தகவல்கள் தொடர்ந்து திரட்டப்பட்டன. நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள். ஏராளமான சதித் திட்டங்கள் முறியடிக்கப்பட்டதாகவும் சொல்கிறது சிஐஏ.

ஆனால் அதே நேரத்தில், அவர்களுடைய கண்ணுக்குச் சிக்காமல் ஒரு மிகப் பெரிய சதி உருவாகிக்கொண்டிருந்தது. அதை நிறைவேற்றப்போகிறவர்கள், அமெரிக்காவிலேயே தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

அல் காய்தா இயக்கத்தினுள்கூட, மிகச் சிலருக்குமட்டும் தெரிந்திருந்த ரகசியத் திட்டம் அது. துளி பிசிறு இல்லாதபடி அதனைக் கச்சிதமாக

உருவாக்கிக்கொண்டிருந்த சூத்திரதாரி, ஒஸாமா பின் லேடன்.

ஒருகாலத்தில், சோவியத் - ஆ்ப்கன் யுத்தத்தின்போது, அமெரிக்கா / சிஐஏ ஆ்ப்கானிஸ்தானுக்கு ஆதரவாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது. அப்போது, அதே ஆ்ப்கானிஸ்தானின் விடுதலைக்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்த எண்ணற்ற ஆர்வலர்களில் ஒஸாமா பின் லேடனும் ஒருவர்.

அப்போது, அமெரிக்கா ஒஸாமாவைத் தீவிரவாதியாக நினைக்கவில்லை. ஆ்ப்கானிஸ்தானிலிருந்து சோவியத் யூனியனை வெளியேற்றுவதற்காகப் பாடுபடும் போராளி என்றுதான் வகைப்படுத்தியிருந்தார்கள். அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தரவும் தயாராக இருந்தார்கள்.

ஆ்ப்கன் யுத்தத்தில், சோவியத் யூனியன் தோல்வியடைந்து வெளியேறியது. இதனை, அமெரிக்கா தனது வெற்றியாகக் குறிப்பிட்டுக்கொண்டது.

இதுவரை, அமெரிக்காவும் பின் லேடனும் ஒரே கட்சியில்தான் இருந்தார்கள். அதன்பிறகுதான், உறவு கசந்து, பிரிவு வந்து, பிறகு அது வெறுப்பாகவும், அழிக்கும் வெறி, ஆவேசமாகவும் மாறிவிட்டது.

பின் லேடனைப் பொறுத்தவரை, ஆ்ப்கானிஸ்தானிலிருந்து சோவியத் யூனியனை வெளியேற்றியது எந்தத் தனி நபர் / நாட்டின் சாதனை அல்ல. பத்து ஆண்டுகளுக்குமேலாக ஏராளமான இளைஞர்கள் தன்னலம் பார்க்காமல் உழைத்து, தங்கள் உயிரைத் தியாகம் செய்து, இதைச் செய்துமுடித்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு புனித யுத்தத்தின் வெற்றியை, அமெரிக்கா தனக்குமட்டும் உரிமையாகக் கொண்டாடுவது பின் லேடனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்காவுக்கும் தனக்கும் ஒத்துவராது என்று தீர்மானித்துவிட்டார்.

இதற்குமுன்பே, பின் லேடனின் அல் காய்தா இயக்கம் தொடங்கப்பட்டுவிட்டது. ஒஸாமாவும் அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், சோவியத் - ஆஃப்கன் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்திருந்தார்கள்.

அல் காய்தா தொடங்கப்படுவதற்குமுன்பிருந்தே, ஒஸாமாவின் படையினருக்கு சிஐஏ ஆயுதங்களும் பயிற்சியும் வழங்கிவந்தார்கள். அதன்பிறகும், பிற ஆஃப்கன் போராளிகளைப்போலவேதான் அல் காய்தாவுக்கும் சிஐஏ உதவிக்கொண்டிருந்தது. மற்றபடி, அவர்களுக்கு எந்த விசேஷ மரியாதையோ கவனமோ கிடையாது.

ஆனால், ஒஸாமா இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டார். ரஷ்யாவின் முக்கிய நகரங்களைத் தாக்குவது எப்படி, சோவியத் அரசில் குழப்பம், கலவரம் உண்டாக்குவது எப்படி என்று விதவிதமாக சிஐஏ கற்றுத்தந்த உத்திகளை, பின்னர் அவர்களுக்கு எதிராகவே பயன்படுத்தத் தீர்மானித்திருந்தார் அவர்.

பின் லேடனின் இந்த உள்நோக்கம், சிஐஏவுக்குத் தெரியவில்லை. அதனால், அமெரிக்காவுக்கும் தெரியவில்லை. அவர்கள் எப்போதும்போல், அல் காய்தாவைப் பத்தோடு பதினொன்றான ஓர் இயக்கமாகதான் கருதிக்கொண்டிருந்தார்கள், ஒஸாமா & கோ சோவியத்தின் விரோதிகள், ஆகவே, நமது நண்பர்கள் என்று கணக்குப் போட்டிருந்தார்கள்.

ஆனால், அப்போது அவர்களுக்குப் புரியாத ஒரு விஷயம், ஒஸாமாவின் கோபம் சோவியத்மீது அல்ல. ஆஃப்கானிஸ்தான் என்கிற இஸ்லாமிய தேசத்தின்மீது அவர்கள் படையெடுத்ததுதான் அவருக்குப் பிடிக்கவில்லை.

Join / Telegram : @Tamil_Books_Library

தீவிரமான மத அடிப்படைவாதக் கொள்கைகளோடு வளர்ந்த ஒஸாமா பின் லேடன், இஸ்லாமுக்கு எதிராக என்ன நடந்தாலும் பொங்கி எழுவார், அதற்காக யாரையும் பகைத்துக்கொள்ளத் தயங்கமாட்டார் என்பதை அமெரிக்கா அறிந்திருக்கவில்லை.

இதனால், அவர்கள் ஒஸாமா இன்னும் நம் கட்சியில்தான் இருக்கிறார் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர், கொஞ்சம்கொஞ்சமாக விலகி, வேறொரு ரகசியப் பாதையில் நடந்துகொண்டிருந்தார்.

ஈராக் அதிபர் சதாம் உசேன், குவைத்தை ஆக்கிரமித்தபோது, சவுதி அரேபியா அவருக்கு எதிரான ஒரு நிலைபாடை எடுத்திருந்தது. இதனால், சதாம் சவுதியையும் தாக்கக்கூடிய அபாயம் உண்டு என்றது சிஐஏ.

பயந்துபோன சவுதி அரசர், அமெரிக்காவின் உதவியைக் கேட்டார். சதாம் உசேன் தோற்கடிக்கப்படும்வரை, அமெரிக்க ராணுவம் சவுதி அரேபியா வந்து பாதுகாப்பு கொடுப்பது என்று ஏற்பாடானது.

சவுதி அரேபியாவில் பிறந்து வளர்ந்த ஒஸாமாவுக்கு இது பிடிக்கவில்லை. நம் ஊரைப் பாதுகாப்பதற்கு அடுத்தவன் எதற்கு? அதுவும், அமெரிக்காவிடம்போய் உதவி கேட்கலாமா? புனிதமான சவுதி மண்ணில் அவர்கள் கால் பதிப்பது அசிங்கமில்லையா?

'சதாம் உசேனை நான் சமாளிக்கிறேன்' என்றார் ஒஸாமா பின் லேடன். நமுட்டுச் சிரிப்போடு, 'அதெல்லாம் சரிப்படாது' என்று சொல்லிவிட்டார் சவுதி அரசர்.

பின் லேடன் நொந்துபோய்விட்டார். தன்னை அரசர் நம்பவில்லை என்பது ஒரு வேதனை. அதைவிட முக்கியமாக, சவுதியைப் பாதுகாக்கிறேன் பேர்வழி என்று அமெரிக்க ராணுவம் இங்கே நுழைந்து என்னவெல்லாம் அட்டகாசங்கள் செய்யப்போகிறதோ என்பது அவருடைய முக்கியமான கவலை.

Join / Telegram : @Tamil_Books_Library

சவுதி அரசர் கேட்டுக்கொண்டபடி, அமெரிக்க ராணுவத்தின் ஒரு பிரிவினர் சவுதி அரேபியாவில் முகாம் இட்டார்கள். துப்பாக்கியும் கையுமாக ஊரைச் சுற்றிவந்தார்கள்.

வளைகுடாப் போரின்போது, சதாமுக்கு அவருடைய சொந்த ஊரிலேயே ஏகப்பட்ட பிரச்னைகள், தலைவலிகள். ஆகவே, இந்த நிலைமையில் அவர் சவுதியை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாக்க முயற்சி செய்யவில்லை.

ஒருவழியாகப் போர் முடிந்தது. சதாம் தோற்கடிக்கப்பட்டுவிட்டார். இனிமேல் அவரால் சவுதி அரேபியாவுக்கு ஆபத்து இல்லை என்றானதும், அமெரிக்க ராணுவம் கிளம்பவேண்டியதுதானே?

பின் லேடன் எதிர்பார்த்ததுபோலவே, அவர்கள் சவுதியை விட்டுப் போகவில்லை. நிரந்தரமாக இங்கேயே கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்கள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டு, சவுதி அரசரும் சும்மா இருக்கிறார்.

ஒஸாமாவுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அமெரிக்காவிடம் வேறு சில உதவிகளை எதிர்பார்த்துதான் சவுதி அரசாங்கம் இப்படி நடந்துகொள்கிறது என்பதைப் புரிந்துகொண்டார் அவர். அந்த விநாடியிலிருந்து, அவர் சவுதி அரசருக்கு எதிராகச் செயல்படத் தீர்மானித்துவிட்டார்.

சவுதி அரசர், அமெரிக்காவின் கூட்டாளி. அப்படியானால், அவருக்கு எதிராகச் செயல்படுகிற பின் லேடன், அமெரிக்காவின் விரோதிதானே?

அவ்வளவுதான். அதுவரை சிஐஏவின் பார்வையில் ஒரு போராளியாகத் தெரிந்துகொண்டிருந்த ஒஸாமா பின் லேடன், இப்போது ஒரு தீவிரவாதியாகத் தோன்ற ஆரம்பித்தார்.

Join / Telegram : @Tamil_Books_Library

பல ஆண்டுகளாகத் தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிஐஏ, அதுவரை அல் காய்தாவைத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ எதையும் செய்ததில்லை. எதற்கும் இருக்கட்டும் என்று அவர்களைப்பற்றிய தகவல்களைமட்டும் திரட்டிக்கொண்டிருந்தார்களேதவிர, அதை அமெரிக்க அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டவோ, உள்ளூர் சவுதி அரசரின் உதவியுடன் அல் காய்தாவை முடக்கவோ முயற்சி செய்யவில்லை.

இப்போது, பின் லேடன் சவுதி அரசாங்கத்துக்கு எதிராகவே ஃபத்வா (மரண தண்டனை) அறிவித்துவிட்டார். அவருடைய அடுத்த குறி, அமெரிக்காவாகதான் இருக்கும் என்று புரிந்துகொண்டது சிஐஏ.

அப்போதிலிருந்து, அல் காய்தாமீது சிஐஏ தனது பார்வையை அழுத்தமாகப் பதித்துவிட்டது. அதைப்பற்றிக் கவலைப்படாமல், அமெரிக்காவுக்கு எதிராகக் காய்களை நகர்த்தத் தொடங்கியிருந்தார் ஒஸாமா.

சவுதிக்கு எதிரான ஃபத்வாவைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்கு எதிராகவும் அல் காய்தா ஒரு ஃபத்வா வெளியிட்டது. இந்தத் தகவலை அறிந்துகொண்ட சிஐஏ, முதன்முறையாக, அமெரிக்க அரசாங்கத்துக்கு ஒஸாமாபற்றிய ஓர் எச்சரிக்கைக் குறிப்பை அனுப்பியது.

அந்த 'முதல் ஃபத்வா'வின்மூலம் அல் காய்தா விடுத்திருந்த மிரட்டல் மிக நேரடியானது - சவுதி அரேபியாவிலிருந்து அமெரிக்கப் படைகள் உடனடியாக வெளியாகவேண்டும். இல்லாவிட்டால், அவர்களைத் தாக்கி வெளியேற்றுவோம்.

இதைப் படித்ததும், அமெரிக்காவுக்குச் சிரிப்புதான் வந்தது. ஊர் பேர் தெரியாமல் மறைந்து செயல்படுகிற ஓர் இயக்கம், நம்முடைய படைகளைத் தாக்கி வெளியேற்றப்போகிறதா? நல்ல கதை!

தவிர, இஸ்லாமிய ஷரியத் சட்டங்களை நன்கு பயின்ற அறிஞர்கள்மட்டும்தான், அந்தச் சட்டங்கள்

Join / Telegram : @Tamil_Books_Library

மீறப்படும்போது ஃபத்வா வெளியிடமுடியும். ஆகவே, ஒஸாமா பின் லேடன் வெளியிட்டிருப்பது ஃபத்வாவே அல்ல, வெறும் பிட் நோட்டீஸ்தான் என்று முடிவுகட்டிவிட்டது அமெரிக்கா.

ஆனாலும், சிஐஏ ஒஸாமாமீதான தனது பார்வையை நகர்த்தவில்லை. அவர் பாகிஸ்தானுக்குச் சென்றதையும், அங்கே பெனசிர் புட்டோ தலைமையிலான அரசு அவருக்குக் கொடுத்த நெருக்கடிகளையும், பிறகு அவர் சூடானுக்குக் குடி பெயர்ந்ததையும் தொடர்ந்து கவனித்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

உலகம்முழுவதும் அல் காய்தாவின் கிளைகள், சகோதர இயக்கங்கள் தோன்ற ஆரம்பித்த காலகட்டம் இது. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஒரு பலம் வாய்ந்த நெட்வொர்க் உருவாக்கிக்கொண்டிருந்தார் பின் லேடன்.

1992 டிசம்பரில், ஏடன் துறைமுகத்தில் வந்திறங்கிய அமெரிக்கப் படை வீரர்கள்மீது, அல் காய்தா வெடிகுண்டுத் தாக்குதல் நிகழ்த்தியது. அதிர்ஷ்டவசமாக, இதில் அமெரிக்கர்கள் யாரும் கொல்லப்படவில்லை.

அடுத்த வருடம், கிட்டத்தட்ட இதேமாதிரியான இன்னொரு தாக்குதலுக்குத் திட்டமிட்டது அல் காய்தா. இந்தமுறை, அமெரிக்க மண்ணிலேயே.

நியூயார்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையத்(WTC - World Trade Center)க் கட்டடங்கள்தான் ஒஸாமாவின் இலக்கு. 1993 பிப்ரவரி 26ம் தேதி, WTC கட்டடங்களின் தரையடித் தளத்தில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது.

ஆனால், இந்தமுறையும், அல் காய்தா எதிர்பார்த்த சேதம் இல்லை. மிகச் சிலர்தான் மரணமடைந்திருந்தார்கள். தவிர, இந்தச் சதியில் ஈடுபட்டவர்களை மிக விரைவில் தேடிப் பிடித்துவிட்டது அமெரிக்கா.

பின்னாள்களில் அல் காய்தா நிகழ்த்திய தாக்குதல்களோடு ஒப்பிடும்போது, இந்த இரண்டு

சம்பவங்களும் மிகச் சாதாரணமானவை. 'படுதோல்வி' என்றுகூடச் சொல்லிவிடலாம்.

ஆனால், இந்தச் சம்பவங்களுக்குப்பிறகுதான், ஒஸாமா பின் லேடனை அலட்சியப்படுத்துவதற்கில்லை என்று புரிந்துகொண்டது அமெரிக்கா. சிஐஏ மேலும் தீவிரமாக அல் காய்தாவைக் கண்காணிக்க ஆரம்பித்தது.

இதற்குள், அல் காய்தாவின் நெட்வொர்க் பலம் பெறத் தொடங்கியிருந்தது. ஒஸாமாவுக்கென்று ஒரு நம்பிக்கைக்குரிய உள்வட்டம் உருவாகியிருந்தது, அங்கேதான் அடுத்த கட்டத் திட்டங்கள் அனைத்தும் தயாராகிக்கொண்டிருந்தன.

சிஐஏவுக்கு, அந்த விவரங்கள் முக்கியம். அல் காய்தா அடுத்து எங்கே, யாரை, எப்படித் தாக்கப்போகிறார்கள் என்று தெரியாதவரை, அவர்களை உளவறிந்து எந்தப் புண்ணியமும் கிடையாது.

இதனால், வழக்கம்போல் அல் காய்தாவினுள் தன்னுடைய உளவாளிகளை ஊடுருவச் செய்ய முயன்றது சிஐஏ. ஏற்கெனவே அந்த இயக்கத்தில் பயிற்சி பெற்றுவரும் சிலரைப் பணம் கொடுத்துத் தங்களுடைய ஒற்றர்களாக மாற்றவும் முயற்சி செய்தார்கள்.

இதில் சிஐஏவுக்கு ஓரளவு வெற்றி கிடைத்தது. ஆனாலும், ஒஸாமாவின் உள்வட்டத்தில் இருக்கிற யாரையும் அவர்களால் வளைக்கமுடியவில்லை.

விளைவு, அல் காய்தாபற்றிய மேலோட்டமான தகவல்கள் சிஐஏவுக்கு எப்போதும்போல் கிடைத்துக்கொண்டிருந்தன. மற்றபடி, நிஜமான தாக்குதல் திட்டங்களைப்பற்றி அவர்களால் தெரிந்துகொள்ளமுடியவில்லை.

அதுதான் பின் லேடனின் சாமர்த்தியம். தாக்குதல்களை வடிவமைத்துத் திட்டமிடுவதில் தொடங்கி, அவற்றை யார், எப்படி நிறைவேற்றவேண்டும் என்கிற நுணுக்கமான

Join / Telegram : @Tamil_Books_Library

தகவல்கள்வரை அனைத்தையும், தேவையான நபர்களிடம்மட்டுமே விவாதிப்பது என்ற பழக்கத்தை உண்டாக்கிக்கொண்டிருந்தார் அவர்.

ஒஸாமாவின் உள்வட்டத்தில்கூட, ஒருவருக்குத் தெரியும் விஷயம் இன்னொருவருக்குத் தெரிந்திருக்காது. எல்லாம் தெரிந்த நபர், அநேகமாக பின் லேடன் ஒருவராகதான் இருப்பார். அவரை நிச்சயம் சிஐஏவால் விலை கொடுத்து வாங்கமுடியாது.

இப்படித் தங்களது ரகசியத் திட்டங்களுக்கு 'எக்ஸ்ட்ரா' பாதுகாப்பு கொடுத்தபிறகு, அல் காய்தாவின் அடுத்த நிலைக் கட்டமைப்பை உறுதிப்படுத்தும் வேலைகளில் இறங்கினார் பின் லேடன். அவருடைய ஆக்ரோஷமான பேச்சுகளைக் கேட்டு, ஏராளமான இளைஞர்கள் அல் காய்தாவில் இணையத் தொடங்கினார்கள்.

அதன்பிறகுதான், அமெரிக்காவுக்கு எதிராகப் பகிரங்கமாகப் பேசத் தொடங்கினார் ஒஸாமா பின் லேடன். 1998ம் ஆண்டு, அல் காய்தா அமெரிக்காவுக்கு எதிரான தனது அடுத்த 'ஃபத்வா'வை வெளியிட்டது.

இந்தமுறை, அவர்களின் ஃபத்வாவைத் துப்பறிந்து சொல்வதற்கு சிஐஏ தேவைப்படவில்லை. 'அமெரிக்கர்களே, ஜாக்கிரதை' என்று வெளிப்படையாகவே அறிக்கை வெளியிட்டுவிட்டது அல் காய்தா.

அமெரிக்கா, கடவுளுக்கு எதிரான தேசம். ஆகவே, அமெரிக்கர்களை எங்கே பார்த்தாலும் கொல்லுங்கள். அதுதான் ஒவ்வொரு முஸ்லீமின் கடமை.

இதைவிட நேரடியான ஒரு மிரட்டல் இருக்கவேமுடியாது. சென்றமுறை அமெரிக்கப் படை வீரர்களைத் தாக்குவோம் என்று அதட்டிய ஒஸாமா, இப்போது அமெரிக்கர்கள் அனைவருக்கும் குறி வைத்துவிட்டார் - ராணுவ வீரர்கள், பொதுஜனங்கள் என்று எல்லோரும் இதில் அடக்கம்.

Join / Telegram : @Tamil_Books_Library

இதென்ன கலாட்டா? அமெரிக்க மக்கள் ஒஸாமாவை என்ன செய்தார்கள்? ஏன் அவர்களைக் கொல்லவேண்டும்?

'அமெரிக்கர்களாகப் பிறந்த எல்லோரும், எங்களுடைய எதிரிகள்தான்' என்றார் ஒஸாமா, அதோடு நிறுத்தாமல், 'அமெரிக்காவுக்கு எதிரான எங்கள் யுத்தம், பல வடிவங்களில் தொடர்ந்து நடக்கும்' என்றும் எச்சரித்தார்.

இது வெறும் மிரட்டலாக நின்றுவிடவில்லை. நிஜமாகவே அல் காய்தாவில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இணைந்துகொண்டிருக்கிறார்கள், வேறு பல இயக்கங்களும் அவர்களோடு கை கோர்த்துக்கொண்டிருக்கிறார்கள், இவர்களில் பலர் வேறு அடையாளங்களோடு அமெரிக்காவினுள் குடியேறியிருப்பதாகத் தகவல்கள் சொல்கின்றன, ரகசியமாக ஆயுதம் தயாரிக்கிறார்கள், வெடிகுண்டு தயாரிக்கிறார்கள், அணுகுண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக்கூட சிஐஏவுக்குத் தகவல் கிடைத்திருந்தது.

அமெரிக்காமீதான பெரிய தாக்குதல்கள், படுகொலைகள் ஆகியவைதான் ஒஸாமாவின் ஒரே நோக்கமாக இருந்தது. இதைத்தவிர வேறு எந்த வழியிலும் அவர்களை வழிக்குக் கொண்டுவரமுடியாது என்று தீர்மானித்துவிட்டார்.

அல் காய்தாவின் அதிவேக வளர்ச்சிபற்றியும், அவர்களுக்கு எங்கிருந்து, யாரிடமிருந்து, எப்படி உதவி கிடைக்கிறது என்பதையும், அவர்கள் எங்கே முகாமிட்டிருக்கிறார்கள், என்னவிதமான பயிற்சி பெறுகிறார்கள் என்றும் சிஐஏ ஓரளவு சரியாகவே தெரிந்துகொண்டிருந்தது. ஆனால், அப்போது ஆஃப்கனில் மறைந்து வாழ்ந்துகொண்டிருந்த பின் லேடனின் அடுத்த இலக்கு என்ன என்பதைமட்டும் அவர்களால் சரியாகக் கண்டறியவேமுடியவில்லை.

போதாக்குறைக்கு, சிஐஏவைக் குழப்புகிற புண்ணிய காரியத்தையும், அல் காய்தா நன்றாகவே செய்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்காமுழுவதும் எங்கெங்கோ, என்னென்னவோ தாக்குதல்கள் நடக்கப்போவதாகச் செய்தி(?)களைக் கசியவிட்டார்கள். விதவிதமான பெயர்கள், தொலைபேசி எண்கள், முகவரிகள் என்று தகவல்கள் வந்து குவிந்தன.

இவற்றில் பெரும்பாலானவை பொய்த் தகவல்கள். அல்லது, கடைசி நேரத்தில் வேண்டுமென்றே மாற்றப்பட்டுவிட்ட தகவல்கள். 9/11 தாக்குதலுக்குப்பிறகு, அதுபற்றி விசாரணை நிகழ்த்திய குழுவினர் 'அல் காய்தாவின் முந்தைய தாக்குதல் முயற்சிகள்பற்றி சிஐஏவுக்கு என்னவெல்லாம் தகவல்கள் கிடைத்திருந்தன?' என்று கேட்டபோது, ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்டுவந்து கொட்டப்பட்டன.

இப்படித் தவறான தகவல்களைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருந்த சிஐஏவுக்கு, ஒருகட்டத்தில் இந்த விளையாட்டு சலித்துப்போயிருக்கவேண்டும். அதன்பிறகு, அவர்களிடம் யாரேனும் வந்து, 'ஒஸாமாவின் ஆள்கள் நாலு விமானங்களைக் கடத்தி, அமெரிக்காவின் முக்கியக் கட்டடங்கள்மீது மோதப்போகிறார்கள்' என்று நேரடியாகச் சொல்லியிருந்தால்கூட, 'கதை நன்றாக இருக்கிறதே, ஹாலிவுட்டுக்கு முயற்சி செய்யுங்கள்' என்றுதான் பதில் வந்திருக்கும்.

ஒஸாமா பின் லேடன் விரும்பியதும் அதைதான். அமெரிக்கா சற்றும் எதிர்பாராத நேரத்தில், அவர்கள் கொஞ்சமும் நினைத்துப்பார்க்காதவிதத்தில் ஒரு தாக்குதல் நிகழ்த்தவேண்டும் என்று திட்டமிட்டிருந்தார் அவர். இதற்காக அவர் தேர்ந்தெடுத்திருந்த நாள், 2001, செப்டம்பர் 11.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாண்டி, 9/11 தாக்குதல் எப்படி நிகழ்ந்தது என்பதற்கும் சிஐஏவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆனால், இப்படி ஒரு தாக்குதல் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைக்கூட அவர்கள் முன்கூட்டியே அறியாமல் விட்டது எப்படி?

Join / Telegram : @Tamil_Books_Library

முதலாவதாக, கட்டடங்களைத் தேடிப் பிடித்து, ரகசியமாகக் குண்டு வைப்பதிலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்று, விமானங்களையே மகா வெடிகுண்டுகளாகப் பயன்படுத்தலாம் என்று சிந்திக்கத் தொடங்கியிருந்தது அல் காய்தா. இப்படிப்பட்ட ஒரு தாக்குதலுக்கு முன்னுதாரணங்களே இல்லை என்பதால், இந்தவிதத்தில் தங்களுடைய இலக்குகள் தாக்கப்படலாம் என்று சிஐஏமட்டுமல்ல, யாராலும் ஊகித்திருக்கமுடியாது.

அடுத்து, ரகசியம் அறிவதில் சிஐஏ கில்லாடி என்றால், ரகசியம் காப்பதில் அல் காய்தா. அமெரிக்காமீது இப்படி ஒரு தாக்குதல் நிகழ்த்தப்போகிறோம் என்கிற செய்தி, அந்த இயக்கத்தின் உள்வட்டத்தில் ஒன்றிரண்டு பேருக்குமட்டுமே தெரிந்திருந்தது.

இவ்வளவு ஏன், நிஜமாகவே விமானங்களைக் கடத்தி, அமெரிக்க இலக்குகளின்மீது மோதுவதற்காகப் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குக்கூட, யார் யார் இந்தத் திட்டத்தில் பங்கு பெறுகிறார்கள் என்கிற விவரம் கடைசி நேரம்வரை சொல்லப்படவில்லை. தாக்குதல் எப்போது என்கிற விஷயமும் பரம ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

கடைசியாக, அமெரிக்காவில் CIA, FBI என இரண்டு உளவு அமைப்புகள் எலியும் பூனையுமாக இருப்பதும் அல் காய்தாவுக்கு வசதியாகிவிட்டது. சிஐஏ, வெளிநாட்டில் அல் காய்தா என்ன செய்கிறது என்பதைமட்டும் கவனித்துக்கொண்டிருந்தது, FBI உள்நாட்டில் நடக்கிறவற்றை உளவு பார்த்துக்கொண்டிருந்தது. இந்த இரண்டுக்கும் நடுவே ஒரு ரோடு போட்டுவிட்டார் ஒஸாமா பின் லேடன்.

அதாவது, அமெரிக்காவுக்கு வெளியில் ஏதேனும் சதி செய்தால், சிஐஏ மோப்பம் பிடித்துவிடும். ஆனால், அமெரிக்காவினுள் நடக்கிற விஷயங்களை அவர்கள் கண்டுகொள்ளமாட்டார்கள். FBI இதற்கு நேரெதிராக, வெளிநாட்டு விவகாரங்களைப்பற்றி அக்கறை காட்டாது.

Join / Telegram : @Tamil_Books_Library

ஆக, வெளியிலிருந்து சிலரை அமெரிக்காவினுள் வரவழைத்தால், இந்த இரண்டு அமைப்புகளுக்கும் தண்ணி காட்டிவிடலாம் என்று தீர்மானித்தது அல் காய்தா. CIA, FBI இடையில் தகவல் பரிமாற்றம் நிகழ்வதற்குள் குண்டு வெடித்துவிடலாம் என்பது அவர்களுடைய திட்டம்.

எல்லாம், பின் லேடன் நினைத்ததுபோலவே நடந்தது. இந்தத் திட்டத்துக்கென பத்தொன்பது இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, தனித்தனியே அமெரிக்காவினுள் அனுப்பிவைத்தார்கள். அவர்களில் சிலர் அங்கேயே விமானம் ஓட்டப் பயிற்சி பெற்றுக்கொண்டார்கள், மற்றவர்கள் தினந்தோறும் உடற்பயிற்சி செய்து உடம்பைத் தேற்றினார்கள்.

இவர்களில் சிலர்மீது, ஏற்கெனவே சிஐஏவின் சந்தேகப் பார்வை விழுந்திருந்தது. அமெரிக்காவுக்கு வெளியே அவர்கள் சுற்றிக்கொண்டிருந்தவரை, ஏதோ சில்மிஷம் செய்யப்போகிறார்கள் என்று கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், இந்த அல் காய்தா இளைஞர்கள், தங்களுக்கு வால் பிடித்துக்கொண்டிருந்த சிஐஏவை மிகத் திறமையாகத் துண்டித்துக்கொண்டு வெளியேறிவிட்டார்கள். அவர்கள் அமெரிக்காவினுள் வந்து சேர்ந்தபிறகு, சிஐஏவுக்கும் அவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றாகிவிட்டது. உள்ளூரிலும், FBI, மற்ற பாதுகாப்பு அமைப்புகள் இவர்களை மோப்பம் பிடிக்கவில்லை.

அதேசமயம், அமெரிக்காவுக்கு வெளியே உளவு பார்த்துக்கொண்டிருந்த சிஐஏவுக்கு, பல தகவல்கள் அரைகுறையாகக் கிடைக்கத் தொடங்கியிருந்தன. அல் காய்தா மற்றும் அதன் சகோதர அமைப்புகள், ஏதோ பெரிய திட்டம் தீட்டியிருக்கிறார்கள், அதுபற்றி சங்கேதமாகப் பேசிக்கொள்கிறார்கள், அதன் வெற்றி மிகப் பெரிய

Join / Telegram : @Tamil_Books_Library

சாதனையாக இருக்கும் என்று புளகாங்கிதம் அடைகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியவந்தது.

இந்தத் தகவல்கள் அனைத்தும், அமெரிக்க அதிபருக்கு சிஐஏ வழங்கும் தினசரி அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. இன்ன தேதியில் இது நடக்கப்போகிறது என்று சொல்லமுடியாவிட்டாலும், அல் காய்தா ஏதோ பெரிதாகச் செய்யப்போகிறார்கள் என்பதை அழுத்தமாகத் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், வழக்கம்போல் அமெரிக்க அரசாங்கம் இதைக் கண்டுகொள்ளவில்லை. அப்போதும் அவர்கள், அல் காய்தா எங்காவது வெளிநாட்டில் அமெரிக்கத் தூதரகத்தின்மீது, அல்லது அமெரிக்காவுக்கு நட்பாக இயங்கும் ஆட்சியாளர்மீது குண்டு வீசுவார்கள் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தார்கள். உள்ளூரில் குண்டு விழும் என்று யாருக்கும் எண்ணத் தோன்றவில்லை.

2001ம் ஆண்டு செப்டம்பர் 11ம் தேதி, அல் காய்தாவின் தாக்குதல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. பத்தொன்பது அல் காய்தா இளைஞர்கள் நான்கு அமெரிக்க விமானங்களைக் கைப்பற்றினார்கள். அவற்றில் இரண்டு, நியூயார்க் WTC இரட்டைக் கோபுரங்களின்மீது மோதின, இன்னொன்று அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் கட்டடத்தைத் தாக்கியது, நான்காவது விமானம்மட்டும் தனது இலக்கை அடையாமல் பென்சில்வேனியாவில் விழுந்து சிதறியது.

அமெரிக்காவை உலுக்கிப்போட்ட தாக்குதல் அது. இத்தனை ஆண்டுகளாக நாங்கள் வல்லரசாக்கும், எங்கள்மீது யார் கை வைக்கத் துணிவார்கள் என்று நெஞ்சு நிமிர்த்திய கர்வத்துக்கு, அன்று பலமான அடி விழுந்தது.

ஒஸாமா எதிர்பார்த்ததும் அதைதான். இதுவரை அல் காய்தா நிகழ்த்திய துண்டு துக்கடாத் தாக்குதல்களெல்லாம் வெறும் டிரைலர்மட்டுமே.

Join / Telegram : @Tamil_Books_Library

இதுதான் அவர் ஆசையோடு கஷ்டப்பட்டு உருவாக்கிய மெயின் பிக்சர். ஒரே காட்சியில் சூப்பர் ஹிட்.

சோகத்தைக் காட்டிலும், அமெரிக்காவுக்கு அதிர்ச்சிதான் அதிகம். 'நாம் பத்திரமாக இருக்கிறோம்' என்கிற அவர்களுடைய நிம்மதி உணர்வு காயப்பட்டிருந்தது. அடுத்து என்ன நடக்குமோ என்கிற பயம் பரவத் தொடங்கியிருந்தது.

மறுநாள், அந்த அதிர்ச்சியும் பாதுகாப்பற்ற உணர்வும், கோபமாக மாறியது, 'வெளியிலிருந்து யாரோ சில இளைஞர்கள் வந்து இப்படி ஒரு மிகப் பெரிய தாக்குதலை வெற்றிகரமாக நிகழ்த்தியிருக்கிறார்கள், அதுவரை உளவுத்துறை என்ன செய்துகொண்டிருந்தது?' என்று பாய்ந்தார்கள்.

உள்ளூரில் நிகழ்ந்த தாக்குதல் என்பதால், முதலில் மாட்டிக்கொண்டது FBIயின் குடுமிதான். தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை அமெரிக்காவினுள் அனுமதித்ததுமுதல், இத்தனை நாள்களாக அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்காணித்துக் கைது செய்யாமல் கோட்டைவிட்டதுவரை அத்தனைக்கும் அவர்கள்மீது கல்லெறியப்பட்டது.

அடுத்து, விமர்சனக் கணைகள் சிஐஏமீது திரும்பின. என்னதான் உள்நாட்டில் நிறைவேற்றப்பட்ட தாக்குதல் என்றாலும், அதற்கான திட்டங்கள் வெளிநாட்டில் தயாரானவைதானே? ஒஸாமா பின் லேடன் இப்படி ஒரு விஷயம் செய்யப்போகிறார் என்று முன்கூட்டியே தெரிந்துகொள்ளாமல் எங்கே போய் பல் குத்திக்கொண்டிருந்தீர்கள்?

இத்தனைக்கும், சிஐஏ இப்படி ஒரு தாக்குதல் நிகழக்கூடும் என்று அமெரிக்க அரசைப் பலமுறை எச்சரித்திருந்தது. அதை அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டு நடவடிக்கை எடுக்காவிட்டால், உளவுத்துறை என்ன செய்யமுடியும்?

Join / Telegram : @Tamil_Books_Library

தவிர, சோவியத் யூனியன் சரிவுக்குப்பிறகு, படிப்படியாக சிஐஏவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுவிட்டன. பல விஷயங்களை அவர்கள் நினைத்தாலும் செய்யமுடியாது என்கிற அளவுக்கு சிஐஏவின் கைகள் கட்டிப்போடப்பட்டுவிட்டதால், அவர்கள் வெறும் தகவல் சேகரிப்பு இயக்கமாகமட்டும் செயல்படுவதைத் தவிர்க்கமுடியவில்லை.

இப்படி ஆயிரம் காரணங்கள் சொன்னாலும், 9/11 தாக்குதலைப்பற்றி முன்கூட்டியே தெரிந்துகொள்ளாதது அமெரிக்க உளவுத்துறையின் மிகப் பெரிய தோல்விதான். அவர்களுடைய இந்தச் சொதப்பலுக்குப்பிறகுதான், மற்ற பாதுகாப்பு நிறுவனங்களின் தவறுகள் வருகின்றன.

இதனால், 9/11 தாக்குதலைத் தொடர்ந்து, அமெரிக்கா தீவிரவாதத்துக்கு எதிரான போரை அறிவித்தது. இதில் அவர்களுக்குப் பின்பலமாக சிஐஏ செயல்படவேண்டியிருந்தது.

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் (* பழைய சிஐஏ இயக்குனர் இல்லை, அவருடைய மகன், இப்போதைய அதிபர்) சிஐஏவின் பட்ஜெட்டை அதிகப்படுத்தினார், கூடுதல் அதிகாரங்களைக் கொடுத்தார்.

9/11 தாக்குதலால், அமெரிக்காவுக்கு எத்தனையோ இழப்புகள் இருக்கலாம். ஆனால் சிஐஏவைப் பொறுத்தவரை, கெட்டதிலும் ஒரு நல்லது, மீண்டும் அமெரிக்கச் சமூகத்தில் அவர்களுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டுவிட்டது.

சிஐஏவுக்கு இனி வானளாவிய அதிகாரங்களைக் கொடுத்தாலும், பல பில்லியன் டாலர்களைச் செலவழித்தாலும்கூட, யாரும் கேள்வி கேட்கப்போவதில்லை. வேறெதையும்விட, நாட்டின், நாட்டு மக்களின் பாதுகாப்பு அதிமுக்கியம், வெளி விவகாரங்களைக் கவனித்து எச்சரிப்பதற்கு ஒரு சக்தி வாய்ந்த உளவுத்துறை அவசியம் என்பதை அமெரிக்கர்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

அதேசமயம், இது கொள்கையளவில் ஏற்பட்ட புரிதல் அல்ல. பயத்தால் வந்த பின்விளைவுமட்டுமே!

Join / Telegram : @Tamil_Books_Library

## 13. உளவுப் பெண்கள்

அந்த அறைமுழுவதும், ஆர்வமுள்ள இளைஞர்கள் நிறைந்திருந்தார்கள். எல்லோரும், சிஐஏவில் பணிபுரிவதற்காக விண்ணப்பித்திருந்தவர்கள். நேர்முகத் தேர்வு, பயிற்சி, அதன்பிறகு உளவுப் பணி என்று ஒவ்வொருவரும் தீவிரக் கனவுகளில் மூழ்கியிருந்தார்கள்.

அன்று காலைமுதல், வரிசையாகப் பல அதிகாரிகள் வந்து, சிஐஏவின் பல்வேறு பிரிவுகளைப்பற்றியும், அவற்றின் செயல்பாடுகளைப்பற்றியும் விரிவாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆவலோடு கவனித்துக்கொண்டிருந்தவர்களுக்கு, திடீரென்று ஒரு சின்ன ஆச்சர்யம்.

அடுத்து பேசுவதற்காக வந்த சிஐஏ அதிகாரி, ஒரு பெண். நிறைமாத கர்ப்பிணி வேறு. கைக்குட்டையால் நெற்றி வியர்வையை லேசாக ஒற்றிக்கொண்டு, தன்னுடைய துறையைப்பற்றிச் சுவாரஸ்யமாக விவரிக்கத் தொடங்கினார் அவர்.

உளவுத்துறையில் ஒரு பெண் அதிகாரியா? அந்த இளைஞர்களுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. ஆரம்பத்தில் அவரை விநோதமாகப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள், அவர் பேசப்பேச, மரியாதையோடு கவனிக்க ஆரம்பித்தார்கள்.

சிஐஏவில்மட்டுமில்லை, உலகம்முழுவதுமே, உளவுத்துறை என்றால், அது ஆண்களின் வேலை என்பதுதான் பொதுவான நம்பிக்கையாக இருக்கிறது. திரைப்படங்களில் வருவதுபோல, ஜம்மென்று ஓவர்கோட், தலைக்குத் தொப்பி அணிந்துகொண்டு, எலக்ட்ரானிக் சாதனங்கள், கைத்துப்பாக்கிகளோடு கிளம்பிப்போகும் உளவாளிகளின் பிம்பத்தில், பெண்களுக்கு இடமே இருப்பதில்லை.

Join / Telegram : @Tamil_Books_Library

உண்மையில், சிஐஏ தொடங்குவதற்குமுன்பிருந்தே, அமெரிக்க உளவுத்துறையில் பெண்களின் பங்களிப்பு இருந்துவந்தது. சிஐஏவின் நிறுவனராக மதிக்கப்படும் டொனொவன், அந்தக் காலத்திலேயே பரந்த மனப்பான்மையோடு சிந்தித்த அதிகாரிகளில் ஒருவர்.

பெண்கள்மட்டுமில்லை, வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த அகதிகள், போர் காரணமாக அநாதைகளாக்கப்பட்டவர்கள் என அன்றைய அமெரிக்க சமூகத்தில் யாரெல்லாம் சிறுபான்மையினராக ஒதுக்கப்பட்டார்களோ, அவர்களுக்கெல்லாம் டொனொவனின் OSS அமைப்பு ஆதரவு அளித்தது.

இதற்குக் காரணம், வெறும் பரிதாப உணர்ச்சி அல்ல. உளவுப் பணி என்பது எல்லோருக்கும் பொதுவானது என நம்பினார் டொனொவன். ஆகவே, யாரை வேண்டுமானாலும் சிறந்த உளவாளிகளாக, ஒற்றர்களாகத் தயார் செய்யமுடியும் என்பது அவருடைய உறுதியான நம்பிக்கை.

இதனால், இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் தொடங்கி, அமெரிக்கா தனது உளவுப் பணிகளுக்குப் பெண்களைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. அதுவும், சும்மா ஆஃபீஸில் உட்கார்ந்து ஃபைல் புரட்டுகிற வேலைகளுக்கு அல்ல, நிஜமான களப்பணிகளுக்கு.

உளவுத்துறையைப் பொறுத்தவரை, களப்பணி என்றால் அதில் இரண்டு வகையான ஊழியர்கள் பயன்படுத்தப்படுவார்கள் - அதிகாரிகள், உளவாளிகள்.

இவர்களில், உளவாளிகள்தான் நிஜமாகவே எதிரி நாடுகளின் உள்வட்டாரங்களில் ஊடுருவி, தகவல்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவருகிறவர்கள். இந்த உளவாளிகளைத் தேர்ந்தெடுத்து வேலைக்குச் சேர்க்கவேண்டியது அதிகாரிகளின் பொறுப்பு.

இந்த அதிகாரிகளை, 'Case Officers' என்று அழைப்பார்கள். பெரும்பாலும் வெளிநாடுகளில் இயங்கும் இவர்களுடைய

Join / Telegram : @Tamil_Books_Library

பணி, மிக முக்கியமானது.

தொடக்கத்தில் OSSலும், பின்னர் சிஐஏவிலும் பணிபுரிந்த பெரும்பாலான பெண்கள், இந்த அதிகாரிப் பொறுப்பைதான் ஏற்றிருந்தார்கள். இவர்கள், மொழி, கலாசாரம், பண்பாடு என்று பலவிதங்களில் மாறுபட்ட புதிய சூழல்களில் இயங்கவேண்டியிருந்தது.

இந்த அதிகாரிகளின் முக்கியமான வேலை, சம்பந்தப்பட்ட வெளிநாட்டுக் குடிமக்களில் யாரெல்லாம் அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயல்படக்கூடியவர்கள் என்று கூர்ந்து கவனிப்பது. யாருக்குப் பணத்தேவை இருக்கும், யாரை எப்படித் தங்களுக்கு ஆதரவாகச் செயல்படத் தூண்டுவது என்றெல்லாம் தொடர்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கும்.

இதற்காக, அவர்கள் சம்பந்தப்பட்ட (வருங்கால) உளவாளிகள் / ஒற்றர்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதும், அவர்களுடன் பேசிப் புரிந்துகொள்வதும் முக்கியம். சம்பந்தப்பட்ட நபர் நிஜமாகவே முக்கியமானவர்தானா, ரகசியத் தகவல்களையெல்லாம் அறிந்துவருகிற திறமை, தைரியம் அவருக்கு இருக்கிறதா, அல்லது சும்மா வாய்ஜாலம் காட்டுகிறாரா என்று துல்லியமாக எடை போட்டு, அதன்பிறகுதான் அவர்களிடம் உளவுப் பொறுப்பை ஒப்படைக்கமுடியும்.

இந்த குணங்கள் அனைத்தும், பெண்களுக்கு அதிகம். இயல்பாகவே ஜாக்கிரதை உணர்ச்சி மிகுந்த பெண்களுக்கு, யாரை நம்பலாம், யாரை நம்பக்கூடாது, எந்தத் தகவல் எவ்வளவு தூரம் உண்மையானது என்றெல்லாம் ஓரளவு சரியாகவே முடிவெடுத்துவிடமுடிகிறது.

இதனால்தான், இரண்டாம் உலகப் போர்க் காலகட்டத்தில், பல பெண் அதிகாரிகள் OSS ஊழியர்களாகச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார்கள். பல அரசியல் காரணங்களால், அவர்களைப்பற்றிய விவரங்கள் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை.

Join / Telegram : @Tamil_Books_Library

OSS கலைக்கப்பட்டு, சிஐஏ உருவானபிறகும், அதில் பல பெண் அதிகாரிகளின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு இருந்தது. ஆனால், இப்போது போர் முடிந்துவிட்டதால், உளவுப் பணிகளில் லேசான சுணக்கம் ஏற்பட்டுவிட்டது.

இதனால், பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் சிஐஏ பெண்கள்தான். உலகப் போர்க் காலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்ட பெண் அதிகாரிகளைக்கூட, அமைதிக் காலத்தில் ஒதுக்கிவைக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய திறமை, சிஐஏவுக்குத் தேவையில்லை என்பதுபோல் நடந்துகொண்டார்கள்.

அதுமட்டுமில்லாமல், 'உளவு பார்ப்பதெல்லாம் ஆண்களின் வேலை' என்கிற ஒரு பேச்சும் சிஐஏ வட்டாரங்களில் கிளம்பிவிட்டது. இதன் விளைவாக, அடுத்த நாற்பது ஆண்டுகளுக்கு, சிஐஏவில் ஆண்களின் ஆதிக்கம்தான் அதிகமாக இருந்தது.

சிஐஏவின் வேலை, அமெரிக்காவில் அல்ல, மற்ற நாடுகளில்தான். இப்படி வெளிநாடுகளுக்குச் சென்று உளவு பார்ப்பதெல்லாம் மிகக் கடினமான வேலை, அதெல்லாம் பெண்களுக்குச் சரிப்படாது என்று அவர்களாக முடிவுகட்டிவிட்டார்கள்.

இதனால், அப்போது சிஐஏவில் பணிபுரிந்துகொண்டிருந்த பெண்கள் எல்லோருக்கும், சாதாரணமான அலுவலக வேலைகள்மட்டுமே ஒதுக்கப்பட்டன. மற்ற முக்கியப் பொறுப்புகள் அனைத்தையும் ஆண்கள் பகிர்ந்துகொண்டார்கள்.

மற்ற துறைகளைப்போலவே, இங்கேயும் பெண்கள் ஒடுக்கப்படுவதைக் கண்டித்துச் சிலர் கிளம்பினார்கள். பெரும்பாலும் ரகசியமாகவே இயங்கும் சிஐஏவில், இதுபோன்ற எதிர்ப்புக் குரல்கள் சுலபமாக அடக்கப்பட்டுவிட்டன.

எனினும், சிஐஏ பெண்கள் நம்பிக்கை இழக்கவில்லை. உளவுப் பணிகளில் பெண்களாலும் சிறப்பாகப்

Join / Telegram : @Tamil_Books_Library

பங்களிக்கமுடியும், களத்தில் இறங்கி வேலை செய்யமுடியும் என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில்தான், இந்த நிலைமை கொஞ்சம்கொஞ்சமாக மாறத் தொடங்கியது. இதற்குக் காரணமாக அமைந்த பல பெண் அதிகாரிகளில் முக்கியமான ஒருவர், ஜேன் வெர்டெஃப்யூல் (Jeanne Vertefeuille).

சிஐஏவின் அடிமட்ட ஊழியர்களில் ஒருவராக இணைந்து, மிகப் பெரிய பதவிகள், பொறுப்புகளுக்கு உயர்ந்தவர் ஜேன். ஆனால், அவரது நடை, உடை, பாவனைகளில் அதற்கான அடையாளமே தெரியாது. அவரைப் பார்க்கிறவர்கள் யாரும், இந்தப் பெண் ஓர் உளவாளியாக இருக்கக்கூடும் என்று நினைக்கக்கூடமாட்டார்கள்.

இந்த அப்பாவித் தோற்றம், ஜேனுக்கு மிகவும் வசதியாக இருந்தது. யாருக்கும் சந்தேகம் எழாதபடி, தன்னுடைய முழு நேரத்தையும், சிஐஏவின் பணிகளுக்காகச் செலவிட்டுக்கொண்டிருந்தார். கடின உழைப்பாளி, பொறுமையும் நிதானமும் கூடுதல் பலங்கள்.

1986ம் ஆண்டு, அவரிடம் ஒரு முக்கியமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது - மாஸ்கோவில் இருக்கும் சிஐஏ உளவாளிகள், ஒற்றர்கள் பலர், தொடர்ந்து காணாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள். இதன் அர்த்தம், சிஐஏவின் ரகசியங்களை, யாரோ சோவியத் யூனியனுக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள், அது யார் என்று கண்டுபிடிக்கவேண்டும்.

அமெரிக்கா - சோவியத் யூனியன் இரண்டுபட்டதில், நடுவில் இருந்த ஒற்றர்களுக்குதான் கொண்டாட்டம். இங்கே நடப்பதை அங்கே சொல்வது, அங்கே நடப்பதை இங்கே சொல்வது என்று பலர், இரண்டு பக்கமும் சம்பாதித்துக்கொண்டிருந்தார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

ஆனால், இந்த விவகாரம், மிகப் பெரியது. இது யாரோ சாதாரண ஒற்றன் செய்யும் திருட்டு வேலையாகத் தெரியவில்லை. பரம ரகசியமாகக் காப்பாற்றப்பட்ட விஷயங்களெல்லாம், சோவியத்துக்குச் சுலபமாகக் கிடைத்திருக்கிறது.

அப்படியானால், 'திருடன் உள்ளேதான் இருக்கிறான்' என்றார் ஜேன். சிஐஏ இதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கியது, அல்லது பயந்தது.

ஆகவே, இந்த விசாரணைக்காக, அவருக்கு ஒரு சிறிய குழுவைதான் கொடுத்தார்கள். அதில், ஜேன் உள்பட மூன்று பெண்கள்.

ஜேன் தலைமையில் செயல்படத் தொடங்கிய இந்தக் குழு, சோவியத் யூனியனுக்கு என்னென்ன தகவல்கள் கசிந்திருக்கிறது என்று ஒரு பட்டியல் போட்டார்கள். அந்த ரகசியத் தகவல்கள் சிஐஏவில் யாருக்கெல்லாம் தெரியும் என்று இன்னொரு பட்டியல் தயாரித்தார்கள். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு தங்களுடைய விசாரணைகளை ஆரம்பித்தார்கள்.

வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவதுபோல்தான். ஆனாலும், ஜேன் சலித்துக்கொள்ளவில்லை. தன்னுடைய குழுவினரைத் தொடர்ந்து உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார். எங்காவது ஒரு துப்புக் கிடைத்துவிடாதா என்று கோப்புகளிலும் கம்ப்யூட்டரிலும் தேடல் தொடர்ந்தது.

இப்படிக் கிட்டத்தட்ட இரண்டரை வருடம் போராடியபிறகு, அவர்களுக்கு ஒரு துப்புக் கிடைத்தது - அல்ட்ரிச் ஆம்ஸ் (Aldrich Ames) என்ற சிஐஏ அதிகாரி, தன்னுடைய வருமானத்தை மீறிச் செலவழிக்கிறார் என்கிற தகவல் சிக்கியது.

இந்தச் சிறிய பொறியை வைத்துக்கொண்டு, விசாரணையைத் துரிதப்படுத்தினார் ஜேன். இதன்மூலம், ஆம்ஸின் வங்கிக் கணக்கில் ஏகப்பட்ட பணம்

Join / Telegram : @Tamil_Books_Library

போடப்பட்டிருப்பது தெரியவந்தது. அவருடைய சம்பளத்துக்கும், அவரது சொத்துகள், மாதந்தோறும் செலவழிக்கிற தொகைக்கும் சம்பந்தமே இல்லை.

இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கிறபோது, அல்ட்ரிச் ஆம்ஸ்தான் நாம் தேடுகிற 'துரோகி' (Mole) என்பது ஜேனுக்குப் புரிந்துவிட்டது. ஆனால், அவரைக் கைது செய்து விசாரிக்கிற அதிகாரம் சிஐஏவுக்கு இல்லை.

ஆகவே, தயங்காமல் FBI அமைப்பை அணுகினார் ஜேன். FBIக்கும் சிஐஏவுக்கும் ஏழாம் பொருத்தம் என்பதைப்பற்றியெல்லாம் அவர் கவலைப்படவில்லை, தப்புச் செய்தவன் தண்டிக்கப்பட்டாகவேண்டும், அதற்காக FBIயுடன் இணைந்து பணியாற்றுவதில் தப்பே இல்லை என்று கருதினார் அவர்.

இதனால், அபூர்வமான CIA - FBI கூட்டணி உருவானது. அல்ட்ரிச் ஆம்ஸைப் பொறி வைத்துப் பிடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள்.

இந்த வழக்கு கிட்டத்தட்ட முடிகிற நேரத்தில், ஜேனுக்கு அறுபது வயது கடந்துவிட்டது. விதிமுறைகளின்படி, அவர் சிஐஏவிலிருந்து ஓய்வு பெற்றாகவேண்டும்.

ஆனால், இந்த விஷயத்தைப் பாதியில் நிறுத்த ஜேன் விரும்பவில்லை. ஒருவேளை அவர் விலகிவிட்டால், நாளைக்கு வேறு யாரேனும் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தப்புச் செய்தவர்களைத் தப்பிக்க விட்டுவிடலாம் என்பது அவருடைய கவலை.

இதனால், ஒப்பந்த அடிப்படையில் சிஐஏவில் தொடர்ந்து பணியாற்றினார் ஜேன். அல்ட்ரிச் ஆம்ஸுக்கும் சோவியத் யூனியன் உளவுத்துறைக்கும் இருந்த தொடர்புகளை ஆதாரத்துடன் நிரூபித்து, அவரைக் கைது செய்தபிறகுதான் ஜேனுக்குத் திருப்தியானது.

அல்ட்ரிச் ஆம்ஸ் சாதாரண ஆசாமி இல்லை. சிஐஏவின் சோவியத் யூனியன் எதிர் உளவு(Counterintelligence)ப்

Join / Telegram : @Tamil_Books_Library

பிரிவுத் தலைவராகவும், வேறு பல முக்கியப் பொறுப்புகளையும் வகித்தவர். இப்படி சிஐஏவின் உயர்பதவியில் உட்கார்ந்துகொண்டு, ஒருவர் சோவியத் ஒற்றராகச் செயல்பட்டிருக்கிறார் என்ற விஷயம், அமெரிக்கர்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி.

சிக்கலான இந்த விவகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, பல ஆண்டுகளாகப் போராடிய ஜேன், கடைசியில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வாங்கிக்கொடுத்தபிறகுதான் சிஐஏவிலிருந்து கம்பீரமாக ஓய்வு பெற்றார்.

இந்தத் தகவலை அறிந்த 'டைம்' (Time) பத்திரிகை, தங்கள் இதழில் ஜேனின் பேட்டியை வெளியிட விரும்பியது. ஆரம்பத்தில் இதை ஏற்க மறுத்த ஜேன், பிறகு ஒப்புக்கொண்டார்.

காரணம், உளவுத்துறை என்பது ஆண்களின் வேலை என்றுதான் பல பெண்கள் உலகெங்கும் தயங்கிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கெல்லாம், இங்கேயும் பெண்களால் சிறப்பாகப் பங்களிக்கமுடியும் என்கிற நம்பிக்கையைத் தர விரும்பினார் ஜேன்.

அவர் நினைத்ததுபோலவே, 'டைம்' இதழில் வெளியான ஜேன் பேட்டிக் கட்டுரை, அமெரிக்கப் பெண்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதுவரை, உளவுத்துறையில் பணிபுரிகிற பெண்கள் எல்லோரும் சும்மா கோப்புகளை நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிய பலர், அதன்பிறகு தங்களுடைய கருத்துகளை மாற்றிக்கொண்டார்கள்.

இதன் விளைவாக, சிஐஏவில் இணைவதற்காக விண்ணப்பிக்கும் இளைஞர்களின் பட்டியலில், பெண்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கத் தொடங்கியது. 1990ம் ஆண்டில் வெறும் ஏழு சதவிகிதமாக இருந்த பெண் உளவாளிகளின் எண்ணிக்கை, அடுத்த ஐந்து வருடங்களுக்குள் இருமடங்காகிவிட்டது.

Join / Telegram : @Tamil_Books_Library

தொண்ணூறுகளின் இறுதியில் தொடங்கி, ஒவ்வோர் ஆண்டும் சிஐஏவில் இணைகிறவர்களில் கிட்டத்தட்ட பாதிக்குப் பாதி பெண்கள்தான். இவர்கள் எல்லோருமே, கஷ்டமான பயிற்சிகளைக் கடந்து, பல நாடுகளில், சிரமமான சூழ்நிலைகளில் பணிபுரிந்தார்கள், பணிபுரிந்துகொண்டிருக்கிறார்கள்.

இதனால், இவர்கள் சந்திக்க நேர்ந்த பிரச்னைகள் நிறைய. 'போயும் போயும் உளவாளியாகவா வேலை பார்க்கிறாய்?' என்று கேலி செய்கிறவர்களில் தொடங்கி, 'அங்கே ஆண்களின் ஆதிக்கம்தானே அதிகம்? நீ போய் என்ன பெரிதாகச் சாதித்துவிடப்போகிறாய்?' என்று நம்பிக்கையைக் குலைக்கிறவர்கள்வரை, உளவுப் பெண்கள் பல தடங்கல்களைக் கடந்துதான் முன்னேறவேண்டியிருந்தது.

அதன்பிறகும், அவர்களுடைய வேலை நிம்மதியாக அமைந்துவிடாது. பெண் என்கிற ஒரே காரணத்துக்காக அவர்களைப் புறக்கணிக்கிறவர்கள், ஒத்துழைக்க மறுக்கிறவர்களின் அவஸ்தை. அதைத் தாண்டி ஒவ்வொரு படி முன்னேறுவதும், முக்கியப் பதவிகள், பொறுப்புகளைப் பெறுவதும் மிகச் சிரமமான காரியம்.

இதுதவிர, வெளிநாடுகளில், குறிப்பாக மத்திய கிழக்கு தேசங்களில் உளவாளிகளாகப் பணிபுரியும் பெண்களுக்குப் பல கூடுதல் அபாயங்கள் காத்திருந்தன. மிரட்டல்கள், பாகுபாடுகள், பாலியல்ரீதியிலான துன்புறுத்தல்கள் என்று பலவற்றையும் சமாளித்துதான் அவர்கள் தங்களுடைய தினசரிக் கடமைகளை நிறைவேற்றவேண்டியிருந்தது.

இதனால், பெண்களுக்கு உளவுத்துறை ஏற்றதல்ல என்கிற பேச்சு மீண்டும் எழுந்திருக்கிறது. சிஐஏவிலிருந்து ராஜினாமா செய்து வெளியேறிய பல பெண் அதிகாரிகளை இதற்கு உதாரணம் காட்டுகிறார்கள்.

ஆனால் அதேசமயம், சிஐஏவிலேயே தொடர்ந்து சிறப்பாகப் பங்களித்து முன்னேறிவரும் பெண்களும்

Join / Telegram : @Tamil_Books_Library

நிறையவே இருக்கிறார்கள். அமெரிக்கப் பெண்கள், இவர்களைதான் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகிறது சிஜஏ.

மற்ற விவகாரங்களைப்போலவே, இதிலும் விவாதங்கள் இப்போதைக்கு ஓய்வதாகத் தெரியவில்லை. சிஜஏவில் பெண்கள் வேண்டுமென்றே ஒதுக்கப்படுகிறார்கள் என்று சிலரும், அதெல்லாம் இப்போது மாறிவிட்டது என்று சிலரும் மாறி மாறி சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சற்றே ஆறுதலான ஒரு புள்ளி விவரம், இத்தனை கலாட்டாக்கள், வம்பு விவகாரங்களுக்கு நடுவிலும், சிஜஏவில் பெண்களின் எண்ணிக்கை, பங்களிப்பு ஒவ்வோர் ஆண்டும் கணிசமாக அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது!

## 14. கண்ணாடி பிம்பம்

ஒருகாலத்தில், உலகின் எந்த மூலையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு கவிழ்ந்தாலும், ஒரு தலைவர் படுகொலை செய்யப்பட்டாலும், திடீரென்று உள்நாட்டுக் கலவரம் மூண்டாலும், உடனடியாக சிஐஏமீதுதான் முதல் சந்தேகப் பார்வை விழும்.

அநாவசியமாக மற்றவர்களின் விஷயத்தில் மூக்கை நுழைப்பதற்காகவே, அமெரிக்கா சிஐஏ என்ற ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறது என்பதுதான் பலருடைய எண்ணம். அதற்கேற்ப, அமெரிக்காவின் 'பெரியண்ணன்' இமேஜை நிலைநிறுத்துவதற்குதான், சிஐஏ பயன்பட்டுக்கொண்டிருந்தது.

இதுபோன்ற ரகசிய நடவடிக்கைகளின்மூலம், சிஐஏ, அமெரிக்காவுக்குக் கிடைத்த நல்ல பெயரைவிட, கெட்ட பெயர்தான் அதிகம். குறிப்பாக, அயல்நாட்டுத் தலைவர்களைக் கொலை செய்யும் சிஐஏவின் நடவடிக்கைகளால், அமெரிக்காவுக்குக் கடும் எதிர்ப்பு, கன்டனம் எழுந்தது.

இதனால், 1976ம் ஆண்டு, அப்போதைய அமெரிக்க அதிபர் ஜெரால்ட் ஃபோர்ட் (Gerald Ford) ஓர் அவசரச் சட்டம் கொண்டுவந்தார். இதன்படி, அமெரிக்க அரசு ஊழியர்கள், அமைப்புகள் யாரும் வெளிநாட்டுத் தலைவர்களைக் கொல்லும் முயற்சிகளில் பங்கேற்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது.

அதன்பிறகு, சர்ச் கமிட்டி விசாரணைகள் வந்தன. சிஐஏவின் நடவடிக்கைகளுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. 1981ம் ஆண்டு அதிபர் ரீகன் வெளியிட்ட இன்னொரு சட்டத்தின்படி, சிஐஏவின் அதிகார வரம்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டன.

அடுத்த இருபது வருடங்களுக்கு, சிஐஏ ஒரு பல் பிடுங்கப்பட்ட பாம்பைப்போலதான் செயல்பட்டுக்கொண்டிருந்தது. 2001ல் நிகழ்ந்த 9/11

Join / Telegram : @Tamil_Books_Library

சம்பவத்துக்குப்பிறகுதான், அவர்கள் பழைய வேகத்தில் மீண்டும் செயல்படமுடிந்தது.

இதனாலேயே, 9/11 சம்பவத்தைத் தொடர்ந்து சிஐஏமீது பல கேள்விக் குறிகள், சந்தேகக் கணைகள் எழுந்தன - இப்படி ஒரு தாக்குதல் நடக்கப்போவது சிஐஏவுக்கு முன்கூட்டியே தெரியுமா? தெரிந்தும் அந்தத் தகவலைச் சொல்லாமல் மறைத்துவிட்டார்களா?

இப்படி ஏதேனும் ஒரு பெரிய அதிர்ச்சிச் சம்பவம் நிகழ்ந்தால்தான், சிஐஏவின் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் திரும்பக் கிடைக்கும் என்பதற்காக, வேண்டுமென்றே 9/11 சம்பவத்தைப்பற்றி மூச்சுக் காட்டாமல் இருந்துவிட்டார்கள் என்று ஒரு தியரி இப்போதும் இருக்கிறது. இதற்கு எந்தவிதமான சாட்சியங்களும் இல்லாவிட்டால்கூட, இது உண்மையாக இருக்கக்கூடும் என்று நம்புகிறவர்கள் நிறைய.

காரணம், 9/11க்குப்பிறகு அமெரிக்க அரசு எடுத்த அத்தனை நடவடிக்கைகளிலும், சிஐஏவின் கணிசமான பங்களிப்பு இருந்தது. குறிப்பாக, 'தீவிரவாதத்துக்கு எதிரான போர்' எனும் அமெரிக்க அரசின் முழக்கத்தைதான், இத்தனை ஆண்டுகளாக சிஐஏ ரகசியமாகச் செய்துகொண்டிருந்தது.

ஆஃப்கானிஸ்தானில் அமெரிக்க ராணுவத்தினர் ஒஸாமா பின் லேடனையும் அவருடைய கூட்டாளிகளையும் தேடியது, பின்னர் ஈராக் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறது என்று குற்றம் சாட்டி அவர்கள்மீது படையெடுத்தது, சதாம் உசேன் தலைமையிலான ஈராக் அரசாங்கம் வீழ்த்தப்பட்டது, பின்னர் அவர் பிடிபட்டுத் தூக்கில் போடப்பட்டது ...

கொஞ்சம் பின்னால் போய், இந்த அத்தியாயத்தின் முதல் பத்தியைப் படித்துப் பாருங்கள் - ஒருகாலத்தில், இதையெல்லாம் சிஐஏ செய்துகொண்டிருந்தது. இப்போது அமெரிக்காவே நேரடியாகச் செய்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம்.

Join / Telegram : @Tamil_Books_Library

ஐந்தாறு வருடங்களுக்குமுன்புவரை, 'உலகத் தீவிரவாதத்தை ஒழிப்போம்' என்பது சிஐஏவின் கொள்கை முழக்கமாகமட்டும் இருந்தது. அப்படிச் செய்யாவிட்டால் என்ன நடக்கக்கூடும் என்கிற சாத்தியங்களை 9/11 சம்பவம் கண்ணுக்குமுன் நிகழ்த்திக் காட்டிவிட்டபிறகு, அமெரிக்காவுக்கு வேறு வழி தெரியவில்லை.

'அல் காய்தா எங்கே மறைந்துகொண்டாலும், அவர்களைத் தேடிப் பிடித்து முழுமையாக ஒழிப்போம், அவர்களுக்கு உதவுகிறவர்களுக்கும் இதே கதிதான்' என்று சூளுரைத்தது அமெரிக்கா, 'அதுமட்டுமில்லை, தீவிரவாதம் எங்கெல்லாம் முளைக்கிறதோ, அங்கெல்லாம் நாங்கள் தோன்றுவோம்' என்று கிருஷ்ண பரமாத்மாபோல் அறிவித்தார்கள்.

இப்படி ஆவேசமாகச் சவால் விட்டபடி அமெரிக்கப் படைகள் ஆஃப்கானிஸ்தான் கிளம்பிச் சென்றது. ஒஸாமா பின் லேடனை உயிரோடு அல்லது பிணமாகப் பிடித்துக்கொண்டு வருவதுதான் அவர்களுடைய ஒரே நோக்கமாக இருந்தது.

கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்குமேலாக ஆஃப்கானிஸ்தானில் இயங்கிவருகிறது சிஐஏ. ஆகவே, அவர்களுடைய உளவாளிகளின் உதவியுடன், அல் காய்தாவின் பயிற்சி முகாம்கள், ஒளிவிடங்களைத் தேடிப் பிடித்துச் சல்லடை போட ஆரம்பித்தார்கள்.

ஆனால், எப்போதாவது இந்தப் பக்கம் தலைகாட்டுகிற சிஐஏ பிரதிநிதிகளைக்காட்டிலும், ஆஃப்கன் நிலப்பரப்பு ஒஸாமா பின் லேடனுக்கு அத்துப்படியாகியிருந்தது. இதனால், அமெரிக்கப் படைகள் என்னதான் முயன்றாலும், அவரையோ, அவரது உள்வட்டத்தில் இருக்கும் முக்கிய அல் காய்தா பிரதிநிதிகளையோ பிடிக்கமுடியவில்லை.

கடைசியில், ஒஸாமாவைப் பிடிக்காமலே ஆஃப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியது அமெரிக்கா. அதன்பிறகும், இன்றுவரை அவர் எங்கே இருக்கிறார்

Join / Telegram : @Tamil_Books_Library

என்று சிஐஏவால் நிச்சயமாகக் கண்டுபிடித்துச் சொல்லமுடியவில்லை.

ஆனால் அதற்காக, தீவிரவாதத்தின்மீதான போரை நிறுத்திவிடமுடியுமா? அமெரிக்காவின் நீண்ட நாள் விரோதிகளில் இன்னொருவரான சதாம் உசேன்மீது பார்வையைத் திருப்பியது சிஐஏ.

அதன்பிறகு, அமெரிக்க அதிபரின் பார்வைக்குச் செல்லும் சிஐஏவின் தினசரி PDB தகவல் குறிப்பில், ஈராக்பற்றிய தகவல்கள் அதிகம் இடம் பெறத் தொடங்கின. ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகத் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டது.

இது சிஐஏ உருவாக்கிய பிம்பமா, அல்லது அமெரிக்க ஆட்சியாளர்களே தாங்களாக உருவாக்கிக்கொண்டதா என்பதைச் சொல்வதற்கில்லை. ஆனால் இப்படிப் பிரித்துப்பார்க்கவே முடியாதபடி, இந்தக் கால்கட்டத்தில், சிஐஏ ஒரு நிழல் அரசாங்கம்போல் அமெரிக்க அரசைக் கட்டுப்படுத்தத் தொடங்கிவிட்டதுதான் உண்மை.

அதன்பிறகு, அமெரிக்கா ஈராக்கினுள் நுழைந்தது. சிஐஏ குறிப்பிட்ட பேரழிவு ஆயுதங்கள் கிடைக்கவில்லை. ஆனால் சதாம் கிடைத்தார், அவருடைய பழைய வழக்குகள் நிறையவே கிடைத்தன. அப்பா புஷ் காலத்தில் தீராத ஒரு கணக்கை, மகன் தீர்த்துக்கொண்டுவிட்டார்.

'அடுத்து எங்கே?' என்பதுதான், இப்போது உலகின்முன் உள்ள கேள்வி. சிஐஏ அந்த திசையில்தான் தனது தகவல்களைச் சேகரித்துக்கொண்டும் தொகுத்துக்கொண்டும் இருக்கும். அவர்களுடைய சமீபத்திய PDBக்களைக் கொஞ்சம எட்டிப்பார்க்க முடிந்தால், இந்தக் கேள்விக்குச் சட்டென்று பதில் சொல்லிவிடலாம்.

9/11 தாக்குதல் நிகழ்ந்து ஆறு வருடங்கள் முடியப்போகிறது. இந்தக் காலகட்டத்தில், அமெரிக்காவின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்தையும்

Join / Telegram : @Tamil_Books_Library

மீறி, உலகத் தீவிரவாதம் இன்னும் வலுவானதாகதான் வளர்ந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, இதே எதிர்ப்பு நடவடிக்கைகளால், அமெரிக்கா தனக்குப் பல புதிய விரோதிகளையும் சேர்த்துக்கொண்டிருக்கிறது. அவர்களை எதிர்க்கும் இயக்கங்கள் ஒவ்வொன்றும், உறுப்பினர் எண்ணிக்கையில்மட்டுமல்ல, தங்களது நெட்வொர்க் பலம், நவீன ஆயுதங்கள், பொருளாதாரப் பின்னணி என அனைத்திலும் மேம்பட்டிருக்கின்றன.

இதனால், அல் காய்தாவோ, அல்லது வேறொரு புதிய அமைப்போ, 9/11போல் அமெரிக்காமீது இன்னொரு தாக்குதலை நடத்துவதற்கான வாய்ப்புகள், முன்பு எப்போதையும்விட அதிகமாக இருக்கிறது.

ஆகவேதான், சிஐஏவின் சரித்திரத்தில் எப்போதும் இல்லாத அளவு அதிக எண்ணிக்கை யிலான உளவாளிகள் உலகைச் சுற்றிவந்துகொண்டிருக்கிறார்கள். யாரும் எதற்காகவும் அமெரிக்காமீது ஒரு சுட்டு விரல் நீட்டிவிடாதபடி இவர்கள் பார்த்துக்கொள்கிறார்கள்.

அதேசமயம், கண்ணாடி பிம்பம்போல், இதன் பிரதிபலிப்பாகச் சத்தமில்லாமல் இன்னொரு மாற்றமும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. சிஐஏ உள்ளிட்ட உளவு அமைப்புகளின் பார்வையிலிருந்து எப்படித் தப்புவது என்பதற்கான புதுப்புது வழிகளை, தீவிரவாத இயக்கங்கள் முனைந்து கண்டறிந்தபடி இருக்கின்றன.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, தங்களுக்கு ஏன் இத்தனை எதிர்ப்பு கிளம்புகிறது என்பதைப்பற்றி அவர்கள் யோசிப்பதாக இல்லை. அந்தக் கேள்விக்கு பதில் தருவது சிஐஏவின் நோக்கமும் இல்லை.

ஆனால் ஒன்று, சிஐஏ இல்லாமல், இனி அமெரிக்காவால் வாழமுடியாது. உலகைச் சுற்றித் தங்களின் உளவுக் கண்கள் எந்நேரமும் பார்த்தபடி இருக்கின்றன என்பது

Join / Telegram : @Tamil_Books_Library

நிச்சயமாகத் தெரிந்தால்தான், அவர்களால் நிம்மதியாகத் தூங்கமுடியும்.

***

Join / Telegram : @Tamil_Books_Library

என். சொக்கன் எழுதிய விறுவிறுப்பான உளவுத்துறை வரலாற்று நூல்கள்:

1. CIA: அடாவடிக் கோட்டை
2. மொசாட்
3. FBI
4. KGB: அடி அல்லது அழி

Join / Telegram : @Tamil_Books_Library

## பின்னிணைப்பு: நன்றி & சான்றுகள்

நன்றி: இந்நண்பர்களுக்கு:

- பாஸ்டன் பாலாஜி
- கணேஷ் சந்திரா
- கீதா

நூல்கள்:

- Inside The CIA - Ronald Kessler - Pocket Books - 1994
- The Old Boys: The American Elite And The Origins Of The CIA - Burton Herh - Tree Farm Books - 2002
- The CIA & American Democracy - Rhodri Jeffreys-Jones - Yale University Press - 2003
- டாலர் தேசம் - பா ராகவன் - கிழக்கு பதிப்பகம் - 2004
- May-Day: Eisenhower, Khurushchev and the U-2 Affair - Michael R Beschloss - Harper & Row Publishers - 1986
- The Terrorism Threat and U.S Government Response - James M. Smith, William C. Thomas (Editors) - USAF Institute for National Security Studies / US Air Force Academy - 2001
- CIA Targets Fidel - CIA Inspector Generals / Fabian Escalante Font - Ocean Press - 1996
- ISI: நிழல் அரசின் நிஜ முகம் - பா ராகவன் - கிழக்கு பதிப்பகம் - 2007
- உஷார் உளவாளி - சுதாங்கன் - விகடன் பிரசுரம் - 2007
- 9/11: சூழ்ச்சி, வீழ்ச்சி, மீட்சி - பா ராகவன் - கிழக்கு பதிப்பகம் - 2004
- சிம்ம சொப்பனம் - மருதன் - கிழக்கு பதிப்பகம் - 2006

கட்டுரைகள்:

- The Ames Spy Hunt - David Wise - Time - 1995
- Afghanistan, the CIA, bin Laden, and the Taliban - Phil Gasper - International Socialist Review - 2001
- How the CIA created Osama bin Laden - Norm Dixon - Green Left - 2001

Join / Telegram : @Tamil_Books_Library

- The Largest Covert Operation in CIA History - Chalmers Johnson - Los Angeles Times - 2003
- 638 ways to kill Castro - Duncan Campbell - The Guardian - 2006
- How the CIA Works - Caroline Wilbert - How Stuff Works - 2007

## இணையத் தளங்கள்:

- http://www.cia.gov/
- http://en.wikipedia.org/
- http://hnn.us/articles/1491.html
- http://news.bbc.co.uk/2/hi/americas/3516233.stm
- http://people.howstuffworks.com/cia.htm/printable
- http://www.boston.com/news/nation/washington/articles/2004/07/24/cia_official_says_agents_have_infiltrated_al_qaeda
- http://www.fas.org/irp/cia/product/exdir_speech_051596.html
- http://www.greenleft.org.au/2001/465/25199
- http://www.guardian.co.uk/
- http://www.historyhouse.com/in_history/castro/
- http://www.researchchannel.org/prog/displayevent.aspx?rID=3688#
- http://www.thirdworldtraveler.com/Afghanistan/Afghanistan_CIA_Taliban.html
- http://www.time.com/time/printout/0,8816,982964,00.html
- http://www.usatoday.com/news/sept11/2002/06/03/cia-attacks.htm

## பிற

- CIA Deputy Director for Operations Jim Pavitt's Speech @ Duke University Law School Conference - 2002
- Women in CIA - CIA Executive Director Nora Slatkin's Speech @ Chicago Council on Foreign Relations - 1996

Join / Telegram : @Tamil_Books_Library

- Women in the CIA: Problems and Prospects - Former CIA Case Officer Lindsay Morgan Kegley's Speech - University Of Virginia - 2004